# இராமநாதபுரம் மாவட்டம்

GAZETTEER ...
25 NOV ...
MADRAS RECORD OFFICE BUILDING

பஞ்சாண்டின் சாதனைகள்

(1951-56)

முதற் பதிப்பு: ஜனவரி, 1957

விலை அணா 4

108142

சென்னை அரசாங்க செய்தி விளம்பரத்
வெளியீடு

N51
GAZETTEER UNIT
25 NOV 1964
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

# பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| நூல் முகம் | .... | .... | 5 |
| வணிகம் மிகுந்த இராமநாதபுரம் | .... | ... | 11 |
| நீர் பெருக | .... | ... | 17 |
| நிலம் கொழிக்க | ... | .... | 33 |
| தொழில் வளர | .... | ... | 59 |
| அறிவு வளர | ... | .... | 71 |
| நாடு உயர | ... | ... | 83 |
| தாழ்வு நீங்க | ... | ... | 119 |
| அமைதி நிலவ | .... | ... | 137 |
| நலம் சிறக்க | .... | ... | 153 |
| எல்லோரும் கூடி இன்புற்றிருக்க | .... | ... | 165 |
| முன்னேற்றப் பாதையிலே | ... | ... | 181 |

108142

முன்புற அட்டைப் படம்:

**இராமேஸ்வரம் கோபுரத் தோற்றம்**

# நூல் முகம்

வானத்திலே வட்டமிட்டுத் திரியும் வண்ணப் பறவைகளும் காட்டிலே கவலையற்று வாழும் விலங்குகளும், "நாளை என்ன?" என்பதையே நினையாது வாழ்பவை. இன்று என்ன? என்பது தான் அவைகளின் முதல் எண்ணம். ஆனால் மனிதன் அவ்வாறு வாழ முடியாது. அவ்வாறு வாழ நினைப்பதும் அறிவுடைமை யாகாது.

இன்றைய நாளையும், வரப்போகும் நாளையும் எண்ணி அதற்கேற்ப வாழ்வை வகுப்பதில் தான் மனிதனின் உயர்வும், அமைதியும், பண்பும் விளங்குகின்றன. அப்போதுதான் அவன் கழிந்த நாட்களுக்காகக் கழிவிரக்கம் கொள்ளாமல் அமைதியான வாழ்க்கையை வாழமுடியும். இதனை நம்

முன்னோர்கள் நமக்கு நன்கு வலியுறுத்திக் காட்டியுள்ளனர்.

துன்பம் வருவதற்கு முன்னர் அதனை அறிந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாதவனின் வாழ்வு, எரிகின்ற தீயின் முன்னே இடப்பட்ட வைக்கோல் போரைப் போன்று அழிந்து போய் விடும் என்னும் பொருளுடன், வள்ளுவரும்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்,"

என்று கூறியுள்ளார்,

வள்ளுவன் வகுத்த அறநெறியிலே நிகழ் காலத்தையும், வருங் காலத்தையும் எண்ணி, நாடு முழுவதும் நலம் பெறும் வகையில் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் நம் அரசாங்கத்தால் தீட்டப் பெற்றது.

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட இத் திட்டம் 1956-ம் ஆண்டு மார்ச் மாதத்தோடு முடிவடைந்தது. இத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த எல்லாப் பணிகளையும் நாம் குறிப்பிட்டிருந்த கால வரையறைக்கு முன்பே முடித்துவிட்டோம். மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினாலும் அரசாங்க ஊழியர்களின் ஆர்வத்

தாலுமே நாம் இத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் சாதிக்க முடிந்தது.

இத் திட்டத்தின் தொடக்க காலத்தில் நம் மாநிலத்திற்குக் கிடைத்த மொத்தத் தொகை 86·43 கோடி ரூபாயாகும்.

தனித்தனியே ஒவ்வொரு துறைக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆகிய செலவின் விவரத்தைச் சுருக்கமாகக் கீழே காணலாம் :—

## சென்னை மாநிலம்

### முதல் ஐந்தாண்டுத் திட்டம்

(1951 ஏப்ரல் முதல் 1956 மார்ச் முடிய)

ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 86 கோடி.

செலவாகிய தொகை சுமார் ரூ. 84 கோடி.

| துறைகள் | | ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ. | செலவானது (லட்சத்தில்) ரூ. |
|---|---|---|---|
| வேளாண்மை | .... | 902 | 857 |
| கால்நடை வளர்ச்சி. | | 56 | 43 |
| பால் பெருக்கம் | .... | 13 | 16 |
| காடுகள் | ... | 75 | 29 |
| கூட்டுறவு | ... | 17 | 11 |
| மீன் துறை | ... | 49 | 35 |

| துறைகள் | | ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ. | செலவானது (லட்சத்தில்) ரூ. |
|---|---|---|---|
| கிராம வளர்ச்சி | ... | 30 | 77 |
| நீர்ப்பாசனம் | ... | 2,019 | 2,086 |
| மின்சாரம் | ... | 3,081 | 3,068 |
| குடிசைத் தொழில்கள் | ... | 44 | 52 |
| ஏனைய தொழில்கள் | ... | 128 | 113 |
| பாதைகள் | ... | 358 | 297 |
| கல்வி | ... | 494 | 406 |
| மருத்துவம் | ... | 248 | 248 |
| சுகாதாரம் | ... | 518 | 475 |
| மனையிடம் | ... | 190 | 152 |
| பின்தங்கிய வகுப்புக்கள்- | ... | 416 | 440 |
| மொத்தம் | ... | 8,643 | 8,414 |

நீர்ப்பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் மட்டும் நூற்றுக்கு அறுபது ரூபாய் மேனியில் செலவிட்டுள்ளோம். இதன் பயனாய் நாலு லட்சம் ஏக்கருக்கு இப்போது நீர் பாய்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கி அவைகளை ஒளியுடைய ஊர்களாக்கி உள்ளோம். மற்ற மாநில அரசாங்கங்களைவிட இத்

துறையில் நமது சாதனை மிகவும் பெருமைப் படக்கூடிய முறையிலே உள்ளது.

முதல் திட்டத்தோடு நம்முடைய லட்சியங்கள் நிறைவெய்தவில்லை நாட்டிலே இன்னும் உணவுக்குறைவும், தொழிலிலே பிற்போக்கும், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவிவருகின்றன. இவை அனைத்தும் நீங்கினால் ஒழிய நாடு நலம் பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. மக்களின் வாழ்வும் மேனிலை எய்தி விட்டதாக அமைதி அடையமுடியாது.

இவை அனைத்தையும் போக்குவதற்குத்தான் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் முடிந்த உடனே, இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது. இத் திட்டத்தால் நாடு பெரும் அளவுக்கு வளமடையும். பெரிய பெரிய தொழில்கள் தொடங்கப் பெறும். மக்களின் ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். பஞ்சமும், பிணியும், துன்பமும், துயரமும் அடியோடு ஒழியும்.

இப் பெரும் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற மக்கள் அனைவரும் அரசாங்

கத்துடன் ஒத்துழைப்பார்களாக! அரசாங்கம் வேறு, மக்கள் வேறு என்று யாரும் எண்ணக்கூடாது. மக்களின் நல்வாழ்வே அரசாங்கத்தின் இனிய வாழ்வு. அரசாங்கத்தின் பயனே மக்களின் பயன். மக்களின் அரசாங்கம் தழைக்க மக்கள் அனைவரும் ஒத்துழைப் பார்களாக!

# வணிகம் மிகுந்த இராமநாதபுரம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடியினர் மறவர் பெருமக்கள். அவர்கள் நிறைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டம் 'மறவர் நாடு' என்று வரலாற்றில் மங்காத ஒளியுடன் திகழ்கின்றது.

பார்க்கும் இடமெல்லாம் பச்சை வயல்களும் திரும்பும் திசையெல்லாம் சோலைச் செழுமையும் இராமநாதபுரம் மாவட்டத்தை அணிசெய்யவில்லை. ஆனால் தமிழகத்தின் உயிர்ப் பண்பாகிய வீரமும் ஈகையும் இம் மாவட்டத்து மக்களிடையே ஒன்றிப்போய் உள்ளமையை இன்றும் காணலாம்.

கன்னல் தமிழை அன்னையைக் காட்டிலும் சாலப் பரிந்து வளர்த்த காவலர்கள் இராமநாதபுரம் 'சேதுபதி' மன்னர்கள். இவர்தம் ஆட்சியிலே அறமும், ஈகையும், வீரமும், உரிமையும் மறவர் நாட்டைத் திக்கெல்லாம் புகழும் திருநாடாக விளங்கச் செய்தன. தெலுங்கு மன்னர்களின் தளையில் கட்டுண்டு கிடந்த மறவர் சீமையை மாற்றாரிடமிருந்து மீட்டு மாநிலம் மெச்சச் செங்கோலோச்சினார் கிழவன் சேதுபதி. மதுரைமீது படையெடுத்துவந்த ருஸ்தம்கான் என்ற முகம்மதியனை முறியடித்து மதுரையைக் காப்பாற்றினார் இப்பெரு மன்னர். அதனால் இவருக்குப் 'பரராஜ கேசரி' என்ற சிறப்புப் பெயர் கிட்டியது.

சேதுபதி மன்னர்கள் அறம் வளர்த்த புரவலர்களாக விளங்கினர். காசியிலிருந்து இராமேஸ்வரத்திற்குப் புனித நீராடுவதற்காகச் செல்லும் வழிப்போக்கர்கள் கள்வர் பயமும், கடும் பசியும் இன்றி அமைதியாகப் பயணம் செய்வதற்கான வசதிகளை இம்மன்னர் செய்து தந்தனர். வழி நெடுக உண்டி அளிக்கும் அறச்சாலைகளைக் கட்டினர். அவைகளைக் குறைவர நடத்துவதற்காகப் பல கிராமங்

களை மானியமாக வழங்கினர். கற்பனை வளமும் கட்டுரை வன்மையும் நிறையப்பெற்ற வித்தகத் தமிழ்ப் புலவர்கள் சேதுபதி மன்னர்களின் நாளோலக்கத்தை அணி செய்து விளங்கினர்.

18-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழகம் பலவகை இன்னல்களுக்கு ஆளாகித் தவித்து வந்தது. உடன் பிறந்தே கொல்லும் நோயைப் போன்ற உள்நாட்டுத்துரோகிகளாலும், அடிமைப் புத்தியுள்ள ஆர்க்காட்டு நவாபுவின் துணையாலும் அந்நிய நாட்டவர் நம் அன்னை நாட்டைச் சூறையாடிக்கொண் டிருந்தனர். இந்த நிலையில் தமிழகத்தின் தவப்பயனாய்த் திருநெல்வேலிச் சீமையில் வீரபாண்டியக் கட்டபொம்மனும், சின்ன மறவர் சீமையாகிய,சிவகங்கை நாட்டில் சின்ன மருதுவும், பெரிய மருதுவும் தோன்றினார்கள். இவர்களது தலைமையின்கீழ் பாண்டிநாடு பொங்கி எழுந்தது. வெள்ளைக் கூட்டமும் அவர்களுக்குப் பல்லைக் காட்டிப் பிழைத்துவந்த அடிமைப் பூச்சிகளும் இவ் வீரர் பெருமக்களைக் கண்டுக் கலக்கமடைந்தன. இந்திய மண்ணில் முதல்முதலாக வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து வீரமுரசு-போர்

முரசு கொட்டிய பெருவீரர் கட்ட பொம்மனும் மருதிருவருமாவர். மருது சகோதரர்களை இன்றும் மறவர் சீமையில் வாழும் மக்கள் தெய்வமாகப் போற்றிவருகின்றனர்.

இவ்வாறு வீரத்தால் புகழ்பெற்ற மருது சகோதரர்கள் அறத்தாலும் மேம்பட்டு விளங்கினர். இவர்களது காலத்தில் சைவமும் வைணவமும் தழைத்திருந்தன. காளையார் கோவில் கோபுரம் மருது இருவரால் கட்டப் பெற்றது. இதனைத் தவிர நரிக்குடி, குன்றக்குடி, திருச்சுழி, ஏரியூர், திருப்பாச்சேத்தி போன்ற பல ஊர்களிலும் இவர்கள் இறைபணி செய்துள்ளனர்.

இவர்கள் காலத்தில் கிறித்துவச் சமயமும் இஸ்லாமியச் சமயமும் இன்னலும் இடையூறும் இன்றிச் செழித்து வளர்ந்தன. மருது சகோதரர்கள் நரிக்குடியில் ஒரு மசூதியையும், சருகணியில் ஒரு மாதா கோயிலையும் கட்டியுள்ளனர். இவைகள் இவர்களது சமயப் பொது நோக்கிற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மற்றுமொரு சிறப்புண்டு. 'திரைகடல்

ஓடியும் திரவியம் தேடு' என்ற ஔவை மூதாட்டியின் அணிமொழிக் கிணங்க சாவகம், சீனம், ஈழம், இந்தோசீனம், பர்மா, சிங்கப்பூர் போன்ற கடல்கடந்த நாடுகளுக்கெல்லாம் சென்று வாணிபம் செய்யும் பெருங்குடி வணிக மக்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இம்மாவட்டைச் சார்ந்தவர்கள் தான். பண்டைக் காலத்திலே கிரேக்க ரோம நாடுகளுடன் வாணிபம் செய்து தண்டமிழ் நாட்டின் சீர்த்தியை எண்டிசையும் பரப்பிய பெருங்குடி வணிகர்களின் வழித் தோன்றல்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் என்று கூறுவர். இவர்களது சலியாத உழைப்பாலும் திறம்பட்ட செயலாலும் இலங்கை, இந்தோசீன, பர்மா போன்ற அயல் நாடுகளில் காடுமேடாய்க் கிடந்த இடம் எல்லாம் இன்று ரப்பர் தோட்டங்களாயும், தேயிலைத் தோட்டங்களாயும், நெல் வயல்களாயும் வளம் கொழிக்கின்றன.

இவ்வாறு பல வகையிலும் சீர் பெற்று விளங்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில், நீர் பெருகி, நிலம் கொழித்து, தொழிலும் அறிவும் வளர்ந்து,நாடு உயர நலம்சிறந்து,தாழ்வு நீங்கி எல்லோரும் கூடி இன்புற்றிருப்

பதற்காக நமது அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளில் சலியாது உழைத்தது. அதன் பயனாய் இம்மாவட்டம் அடைந்துள்ள முன்னேற்றத்தை விரிவாக விளக்குவதே இச் சிறிய நூலின் நோக்கம்.


நீர்...
பெருக!

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே

—கம்பராமாயணம்.

# நீர் . . .
# பெருக!

'பைந்தமிழ்க் கிழவி' என்று எல்லோராலும் பண்டைக் காலத்தில் புகழ்ந்து போற்றப்பட்டவர் ஔவையார். அவர் மன்னர்களை வாழ்த்துகையில் 'வரப்பு உயர!' என்று கூறி வாழ்த்துவார். வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல் கொழிக்கும்; நெல் கொழிக்கக் குடி செழிக்கும்; குடி செழிக்கக் கோன் உயர்வான்' என்பது அப்பெருமாட்டி அவ்விரண்டு சொற்களுக்கு அளித்த விளக்கம்.

ஔவையார் வாழ்ந்த காலத்தில் மாதம் மும்மாரி பெய்ததாகக் கதைகள் கூறுவார்கள். அத்துடன் அன்றைய மக்களின் எண்ணிக்கையும் குறைவு. எனவே நிலத்தின் வரப்பை உயர்த்தி நீரைப் பெருக்கினுல் போதும் என்ற நிலை இருந்தது.

இன்றைய நிலை வேறு. மக்களின் பெருக்கம் முன்னிலும் பல மடங்காகி விட்டது. அப் பெருக்கத்திற்கு இணங்க

விளைச்சலையும் பெருக்கியாக வேண்டும். அத்துடன் இக் காலத்தில் பருவ மழைகள் பொய்த்துவிடுகின்றன. குளிர்ந்த கார்காலமும் கொடிய வேனிலைப்போலக் கொதிக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் ஔவையார் நம்மிடையே இருந்தால் என் செய்வார்? எவ்வாறு நம் அன்னை நாட்டை வாழ்த்துவார்? 'வரப்பு உயர!' என்பதற்கு மாறாக 'அணை எழுக!' என்று கூறி வாழ்த்துவார் அன்றோ!

ஆறுகளில் ஓடும் நீர் யாருக்கும் பயன்படாமல் வீணுகக் கடலில் சேர்ந்துவிடக் கூடாது. ஆற்று நீரை அணை கட்டித் தேக்கி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளித்து விளைச்சலைப் பெருக்க வேண்டும் என்பது நமது அரசாங்கத்தின் நோக்கம்.

நாடு விடுதலை அடைவதற்கு முன் நம்மை ஆண்ட அரசாங்கம் இந்த உண்மையை உணர்ந்திருப்பினும் அணை கட்டுவதில் ஏற்படும் அதிகச் செலவை எண்ணி மலைத்தது. அதனுல் அரசாங்கத்திற்கு லாபம் அதிகம் இல்லையே என்று தயங்கியது. ஆனுல்மக்களின் நலத்தையே பெரிதாகக்கருதும் நமது அரசாங்கம் பதவியேற்றவுடன் அதிகச் செலவையும் குறைந்த லாபத்தையும் கணக்குப் பார்த்துக்கொண்டிராமல் மக்களின் நல்வாழ்வை உருவாக்கும் திட்டங்களை வகுத்து நிறைவேற்றியது. கீழ்பவானி நீர்த்தேக்கத் திட்டம், அமராவதி நீர்த் தேக்கத் திட்டம், பெரியாறு நீர்த் தேக்கத் திட்டம், மணி முத்தாறு நீர்த்தேக்கத் திட்டம், மழம் புழை நீர்த்தேக்கத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம், மேட்டூர் கிழக்குக்கரை, மேற்குக்கரைக் கால்வாய்த் திட்டம் ஆகிய பல திட்டங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்

டன. இவற்ருல் லட்சக்கணக்கான நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி கிடைத்துள்ளது. பன்னூருயிரம் டன் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாவதற்கு வழி ஏற்பட்டுவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வளமான ஆறுகள் இல்லாமையால் இவ்வாறு பெரும் அளவில் அணைக்கட்டுக்களும் நீர்த்தேக்கங்களும் அமைப்பதற்கு இயலாமற் போய் விட்டது. எனினும் பெரியாறு நீர்த்தேக்கத்தால் இம்

வைகை அணைக்கட்டு எழும் கோலக் காட்சி



மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் 7,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது.

முன் குறிப்பிட்டபடி இம் மாவட்டத்தில் வளமான ஆறுகள் பாயாவிடினும் 2600 கண்மாய்கள் இருக்கின்றன.

இக் கண்மாய்களின் மூலமாக 3,10,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறுகின்றது. இக் கண்மாய்கள் பல வானம் பார்த்தவை. பல ஆறுகளிலிருந்து கால்வாய்கள் மூலமாக நீர் பெறக்கூடியவை.

நிலம்கொழிக்க நீர் பெருக்கிக்கொடுக்கும் தொண்டினை மேற்கொண்டுள்ள நமது அரசாங்கம் இக் கண்மாய்களையும் கால்வாய்களையும் பழுதுபார்த்துச் செப்பனிட்டுக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டது. பல திறப்பட்ட திட்டங்களின் கீழ்க் கண்மாய் மராமத்து வேலைகள் நடைபெற்றன.

சிறப்புச் சிறிய நீர்ப்பாசனத் திட்டம் (Special Minor irrigation Programme)

உணவுப் பெருக்கத் துறையினர் (Food Production Department) இத் திட்டத்தை மேற்கொண்டு நடத்தினர். 1954-55ம் ஆண்டில் 9 கண்மாய் மராமத்து வேலைகள் நடைபெற்றன. இவைகளுக்கு ஆகும்செலவு மதிப்பீடு ரூ. 48,192. இம் மராமத்து வேலைகளினால் 411 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது. அதன் பயனாய் ஆண்டிற்கு 207 டன் உணவு மிகுதியாக விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1955-56ம் ஆண்டில் (31-12-56 முடிய) 38 கண்மாய் மராமத்து வேலைகள் நடைபெற்றுள்ளன. அவைகளுக்கான செலவு மதிப்பீடு ரூ. 2,65,934. இம்மராமத்து வேலைகளால்

2616 ஏக்கர் நிலங்கள் பயனடையும். அதன் பயனாய் ஆண்டிற்கு 1,314 டன் உணவு அதிகமாக விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கண்மாய் மேம்பாட்டுத் திட்டம் (Tank Improvement Scheme)**

இத் திட்டத்தையும் உணவுப் பெருக்கத் துறையினர் ஏற்று நடத்தினர். 1951-52ம் ஆண்டில் 3 வேலைகள் முடிவடைந்தன.

1. மேலமடைப் பெரிய குளம் பழுது பார்த்துச் செப்பனிடப்பட்டது. அதற்காக அரசாங்கம் ரூ. 4860 செலவிட்டது. இதனால் 408 ஏக்கர் நிலம் பயனடைந்தது.

2. சிவனேரிக் கண்மாய் மதகு மராமத்து வேலை ரூ. 2769 செலவில் நடைபெற்றது. இதனால் 575 ஏக்கர் நிலம் பயனடைந்துள்ளது.

3. சிவனேரிக் கண்மாய்க்கு 88 அடி நீளமுள்ள கலிங்கு ரூ. 8703 செலவில் கட்டப்பட்டது.

1954-55ம் ஆண்டில் 198 கண்மாய்கள் பழுதுபார்க்கப்பட்டன. அதற்கான செலவு மதிப்பீடு ரூ. 17,18,561. இதனால் 14,417 ஏக்கர் நிலம் பயன் அடைந்தது. அதன் பயனாக 7,457 டன் உணவு மிகுதியாக விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1955-56ம் ஆண்டில் (31-12-55 முடிய) 13 கண்மாய்கள் பழுதுபார்க்கப்பட்டன. இதற்கான செலவு மதிப்பீடு ரூ. 2,71,974, இவற்றால் 1,478 ஏக்கர் நிலம் பயனடைந்துள்ளது. அதன் பயனாக 737 டன் உணவு மிகுதியாக விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றைத் தவிர இவ்வாண்டில் (1955-57) சிறப்புச் சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் 107 வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ் வேலைகளை முடிப்பதற்கு ரூ. 15,28,674 செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. 31-3-56 முடிய அரசாங்கம் இதற்காக ரூ. 9,05,281 செலவிட்டுள்ளது. இப் பணிகளின் முழு விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

அய்யன் சுப்பிரமணியபுரம் என்ற கிராமத்தில் புதிதாக ஒரு கண்மாயை உருவாக்குவதற்கான ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ் வேலையை முடிக்க ரூ. 88,330 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 31-3-56 முடிய இக் கண்மாய் வேலைக்காக அரசாங்கம் ரூ. 9545 செலவிட்டுள்ளது.

இக் கண்மாய் வேலையைத் தவிர ஏனைய வேலைகள் கண்மாய் மராமத்து வேலைகள். அவைகளில் ரூ. 15,000-க்கு மேல் செலவு மதிப்பீடு உள்ள வேலைகளின் விவரம் வருமாறு:

1. பொட்டக வயல் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 19,500. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 15,480.

2. புளியூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 16,000 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 11,474.

3. கொள்வார்ப்பட்டிக் கண்மாயும், கால்வாயும். செலவு மதிப்பீடு ரூ. 1,05,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 9,192.

4. எசலைமடைக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 16,900. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 12,578.

5. கம்மப்பட்டிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 19,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 17,217.

6. நெற்குப்பைக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 15,900. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 12,901.

7. அலப்பெற்றிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 28,500. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 61.

8. கொள்ளகொண்டான் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 16,300. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 44.

9. நள்ளக்குறிச்சிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 18,300. 31-3 56 முடிய ஆன செலவு ரூ. 14,090.

10. நாகர் குளம் கண்மாய் செலவு மதிப்பீடு ரூ. 18,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 143.

11. ரத்தினம் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 27,000 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 14,926.

12. மடவராயன்பட்டிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 18,900. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 17,742.

13. அமராவதிப் புதூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 18,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 15,353.

14. மெருஞ்சூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 17,700. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 10,749.

15. திருப்பக்கோட்டைக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ, 37,100. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 10,200.

16. கரூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 17,682. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 11,735.

17. உரவாயல் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 18,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 11,959.

18. குப்பலூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 33,400. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 7,692.

19. சதசேரிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 19,100. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 17,343.

20. முள்ளிருடிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 19,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 17,497.

21. புதுக்கோட்டைக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 23,500. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 23,622.

22. கீழப்பருத்தியூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 15,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 13,400.

23. அழகாபுரிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ, 18,480 31-3 56 முடிய ஆன செலவு ரூ. 11,492.

24. சிறுகுடிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ, 10,071. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 10,071.

25. கரடாண்டன்குடிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 29,400. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 20,578.

26. மருதங்கநல்லூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 22,300. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 6,324.

27. எருமைப்பட்டிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 25,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 19,236.

28. அபிராமம்மன் கண்மாய், செலவு மதிப்பீடு ரூ. 53,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 25,127.

29. மேலனேரிக் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 16,600. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 13,569.

30. எடையூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 17,320. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 12,415.

31. ராதமூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 30,000. 31-3-56 முடிய ஆன செலவு ரூ. 19,857.

32. முப்பையூர்க் கண்மாய். செலவு மதிப்பீடு ரூ. 15,300.

ஏனைய 75 கண்மாய் வேலைகள் ஒவ்வொன்றிற்கும் ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்குக் குறைந்தது.

இவற்றைத் தவிர இவ் வாண்டில் மேலும் 20 புதிய கண்மாய் மராமத்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

1. காலரிக் கண்மாய்க் கால்வாய் மராமத்து வேலைகள். செலவு மதிப்பீடு ரூ. 4,50,140.

2. சாலிக்கிராமக் கண்மாய்க் கால்வாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 1,35,000.

3. அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள மல்லங்கிணறு முதலிய கிராமங்களுக்குக் கவுண்டன் நதியிலிருந்து நீர்ப்பாசன வசதி அளிக்கும் வேலைகள். செலவு மதிப்பீடு ரூ. 4,05,000.

4. கலயாங்குளம் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 19,000.

5. மானமக்கிக் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ, 8600.

6. செவல்பட்டிக் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 8,815.

7. பீரக்குடிக் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 9,000.

8. தூர்ந்துபோன சித்திரக்கோட்டைக் கண்மாயைச் சீர்ப்படுத்தும் வேலை. செலவு மதிப்பீடு ரூ. 44,000.

9. இரவயாமனலம் கண்மாய் மராமத்து வேலை செலவு மதிப்பீடு ரூ. 3,380.

10. வேலையாத்தூர்க் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 5,460.

11. ஆதங்கல் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 16,120.

12. அழகன்சிங்குடிக் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 16,380.

13. திம்மயலன் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 2,860.

14. பாப்பாங்குளம் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 14,900.

15 காலனூர்க்குளம் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 6,150.

16. புட்டாங்குளம் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 11,340.

17. கமால் கண்மாய் கால்வாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 16,400.

18. திருமங்கலம் கோட்டைக் கண்மாய் மராமத்து வேலை. செலவு மதிப்பீடு ரூ. 17,500

19. கொல்லிகுளம் கண்மாய் மராமத்து வேலை செலவு மதிப்பீடு ரூ. 15,900.

20. பாசார்குடிக் கண்மாய் மராமத்து வேலை செலவு மதிப்பீடு ரூ. 15,700.

ஆக இந்த 20 வேலைகளுக்குமான மொத்தச் செலவு மதிப்பீடு ரூ, 12,21,645. 1-4-1956 லிருந்து அக்டோபர் மாதம் இறுதிவரை இவ் வேலைகளுக்காக அரசாங்கம் ரூ. 1,19,995 செலவிட்டுள்ளது.

## மின்சாரம்

நாகரிகமும் பொருளாதார முன்னேற்றமும் உடைய ஒரு நாட்டிற்கு அடையாளமாக அந்நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவையும், அதனைப் பலவகையில் அது பயன்படுத்தும் அளவையும் கூறலாம். ஏனெனில் மின்சாரம் பலவகை வாழ்க்கை வசதிகளை அளிக்கிறது. பல தொழில்களின் இயக்கத்திற்கே அடிப்படையாக இருக்கிறது.

மின்சார உற்பத்தியில் நமது மாநிலமும் வேறு சில மாநிலங்களும் முன்னணியில் உள்ளன.

1955-56-ம் ஆண்டு இறுதிக்குள் நமது மாநிலம் முன்னைக்காட்டிலும் 65 சதவீதம் அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

நமது நாட்டிலும் மின்சாரத்தை அதிக உற்பத்தி செய்து நமது தொழில், வாழ்க்கைத் துறைகளுக்குப் பயன் படுத்தவேண்டும் என்பதே நமது கொள்கை. அதன்படி நமது அரசாங்கம் அரிய பணிகளை ஆற்றியுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தி மிகவும் பெருகியுள்ளது. திட்ட காலத்திற்கு முன்பு 23 லட்சம் கிலோ வாட்டு மின்சாரம் உற்பத்தியாகியது. திட்டகால இறுதிக்குள் 35 லட்சம் கிலோ வாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்சாரத்தைப் பயன்படுத்துவதிலும் திட்ட காலத்திற்கு முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் தற்பொழுதய நிலை முன்னேறியுள்ளது. முன்பு சராசரி ஆள் ஒன்றிற்கு 14 அலகுகள் (Units) தான் பயன்படுத்தப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு தற்பொழுது ஆள் ஒன்றிற்குச் சராசரி 25 அலகுகள் பயன் படுத்தப்படுகின்றன. இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில் 50 அலகுகள் பயன்படும்படியாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

நகரங்களில் பலவகைத் தொழில்களுக்கும் வாழ்க்கை வசதிகளுக்கும் அடிப்படையாக இருக்கும் மின்சாரத்தை நமது அரசாங்கம் கிராமங்களுக்கும் கொண்டுசென்று புதிய கிராம நல்வாழ்வை உருவாக்கியுள்ளது. இந்தத் துறையில் நமது மாநிலம் ஏனைய இந்திய மாநிலங்களையெல்லாம்விட மிகவும் முன்னேறியுள்ளது. கிராமங்களில் மின்சாரத்தின் உதவியால் நீர் இறைக்கப்பட்டு ஏராளமான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது.

திட்ட காலத்தில் இம்மாவட்டத்தைச்சார்ந்த கீழ்க் கண்ட கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**சாத்தூர் வட்டம்**

புது சூரங்குடி, நடு சூரங்குடி, கண்மாய் சூரங்குடி, துரைசம்புரம், லட்சிமிபுரம், செங்கமாலப்பட்டி, நாரணம் மாள்புரம், ராமலிங்கபுரம், ருக்மாஞ்சி, குமார எட்டையா புரம், அம்மாபட்டி, விஸ்வநாதபுரம், வகைத்தூர்.

**அருப்புக்கோட்டை வட்டம்**

பாலவனத்தம், பள்ளிமடம், கஞ்சநாயக்கன்பட்டி, ஆதிப்பட்டி, கட்டன் கஞ்சநாயக்கன்பட்டி.

**திருப்பத்தூர் வட்டம்**

திருக்கலக்குடி, திருக்கோட்டியூர், சல்லன்பட்டி, வைரவன்பட்டி, தனிப்பட்டி.

**சிவகங்கை வட்டம்**

பிரவலூர், கடனூர், தச்சம்பட்டி.

**ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டம்**

முள்ளிக்குளம், நோச்சிகுளம், பட்டகுளம், நாகபாளையம், வில்லுப்பாளையம், வில்லுப்பனூர், ரெட்டிபட்டி, அட்ரங் குளம், சாமுண்டிக்காசன்குளம், நக்கமங்கலம், சல்லிப் பட்டி, நாரங்குளம், முத்து வெங்கடராயபுரம், பேனல் பட்டி, கண்டராயங்குளம், குப்பிச்சிபட்டி, தேச்சகுடி, திருவேங்கடபுரம், கோடாங்கிப்பட்டி, அச்சாண்ட விளத் தான், அக்கரைப்பட்டி, சிவகரைப்பட்டி, செங்கமாலன் பட்டி, மீனாட்சிபுரம், கீழராஜகுலராமான், வெங்கடாசல புரம், சிவாமிநாதபுரம், தோம்பக்குளம், ராமச்சந்திரபுரம்.


நிலம்...
கொழிக்க!

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

—புறநானூறு 187.

# நிலம் . . .
# கொழிக்க!

---

உழவே நமது நாட்டின் தலைமையான தொழில். நம்மில் பெரும்பான்மையோர் உழுது பயன்கொள்ளும் உழவர் பெருமக்கள். அவர்கள் உழைத்து நல்கும் உணவை நம்பிய உலகம் வாழ்கிறது. அதனால்தான் நமது நாடு உழவுத் தொழிலைப் பெரிதும் போற்றிவந்துள்ளது. கவிதையிலும் காவியத்திலும் அதற்குத் தனி இடம் அளித்துச் சிறப்பித்துள்ளது.

இடைக்காலத்தில் உழவுத்தொழில் வீழ்ச்சி அடைந்தது. அதற்குக் காரணம் பெருகிவரும் மக்கள் எண்ணிக்கைக்கும் வளர்ந்துவரும் வாழ்க்கை நிலைக்கும் இணங்க உழவுத்தொழில் வளர்ச்சி பெறுமையே ஆகும். அதற்கு மற்றுமொரு காரணம் நாட்டை ஆண்ட அந்நிய அரசாங்கம் உழவுத்தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்ற நலனைச் செய்யாமை. மக்கள் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்

கொண்டவுடன் உழவுத்தொழில் வளர்ந்து வளம் பெறுவதற்கான ஆக்கப்பணிகளைச் செய்யத் தொடங்கியது. உணவு நிலையில் பற்றுக்குறை நீங்கி நமது நாடு தன்னிறைவு (Self Sufficiency) பெற்றுத் திகழ்ந்தால்தான் ஏனைய நிலைகளிலும் முன்னேற முடியும் என்பது நமது துணிவு. அதனால் உழவை வளர்த்து உணவைப் பெருக்குவதையே நமது அரசாங்கம் தனது முதற் கடையாகக் கொண்டது. அதன்படி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அதற்கான பணிகளை மேற்கொண்டது.

உழவு வளர்ந்து உணவு பெருகவேண்டுமாயின் பழைய பயனற்ற முறைகளைக் கைவிடவேண்டும். அதிக விளைவையும் குறைந்த முயற்சியையும் உடைய புதிய முறைகளைக் கையாளவேண்டும். இவ்வுண்மைகள் குடியானவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. அத்துடன் அவற்றை நேரடியாக நடத்திக்காட்டச் செயல்முறைச் சான்றுகள் (Demonstrations) செய்து காண்பிக்கப்பட்டன. பொறுக்கு விதைகளும், புதிய உர உப்புக்களும் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. பசுந்தழை உரங்களும், குப்பை உரங்களும் மிகுந்த அளவில் சேமிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. பயிர்களைப் பூச்சிப் பகையிடமிருந்து காப்பாற்ற பூச்சி மருந்துகள் வயல்களில் தெளிக்கப்பட்டன. ஏராளமான வெற்று நிலங்கள் திருத்தப் பெற்றுச் சாகுபடிக்கு ஏற்றவையாகப் பண்படுத்தப்பட்டன. டிராக்டர்களும் புல்டோசர்களும் வாடகைக்கு விடப்பட்டன. ஏராளமான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டது. அதற்காக மாபெரும் அணைகள் மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்டன. கிணறுகள் தோண்டப்பட்டன. வடிமுனைக் கிணறுகளும் (Filter

points), குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன. பம்பு செட்டுகளும் ஆயில் எஞ்சின்களும் வாடகைக்கு விடப் பட்டன. வாடகை முறை விற்பனைக்கும் (Hire purchase) விற்கப்பட்டன. உப்பு உரங்கள், உழவுக் கருவிகள், உழவு மாடுகள், பம்பு செட்டுகள் முதலியன வாங்கவும், கிணறுகள் கட்டவும் குடியானவர்களுக்குக் கடன் உதவி செய்யப்பட்டது. அதனால் உழவர்கள் ஊக்கம் கொண்டு உழைத்தனர். விளைவுப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டு விளைவைப் பெருக்கினர்.

அரசாங்கம் இன்னோரன்ன பணிகளைச் செய்ததால் நமது மாநிலத்தில் முதல் ஐந்து ஆண்டுத்திட்ட காலத்தில் உணவு உற்பத்தி போற்றத்தகுந்த முறையில் பெருகியுள் ளது. எடுத்துக்காட்டாக 1949-50ல் நமது மாநிலத்தில் 71 லட்சம் டன் உணவுப்பொருள் விளைந்தது. ஆனால் 1953-54ல் 88லட்சம்டன் உணவுப்பொருள் விளைந்துள்ளது. (24 சதவீதம் அதிக விளைச்சல்.) உணவுப்பொருள்களின் தரமும் முன்னைக்காட்டிலும் மிகவும் உயர்ந்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் இந்த ஐந்து ஆண்டுகளில் உழவுத்துறையில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அதற்குக்காரணம் இங்கு நடைபெற்ற ஆக்கப்பணிகள் தான். அப்பணிகள் யாவை, எத்திறத்தவை, அவைகள் சாதித்த சாதனைகள் என்ன? என்பவற்றைமேலே சென்று காண்போம்.

## பொலி கூட்டும் பொறுக்கு விதைகள்

விதைக்கப்படும் விதைகள் நயமானவையாக இல்லா விடில் பொலி குறையும். விதைகளின் அளவும் அதிகமாகும்.

பூச்சிகளும் பருவமாறுபாடும் அவைகளைப் பயனற்றவை யாகச் செய்துவிடும். நல்ல பொறுக்கு விதைகளைப் பயன் படுத்துவதால் பொலி பெருகுகிறது. விதைகளும் குறைந்த அளவில் செலவழியும். அப்பொறுக்கு விதைகள் பூச்சிகள், பருவ மாறுபாடு முதலியவற்றிற்கு இலக்காகிக் கெட்டு மக்கிவிடாது. எனவே, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் நல்ல பொறுக்கு விதைகளை விதைக்க வேண்டும். இந்த நோக்கத்துடன் அரசாங்கம் குடியான வர்களுக்குப் பொறுக்கு விதைகளின் திறனையும், அதனால் ஏற்படும் பெரும்பயனையும் வேளாண்மைத் துறையினரின் வாயிலாக எடுத்துச் சொல்லியது. செயல்முறைச் சான்று களாலும் செய்துகாட்டியது. அதன் பயனால் இம்மாவட்டக் குடியானவர்கள் பொறுக்கு விதைகளைப் பயன்படுத்த ஆர்வத்துடன் முன்வந்தனர். அரசாங்கம் அவர்களுக்குப் பொறுக்கு விதைகளைத் தக்க தருணத்தில் வழங்கியது.

ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து (Research Stations) வரும் பொறுக்கு விதைகள் போதுமானவை அல்ல. குடி யானவர்களது தேவைக்கு இணங்கப் பொறுக்கு விதை களைப் பெருக்க வேண்டும். எனவே பொறுக்கு விதைப் பண்ணைகளில் விதைகள் பெருக்கப்பட்டன. அப்பண்ணை கள் குடியானவர்களைச் சார்ந்தவை வேளாண்மைத் துறை அப்பண்ணைகளை மேற்பார்வையிட்டுக் கவனித்து வந்தது.

## நெல்

இம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் (1951-52—1955-56) 2,265 ஏக்கர் நிலங்களில் நெல் பொறுக்கு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. அவைகளில் 111 டன் 1576 பவுண்டு பொறுக்கு விதைகள்

உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தம் 521 டன் 718 பவுண்டு நெல் பொறுக்கு விதைகள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அவைகள் 28,680 ஏக்கர் நிலங்களில் விதைக்கப்பட்டன. அதன்பயனுக் கடந்த ஐந்து ஆண்டு களில் 10,578 டன் 6:0 பவுண்டு நெல் அதிகமாக விளையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**தினை முதலியன**

கடந்த ஐந்து ஆண்டுகளில் 2871-42 ஏக்கர் நிலங் களில் பொறுக்கு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. அவைகளில் 25 டன் 1119 பவுண்டு பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. குடியானவர்களுக்கு 29 டன் 1872½ பவுண்டு விதைகள் வழங்கப்பட்டன. அவைகள் 7716 ஏக்கர் நிலங்களில் விதைக்கப்பட்டன. அதன் பயனுக 6194 டன் தினை முதலிய உணவுப் பொருள்கள் அதிகமாக விளையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**நிலக்கடலை**

கடந்த ஐந்து ஆண்டுகளில் 7 டன் 1044 பவுண்டு நிலக்கடலைப் பொறுக்கு விதைகள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அவைகள் 160-25 ஏக்கர் நிலங்களில் பயன்படுத்தப்பட்டன. அதன் பயனுக 16 டன் 65 பவுண்டு நிலக்கடலை அதிகமாக விளையும் என்று எதிர் பார்க்கப் பட்டது.

**பருத்தி**

இந்த ஐந்து ஆண்டுகளில் 20,888 மணங்குப் பருத்திப் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. 6,00,431 ஏக்கர்

நிலங்களில் அவை விதைக்கப்பட்டன. அதன் பயனாக 544½ பொதி பருத்தி அதிகமாக விளையும் என்று எதிர் பார்க்கப்பட்டது.



பருத்தி வளம்

## பயிர்வளர்க்கும் பசுந்தழை உரம்

"ஆடு நெல்லு காட்டும்; ஆவாரை பயிரு காட்டும்" என்ற பழமொழி நமது கிராமங்களில் நன்கு வழங்கி வருகிறது. ஆட்டு உரம் இட்டால் பொலி மிகுதியாகக் காணும். ஆவாரந்தழையினால் பயிர் நன்றாகச் செழித்து வளரும் என்பது இதன் பொருள். இப் பழமொழி நம் நாட்டுக் குடியானவர் பசுந்தழை உரத்திற் கொண்ட நம்பிக்கையைக் காட்டுகின்றது. எனினும் வெறும் பசுந்தழை உரத்தை நன்கு பயன் படுத்தும் வழக்கம் மறைந்து வரலாயிற்று. அதன் பயனையும் திறனையும் குடியானவர்களுக்கு நினைவுறுத்தி நில வளத்தைப் பெருக்குவதற்கு வேளாண்மைத் துறையினர் பெரிதும் உழைத்தனர். அதன் பயனாக வயல்

வரப் போரங்களிலும், வேலிப் புறங்களிலும் பசுந்தழை உரச் செடிகளான சஸ்பேனியா, கொளிஞ்சி, கிளைரிசிடியா போன்றவை பயிரிடப்பட்டன. அவ்வாறு பயிரிடப் படுவதற்காகக் குடியானவர்களுக்கு அச் செடிகளின் விதைகள் வழங்கப்பட்டன. கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப் பட்ட பலவகைப் பசுந்தழை உரச் செடிகளின் விதைகளின் அளவு 135 டன் 212 பவுண்டு. இவற்ருல் கிடைத்த பசுந் தழை உரம் 46,977 ஏக்கர் நிலத்தில் இடப்பட்டது. அதனுல் ஏற்பட்ட அதிக உணவு உற்பத்தி 1006 டன் 581 பவுண்டு.

பர்மீஸ் செட்டுன் என்ற புதிய கருவியால் பரம்படித்தல்



## குப்பை உரம்

உரமிட்டு நிலத்திற்கு ஊட்டமளித்தால் தான் பொலி பெருகும் என்பதை நமது குடியானவர்கள் உணர்ந்து தான் இருக்கிறார்கள். எனினும் மாட்டுச் சாணம், சிறு நீர் போன்றவைகளின் சிறப்பை உணராமல் அவைகளை நல்ல முறையில் உரமாகச் சேமித்து வைக்கத் தவறினர். வேளாண்மைத் துறையினர் அவைகளை எவ்வாறு சேமித்து வைத்து நல்ல உரமாக ஆக்குவது என்ற முறையைப் பற்றியும், அவற்றின் பயனைப் பற்றியும் குடியானவர்களுக்கு எடுத்துரைத்ததுடன் நேரடியாகவும் செய்து காட்டினர்.

அத்துடன் கட்டுத்துறைகளிலும், வீட்டுப் புறத்திலும், வயற் காடுகளிலும் கழிவு படும் குப்பைகளைக் குழிகளில் சேமித்து வைத்துச் கம்போசிட் முறையில் உரமாக்கும் முறையைப் பற்றியும் வேளாண்மைத் துறையினர் குடியானவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அம் முயற்சியில் குடியானவர்களை ஈடுபடுத்தி ஊக்கமளிக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் 1 டன் குப்பை உரத்திற்கு ஒரு ரூபாய் வீதம் பொருள் உதவி (Subsidy) அளித்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் 1,07,139 டன் பதமிட்ட குப்பை உரம் உற்பத்தி செய்யப்பட்டது. 5740 ஏக்கர் நிலத்தில் அவ்வுரம் இடப்பட்டது. அதன் பயனாக 696 டன் 1120 பவுண்டு உணவுப் பொருள்கள் அதிகமாக விளைந்துள்ளன.

நகரங்களில் கழிவு படும் குப்பை முதலியவற்றையும் பதனிட்டு நல்ல உரமாக ஆக்கலாம். இம் மாவட்டத்தில் உள்ள நகர ஆட்சி மன்றங்களும், பஞ்சாயத்துக்களும் இம் முயற்சியில் ஈடுபட்டன. முதலில் குடியானவர்கள் இவ்



பதனிட்டக் குப்பை உரம் உழவனின் பதுமநிதி

வுரத்தைப் பயன் படுத்துவதற்கு மனம் கூசினர். ஆனல் வேளாண்மைத் துறையினரின் பிரசாரத்தின் பேரில் இப்பொழுது அக் கூச்சம் தெளிந்துவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 9194 டன் நகரக் குப்பை உரம் உற்பத்தி செய்யப்பட்டு 1800 ஏக்கர் நிலங்களில் இடப்பட்டது. அதன் பயனய் 225 டன் உணவுப் பொருள்கள் மிகுதியாக விளைந்தன.

இயற்கை உரத்தைக் காட்டிலும் புதுமை முறைப்படிச் செய்யுப்படும் செயற்கை உப்பு உரம் விரைவில் பயன் அளிக்கக் கூடியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இம் மாவட்டத்தில் 2932 டன் 306 பவுண்டு அமோனியம் சல்பேட்டு உரம் 82,083 ஏக்கர் நிலத்தில் பயன் படுத்தப் பட்டது. அதன் பயனய் 5879 டன் 1520 பவுண்டு உணவுப் பொருள்கள் மிகுதியாக விளைந்துள்ளன. 98 டன் 10:5 பவுண்டு எலும்புத்தூளும் சூப்பர் பாஸ்பேட்டு உரமும் வழங்கப்பட்டு 2,240 ஏக்கர் நிலத்தில் பயன் படுத்தப்

பட்டது. அதன் பயனுய் ஏற்பட்ட மிகுதியான விளைச்சல் 78 டன்.

## ஜப்பானிய முறைச் சாகுபடி

நன்கு பயன்படுத்தப்பட்ட நாற்றங்காலில் நயமான பொறுக்கு விதைகளைக் குறைந்த அளவில் விதைத்தல், பின், வளர்ந்த நாற்றை வயலில் வரிசை வரிசையாக நடுதல், நன்கு உரமிடல், வரிசை வரிசையாகப் பயிரிடப்பட்ட பயிர்களுக்கிடையில் தகுந்த உழவுக் கருவிகளைக்கொண்டு

ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி



களை எடுத்து மண்ணை உடைத்து விடுதல், இன்னோரன்ன பல நிலைகளைக் கொண்டது ஜப்பானிய முறை. இம் முறையினால் விதைகள் அதிகமாக வீணாவதில்லை. ஆனால் விளைச்சலோ மூன்று நான்கு மடங்கு அதிகமாக ஏற்படுகிறது. வேளாண்மைத் துறையினரில் சிலர் ஜப்பானுக்குச் சென்று நேரடியாக இம் முறையினைக் கற்று வந்தனர்.

இம் மாவட்டத்தில் 1952-53-ம் ஆண்டிலிருந்து இம் முறையைக் குடியானவர்கள் கையாண்டு பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரசார வேலைகள் நடைபெற்றன. 1954-55-ம் ஆண்டில் மட்டிலும் 571 வயல்களில் இம்முறை கையாளப்பட்டு அதனால் ஏற்பட்ட பயனைக் குடியானவர்களுக்கு நேரடியாகச் செயல்முறைச் சான்றாகச் செய்து காண்பிக்கப்பட்டது. அதன் பயனாக 5570 ஏக்கர் நிலங்களில் இம்முறையைக் கையாளக் குடியானவர்கள் முன் வந்தார்கள். 1955-56-ம் ஆண்டில் 6855-91 ஏக்கரில் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

## காடுமேடெல்லாம் கழனிகளாயின

பண்படுத்தப்பட்ட நிலங்களில் தீவிரமாக வேளாண்மையை வளப்படுத்துவதுடன் காடுமேடான நிலப்பகுதிகளும் நீர்ப்பாசன வசதியற்ற நிலப்பகுதிகளும் திருத்தப்பட்டன. குறைந்த முயற்சியில் சுருங்கிய காலத்தில் இத் திருப்பணியைச் செய்வதற்கு வெறும் உடல் உழைப்புப் போதாது. எனவே டிராக்டர்களும் புல்டோசர்களும் அப்பணியைச் செய்வதற்கு ஏவப்பட்டன.

இம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 14182 ஏக்கர் நிலத்தை டிராக்டர்கள் பண்படுத்தின. நிலங்களைச்



பொட்டல் வெளி பொன்கொழிக்கும் புலமாகிறது

சமப்படுத்துவதற்காக 9200 மணி நேரம் புல்டோசர்கள் வேலை செய்தன. அதன் பயனாக 3727 டன் உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

நிலவளம் கெட்டு விடாமல் பாதுகாப்பதற்கான பிரசார வேலைகள் நடைபெற்றதன் பயனாக 8515 ஏக்கர் நிலங்களில் நிலவளம் பாதுகாக்கப்பட்டது மண் அரிக்கப் படாமலும் காக்கப்பட்டது.

## நீர்ப்பாசன வசதி

மணற்பாங்கான பகுதியில் கிணறுகள் வெட்டுவது எளிதான செயல் அன்று. ஏராளமான பொருட் செலவும்

காலத்தாழ்வும் ஆகும். அந்தக் குறையை நீக்கி எளிதாகக் கிணற்றுப் பாசன வசதி பெறுவதற்காக வடிமுனைக் குழாய்கள் (Filter Points) நாட்டப்பட்டன.

1953-54-ம் ஆண்டிலிருந்து 1955-56-ம் ஆண்டுவரை 3 ஆண்டுகளுக்கு இம்மாவட்டத்தில் 130 வடிமுனைக் குழாய்களை நாட்டுவது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் வேளாண்மைத் துறையினரின் பிரசாரத்தின் பயனாக ஊக்கமும் ஆர்வமும் கொண்ட இம்மாவட்டக் குடியானவர்கள் 143 வடிமுனைக் குழாய்களை நாட்டியுள்ளனர்.

வடிமுனைக் குழாய்



இதன் பயனாக 1280 டன் உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும் என்று கணக்கிடப்பட்டது.

33 ஆயில் எஞ்சின்கள் குடியானவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டன. 84 மின்சாரப் பம்பு செட்டுகளும், 75 ஆயில் எஞ்சின்களும் வாடகை விற்பனை முறையில் வழங்கப்பட்டன. இவற்றை வாங்கக் குடியானவர்களுக்கு ரூ. 2,83,667-13-0 கடனாகக் கொடுக்கப்பட்டது. இக் கடனைக் குடியானவர்கள ஐந்து ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தந்தால் போதும் என்று அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

இரண்டு குடியானவர்களுக்கு டிராக்டர்கள் வாங்குவதற்காக அரசாங்கம் ரூ. 41,875-5-0 கடனாகக் கொடுத்து உதவியுள்ளது. இவற்றால் 2098 டன் உணவுப் பொருள்கள் அதிகமாக விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பயிர்ப் பாதுகாப்பு

பூச்சி, நோய் ஆகியவை பயிருக்கு முதல் எதிரிகள். அவைகள் பீடித்துவிட்டால் பயிர் முழுதுமே அழிந்துவிடும். இப்பகையிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஜில்லாவட்டக் குடியானவர்களும் அரசாங்கத்தின் தொண்டினை உணர்ந்து பாராட்டினர். திட்ட காலத்தில் 113 டன் 1609 பவுண்டு பூச்சி மருந்துகள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அதன் பயனாய், 1,13,603-50 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிரும் 30,923 மரங்களும் பூச்சிப் பகையிடமிருந்து பாதுகாக்கப்பட்டன. பூச்சி மருந்து வாங்க வரும் ஒவ்வொரு குடியானவருக்கும்

மருந்து தெளிக்கும் 'தெளிப்பான்' (Sprayer) ஒன்று இலவசமாக வழங்கப்பட்டது. **1-4-54** வரை பூச்சி மருந்து பாதி விலைக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிரைப் பூச்சியிடமிருந்து பாதுகாத்ததுடன், விளைந்த உணவுப் பொருள்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. 1955-56-ல் புயல் நிவாரணத்திற்காகச் சேமித்து வைக்கப்பட்ட 9307 மூட்டை அரிசியைப் பூச்சி அரிக்காமல் பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டன.

## தீவிர வேளாண்மை

### தென்னை

தென்னம்பிள்ளைகளைப் பயிரிடுவதற்கான தீவிரப் பிரசார வேலைகள் நடைபெற்றன. திட்ட காலத்தில் 2357 தென்னம்பிள்ளைகள் ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வரவழைக்கப்பட்டுக் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. 1955-56-ல் மட்டிலும் இம்மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிய குடியானவர்களுக்கு 3000 தென்னம்பிள்ளைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

### கரும்பு

இம்மாவட்டத்தில் சிவகங்கை, பரமக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்களில் கரும்பு வேளாண்மை மிகுதியாக நடைபெறுகிறது. அமோனியம் சல்பேட்டு, புண்ணாக்கு முதலியவைகளை நன்கு பயன்படுத்திக் கரும்பு வேளாண்மையை வளர்த்து முன்னேறச் செய்வதற்காக வேளாண்மைத் துறையினர் தீவிரப் பிரசாரம் செய்தனர். குடியானவர்களும் அவ்வறிவுரையை ஏற்றுக்கொண்டு



கழனியெல்லாம் கருப்பங்கொல்லை

பாடுபட்டதால் ஏக்கருக்கு 40 டன் வரையிலும் கரும்பு அதிகமாக விளைந்தது. பல குடியானவர்கள் இயந்திர ஆலை களைப் பயன்படுத்தி வெல்லம் தயாரிக்கின்றனர்.

**நிலக்கடலை**

நிலக்கடலைச் சாகுபடியை அதிகரிக்க 6 டன் 2,052 பவுண்டு பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டு அவை 160-5 ஏக்கர் நிலங்களில் விதைக்கப்பட்டன.

**மிளகாய்**

சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி ஆகிய வட்டங்களில் மிளகாய் வேளாண்மை மிகுதியாக நடைபெறுகிறது. அதனை மேலும் வளர்த்து முன்னேறச் செய்வதற்காக வேளாண்மைத் துறையினர் உப்பு உரத்தையும், புண்ணாக்கையும் நன்கு பயன்படுத்துமாறு குடியானவர்களுக்கு அறிவுரை வழங்கினர். அத்

துடன் பூச்சி நோய் முதலியவைகள் பிடிக்காமல் இருக்கும் பொருட்டு மிளகாய்ச் செடிகளின்மீது மருந்து தெளிக்கப் பட்டது.

## பழ மர வளர்ச்சி

இம்மாவட்டத்தில் பழம் தரும் மரங்களைப் பயிரிட்டு வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் வேளாண்மைத் துறையினர் திவிரப் பிரசாரம் செய்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் 1,195 மாங்கன்றுகளும் 615 ஆரஞ்சுக் கன்று களும், 14 பலாக்கன்றுகளும் 289 முந்திரிக் கன்றுகளும் 29 சப்போட்டாக் கன்றுகளும், 3 கொய்யாக்கன்றுகளும் ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வரவழைக்கப்பட்டுக் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டது. அவற்றை எவ் வாறு வளர்த்துப்பேணுவது என்ற முறைபற்றி வேளாண் மைத்துறையினர் குடியானவர்களுக்கு அறிவுரை கூறினர்.

## சிறப்பு உதவி நடவடிக்கைகள்

கடந்த 1955ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வீசிய புய லாலும், வெள்ளத்தாலும் இம்மாவட்டத்தில் இருந்த பயிர் பச்சைகள் பெரிதும் சேதமுற்றன. அதனால் குடியானவர் களுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. அரசாங்கம் அவர்க ளது இன்னலை நீக்க முயன்றது. உப்பு உரம், பசுந்தழை உரம், பூச்சி மருந்துகள் முதலியன இலவசமாகக் குடியான வர்களுக்கு வழங்கப்பட்டன.

216 டன் 242 பவுண்டு நெல் விதை வழங்கப்பட்டது. அவ்விதை 10,763 ஏக்கர் நிலத்தில் விதைக்கப்பட்டது. 398 டன் 1329 பவுண்டு அமோனியம் சல்பேட்டு வழங்கப் பட்டு 18,625 ஏக்கர் நிலத்தில் பயன்படுத்தப்பட்டது. 13½

பவுண்டு அரைக்கீரை விதைகள் வழங்கப்பட்டு 6-75 ஏக்கர் நிலத்தில் விதைக்கப்பட்டன. 2 டன் 740 பவுண்டு பசுந்தழை உரம் வழங்கப்பட்டு 130 ஏக்கர் நிலத்தில் இடப் பட்டது. 509 பவுண்டு பூச்சி மருந்துகள் 51 ஏக்கர் நிலத் தில் தெளிக்கப்பட்டது. இவைகளையெல்லாம் அரசாங்கம் குடியானவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது.

இவற்றைத் தவிர வெள்ளத்தால் தூர்ந்து மேடாகிப் போன வயல்கள், கண்மாய்கள் முதலியவற்றைச் சீர் செய் வதற்காகப் புல்டோசர்கள் மூன்றில் ஒரு பங்கு வாட கைக்கு விடப்பட்டன. இவ்வாடகைக்காக ஒவ்வொரு குடி யானவருக்கும் ரூ. 200 வரை கடனாகக் கொடுக்கப்பட்டது. 29 குடியானவர்களின் வயல்கள் அவ்வாறு திருத்தப்பெற் றன. கண்மாய் குளங்கள் உடைந்துவிட்டமையால் நீர் இன்றி வாடிய பயிர்களுக்குக் கிணற்றிலிருந்து பாசனம் அளிப்பதற்காக 98 ஆயில் எஞ்சின்கள் பாதி வாடகைக்கு விடப்பட்டன. இவ்வாடகைக்காகவும் ரூ. 200 வரை ஒவ் வொரு குடியானவருக்கும் கடன் கொடுக்கப்பட்டது.

## காய் கறிகள்

காய்கறிகள் நல்ல உணவு. குடியானவர்களுக்கு அவை நல்ல ஊதியத்தையும் அளிக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டு களில் 1370 ஏக்கர் நிலத்தில் பயிரிடுவதற்காக 818 பவுண்டு காய்கறி விதைகள் வழங்கப்பட்டன. அதன் பயனாய் 4080 பவுண்டு காய்கறி மிகுதியாக விளைந்துள்ளது.

## தேனீ வளர்த்தல்

தேனீ வளர்த்தல் ஒரு குடிசைத் தொழில். இதனால் குடியானவர்களுக்கு நல்ல ஊதியமும் கிடைக்கிறது.

எனவே வேளாண்மைத் துறையினர் தேனீ வளர்த்தலைப் பற்றி இங்கு பிரசாரம் செய்ததால் இம்மாவட்டத்தில், குறிப்பாக ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டத்தில் 200 தேனீக் கூடுகளைக் குடியானவர்கள் வைத்துள்ளார்கள்.

## குடியானவர்களுக்குக் கடன் உதவி

பொருள்வளம் இல்லாமையால்தான் குடியானவர்கள் உழவுத் தொழிலை வளர்க்க முடியவில்லை. இதை உணர்ந்த அரசாங்கம் அவர்களுக்குக் கடன் உதவி அளிக்க முன்வந்தது. பொறுக்கு விதைகள், உரம், உழவுக் கருவிகள் முதலியனவற்றை வாங்குவதற்குக் கடன் தொகை வழங்கப்பட்டது. விதை, உரம் வாங்குவதற்காக ரூ 6,85,129ம் உழவுக் கருவிகள் வாங்க ரூ. 4130ம் வழங்கப்பட்டன. தீவிர உரமிடும் திட்டப்படி ரூ. 1,08,200 கடனுதவி வழங்கப்பட்டது.

## மரம் நடு விழா

காட்டு வளம் நாட்டின் அழியாத செல்வம். மரங்கள் மன்னி வளர்ந்திருந்தால் நிலவளம் குன்றாது. பருவ மழை தப்பாது. நாட்டின் பொருளாதார நிலையும் உயரும். எனவே உள்ள மரங்கள் அழிந்து போகாமல் காப்பதுடன் மேலும் மரங்களை வளர்க்க வேண்டும் என்றும் அரசாங்கம் கருதியது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மக்கள் உள்ளத்தில் இந்த எண்ணம் பதிய வேண்டும் என்பதற்காக மரம் நடு விழாக்கள் நடைபெற்றன. இம்மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 9,02,698 மரக் கன்றுகள் நடப்பட்டன. 1969 பவுண்டு விதைகள் வழங்கப்பட்டன.

## உழவர் சங்கங்களும் ஆலோசனைக் குழுக்களும்

குடியானவர்கள் தங்களது உழவுத்தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளைத் தனித்தனியாகச் செய்யாமல் ஒன்று கூடிச் செய்யவும், தங்கள் தேவைகளைப் பலராக ஒன்று சேர்ந்து நிறைவு செய்யவும், பொறுக்கு விதைகள், உரங்கள் போன்றவைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளவும் கிராம உழவர் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்பொழுது இம்மாவட்டத்தில் 1041 கிராம உழவர் சங்கங்கள் உள்ளன.

## உழவு டிப்போக்கள்

பொறுக்கு விதைகள், பூச்சி மருந்து, உரம், உழவுக் கருவிகள் போன்றவற்றை வரவழைத்துச் சேமித்துவைக்கவும், தக்க தருணத்தில் அவைகளைக் குடியானவர்களுக்கு வழங்கவும் உழவு டிப்போக்கள் பணியாற்றி வருகின்றன. திட்ட காலத்திற்கு முன்பு இம்மாவட்டத்தில் 9 டிப்போக்கள்தாம் இருந்தன. திட்டகாலத்தில் மேலும் 5 டிப்போக்கள் திறக்கப்பட்டதால் தற்பொழுது 14 டிப்போக்கள் பணியாற்றி வருகின்றன.

## விளைச்சல் போட்டி

உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அரசாங்கம் கையாளும் முயற்சிகளில் விளைச்சல் போட்டி ஒன்றாகும். இப்போட்டி மனப்பான்மை குடியானவர்களிடையே ஏற்பட்டதால் உணவு உற்பத்தி மிகுந்துள்ளது. இம்மாவட்டத்தில் நடைபெற்ற விளைச்சல் போட்டிகளில் வெற்றி கண்டவர்களது விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1951-52 இந்த ஆண்டில் நடைபெற்ற மாவட்ட விளைச்சல் போட்டியில் 1224 குடியானவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். சாத்தூர் வட்டத்தைச் சார்ந்த திரு. எஸ். துரைசாமித் தேவர் என்பவர் முதற் பரிசு பெற்ருர். இவரது நிலத்தில் ஏக்கருக்கு 8805 பவுண்டு வீதம் நெல் விளைந்துள்ளது.

1952-53 : இந்த ஆண்டில் நடைபெற்ற போட்டியில் 1442 குடியானவர்கள் பங்கு எடுத்துக்கொண்டனர். அருப்புக்கோட்டை வட்டத்தைச் சார்ந்த திரு. ஏ. சங்கரநாராயணத்தேவர் என்பவர் மாநில முதற் பரிசு பெற்ருர். அவரது வயலில் ஏக்கருக்கு 11,225 பவுண்டு வீதம் நெல் விளைந்தது.

1953-54 : இந்த ஆண்டில் நடைபெற்ற போட்டியில் 981 குடியானவர்கள் பங்கெடுத்துக்கொண்டனர். அவர்களில் சிவகாசியைச் சார்ந்த திரு. விஸ்வநாத நாடார் என்பவர் மாவட்ட முதற்பரிசு பெற்ருர். ஏக்கருக்கு 6020 பவுண்டு வீதம் இவரது நிலத்தில் நெல் விளைந்தது.

1954-55 : இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் 1165 பேர் பங்கெடுத்துக்கொண்டனர்.

## கால்நடை வளர்ச்சி

உழவுக்கு உறுதுணையாக இருப்பது கால்நடை. கால்நடைச் செல்வமே உழவனின் பெருநிதியம். அதனுல்தான் நம்மவர்கள் தொன்றுதொட்டுப் பசுவினைத் தெய்வமாக வழிபட்டு வந்தனர் பசு ஈன்ற காளைகள் நிலத்தை உழுது பண்படுத்துகின்றன. பரம்படிக்கின்றன. சூட்டடிக்கின்றன. வண்டி இழுக்கின்றன. பசு அளிக்கும் பால் ஒரு பயனுள்ள உணவு. அவைகளின் சாணமும் சிறுநீரும்

நிலத்திற்கு நல்ல உரமாகப் பயன்படுகின்றன ஆட்டு உரம் மிகச் சிறந்த உரம். கோழிகள் உழவனின் வருவாயை அதிகப்படுத்துகின்றன. இவ்வாறு வாழ்நாள் முழுவதும் உழவனின் வாழ்வை—அதாவது நம் நாட்டின் வாழ்வை வளப்படுத்தும் கால்நடைகள் தாம் இறந்த பின்பும் தமது ஊனையும் தோலையும் உலகிற்கு ஈந்து தியாகத்தின் சின்னமாக விளங்குகின்றன.

இத்தகைய கால்நடைகளை நம் முன்னோர்கள் செல்வமாகப் பேணி வளர்த்தார்கள். ஒரு மனிதன் மிகவும் எளிதாகச் செய்யக் கூடிய அறங்கள் இவை இவை என்று கூற

ஆ நிரைக்கு மேய்ச்சல் நிலம்



வந்த திருமூலரும் "இறைவர்க்கு ஒரு பச்சிலை; பசுவிற்கு ஒரு வாயுறை" என்று செப்பிச் சென்றார். அதாவது கால் நடைகளைப் பேணுவதை நம் முன்னோர்கள் ஓர் அறமாகக் கருதிப் போற்றினர். அவைகள் மேய்வதற்கென்றே தனி யாக மேய்ச்சல் நிலங்களை ஒதுக்கி யிருந்தார்கள்.

ஆனால் இடைக் காலத்தில் நமது நாடு வேறு பல துறை களில் வீழ்ச்சியுற்றது போல் கால்நடை வளர்ச்சியிலும் தாழ்வுற்றது. உலகிலேயே நாம் அதிகமாகக் கால்நடை களைப் பெற்றிருந்தும் நமது கால்நடைகளின் இனவளர்ச்சி குன்றியது. உடல் நலம் தாழ்ந்தது. 100-க்கு 10 மாடுகள் ஈனுத மலடாக ஆகிவிட்டன.

மக்கள் அரசாங்கம் பதவி ஏற்றவுடன் உழவுத் தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுடன் கால்நடை வளர்ச்சிக்கான முயற்சிகளையும் மேற்கொண்டது. ஐந்து ஆண்டுத் திட்டத்தின்கீழ் கால்நடை வளர்ச்சிக்காகப் பல திருப்பணிகள் ஆற்றப்பட்டன அவைகளின் உயர்ந்த இனப் பெருக்கத்திற்காகவும், உடல் நலத்திற்காகவும், நோய் ஒழிப்பிற்காகவும், உணவு வசதிக்காகவும் பலவகை யான முன்னேற்ற நலன்களை அரசாங்கம் செய்துள்ளது.

இம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் 3 இயங்கும் கால் நடை ஆஸ்பத்திரிகள் நிறுவப்பட்டுள் ளன. அவைகள் முறையே 24-1-1955 அன்று முதுகுளத் தூரிலும், 25-8-1955 அன்று சாத்தூரிலும், 1-9-1955 அன்று திருவாடானையிலும் நிறுவப்பட்டன. இதுவரை 1953 கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கப் பட்டது, 497 காளைகளுக்குக் காயடிக்கப்பட்டது.

கால் நடைகளின் நோய்களை எளிதில் உணர்ந்து அவைகளுக்குத் தகுந்த மருத்துவ உதவி அளிக்கும் நோக்



மாடு என்ற சொல்லிற்கு செல்வம் என்று பொருள்

கத்துடன் 1-10-55 அன்று ஒரு மருத்துவ ஆராய்ச்சிக் கூடம் (Clinical Laboratory) நிறுவப்பட்டு அது இராம நாதபுரம் கால் நடை டிஸ்பென்சரியுடன் இணைக்கப் பட்டுள்ளது.

1951-52 ம் ஆண்டில் தேவகோட்டை டிஸ்பென்சரி யில் ஒரு கோழிப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. திட்ட காலத்தில் 1581 முட்டைகள் சேகரிக்கப் பட்டன. அவை களில் 981 குஞ்சு பொறிப்பதற்காகவும் 585 உணவிற் காகவும் விற்கப்பட்டன. 36 கோழிகள் பொதுமக்களுக்கு விற்கப்பட்டன.


தொழில்...
வளர!

ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்,
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்,
உண்மைகள் சொல்வோம், பல நன்மைகள் செய்வோம்.

—பாரதியார்

# தொழில்... வளர!

மக்களின் பொருளாதார வாழ்வு உயர நாட்டிலே தொழில்கள் பெருக வேண்டும். இன்று உலகிலே ஒரு சில நாடுகள் முதன்மையுற்று விளங்கக் காரணம் அவை தொழில் துறையிலே முன்னேறியுள்ளமையே ஆகும். அமெரிக்காவிலே செல்வம் கொழிக்கிறது; ரஷ்யா உலக நாடுகளில் செல்வாக்கு பெற்று விளங்குகிறது. நமது நாட்டைப் போன்றே ஜப்பானும் வேளாண்மை மிகுந்த நாடு. அந்நாடும் குறுகிய காலத்திலே பெரு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்நாடுகளெல்லாம் தொழில் துறையில் மிகுதியாகக் கவனம் செலுத்தி வாணிபத்தைப் பெருக்கி இன்று உலக நாடுகளுள் முதன்மையுற்று விளங்குகின்றன.

வேளாண்மையே நமது நாட்டு மக்கள் பெரும்பாலோர் ஈடுபட்டுள்ள தொழில். கிராமங்களில் வாழும் மக்கள் வேளாண்மை அன்றி வேறு தொழில் அறியார். தமது

தேவைகளையும் குறைத்துக்கொண்டு எளிய வாழ்வை வாழ அன்னூர் விரும்புவார். இதனால் நமது நாட்டில் தொழில்களே வளர்ச்சி யடைந்திருந்ததில்லை என்று கூறிவிடமுடியாது. பண்டை நாளிலும் சரி ஆங்கிலேயர் நமது நாட்டிற்கு வருவதற்கு முன்னும் சரி எவ்வளவோ தொழில்கள் நல்ல வளர்ச்சியடைந்து உயர்வுபெற்று விளங்கின. பண்டைத் தமிழகத்தின் தொழில்களின் நிலையை அறிய தமிழ் நூல்கள் துணைபுரிகின்றன. சிந்தை அள்ளும் சிலப்பதிகாரத்திலே வரும் இந்திர விழவூரெடுத்த காதை தமிழர்களின் கைத்தொழில் திறன்களை உள்ளங்கை நெல்லிக் கனியெனக் காட்டுவதாகும்.

அவ்விதம் சீரும் சிறப்பும் உற்று விளங்கிய தொழில்கள் வீழ்ந்தன. 17-ம் நூற்றுண்டில் இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் நமது நாட்டுத் தொழில்களை அழித்தனர். நமது நாட்டிலே கிடைக்கும் மூலப்பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அவற்றைத் தமது நாட்டிற்கு அனுப்பி, தமது நாட்டு ஆலைகளில் அவற்றைப் பொருள்களாக உற்பத்தி செய்து அப்பொருள்களையே தமது நாட்டில் இறக்குமதி செய்து ஏராளமாக லாபம் பெற்றனர்.

நமது காலத்திலே நம் நாடு விடுதலை பெற்றது. அண்ணல் காந்தியடிகளாரின் அரும்பெரும் தொண்டின் பயனாக நம் தாய் நாட்டின் தளைகள் நீங்கின. நமது அரசாங்கம் மக்களின் நல்வாழ்வையே நாடிப் பணிகள் ஆற்றி வருகின்றது. வீழ்ச்சியுற்ற தொழில்களுக்குப் புத்துயிர் அளித்தும், புதிய தொழில்களை வளர்த்தும் வந்துள்ளது. முதல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து அதிலே குடிசைத் தொழில்கள், இதரத் தொழில்கள் வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்துள்ளது. சென்னை அரசாங்கம் குடிசைத் தொழில்

களுக்கென அத்திட்டத்திலே 44 லட்ச ரூபாயும், இதரத் தொழில்களுக்கென 128 லட்ச ரூபாயும் ஒதுக்கியது. திட்டக் காலத்தில் குடிசைத் தொழில்களின் ஒதுக்கிய அளவிலும் 8 லட்ச ரூபாய் மிகுதியாகவே செலவிட்டது. குடிசைத் தொழில்களின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

## தொழிலாளர் நலம்

தொழில்கள் நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கே அடிப்படையானவை. தொழில் வளம் செழித்

தொழில் வளர்க்கும் பெருமக்கள்



தால்தான் நமது நாட்டின் வறுமை முற்றிலும் நீங்கும். இந்த உண்மையை மனத்திற்கொண்டு நமது அரசாங்கம் தொழில் வளர்ச்சி முன்னேற்றங்களுக்கான பல அரிய சாதனைகளைச் செய்துள்ளது. அத்துடன் இத் தொழில்களின் முன்னேற்றத்திற்கே காரணமாக உள்ள தொழிலாளர்களையும் அரசாங்கம் மறந்துவிட வில்லை. வேண்டிய வருவாய், போதிய வாழ்க்கைதரம், தகுந்த ஓய்வு, நேர்மையான சமுதாய, கலாசார வாய்ப்புக்கள் ஆகியவற்றை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதே நமது அரசாங்கத்தின் மேலான நோக்கம். அத்துடன் வேலையின்றித் திண்டாடுவோருக்கு வேலை தேடிக் கொடுக்கவும், வயது, தள்ளாமை, நோய், வேலை செய்கையில் நேர்ந்த விபத்து சந்தர்பங்களில் தொழிலாளர்களுக்கு உதவி அளிக்கவும் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு அரசாங்கம் தொழிலாளர் நலத்துறை (Labour welfare Department) ஒன்றை நிறுவியுள்ளது. இந்தத் துறையின் நோக்கங்கள் இரண்டு. தொழிலாளர் நலத்திற்காக அரசாங்கம் இயற்றிய சட்டங்களை நிறைவேற்றித் தொழிலாளர்களுக்கு நலனைத் தேடித் தருவது இதன் முதல் நோக்கம். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் தகராறு ஏற்படாமல் ஒற்றுமை நிலவும்படிச் செய்வது இரண்டாவது நோக்கம்.

முதல் ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில் தொழிலாளர் நலனுக்காகப் பல சாதனைகள் நிறைவேறியுள்ளன. தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. தொழிலாளர் மாநில இன்ஷ்யூரன்ஸ் திட்டம், தொழிலாளர் எதிர்காலச் சேமிப்பு நிதிச் சட்டம், தொழிலாளிக்கு வீடு

கட்டும் திட்டம், தொழிலாளர் முன்னேற்ற நல நிலையங்கள், தொழிலாளர் - முதலாளிகளுக்கு இடையில் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான தொழில் நீதி மன்றங்கள் ஆகியவை இத்திட்ட காலத்தில் ஏற்பட்ட நன்மைகள்.

**தொழிற்சாலைச் சட்டம்**

அனைத்துலகத் தொழிலாளர் சட்டப்படி நமது நாட்டிலும் தொழிலாளர் முன்னேற்றத்திற்கான தீவிரச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தியத் தொழிலாளர் சட்ட வரலாற்றிலேயே நமது மாநிலத்தில்தான் முதன் முதலாகத் தொழிற்சாலைகளுக்கு லைசன்ஸ் அளிக்கும் முறை ஏற்பட்டது. இதனால் தொழிற்சாலைகள் முறையில்லாமல் பெருக முடியாமல் ஓர் ஒழுங்கமைப்பிற்கு உள்ளாகவே இருப்பதற்கு வழி ஏற்பட்டது. 10-க்கு மேற்பட்டத் தொழிலாளர்கள் வேலைபார்க்கும் தொழிற்சாலைகளில் இத் தொழிற்சாலைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 20 தொழிலாளர்களுக்கு மேல் வேலைசெய்யும், விசையைப் பயன்படுத்தாத தொழிற்சாலைகளுக்கும் இச்சட்டம் பொருந்துகிறது. இச்சட்டப்படிப் புதிதாகத் திறக்கப்படும் தொழிற்சாலைகள், காற்றோட்டமுள்ளவையாகவும், சுகாதார, வெளிச்ச வசதியுள்ளவையாகவும் இருக்க வேண்டும். அதிகக் கூட்டம் அடையாமல் தடுக்கப்படவேண்டும். கக்கூஸ்களும், எச்சில் உமிழும் இடங்களும் தகுந்த இடங்களில் அமைக்கப்படவேண்டும். தொழிலாளர்களுக்கு நல்ல குடிநீர் வசதியும் செய்து தரவேண்டும்.

தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படாவண்ணம் தகுந்த முன்னெச்சரிக்கைகள் செய்யப்படவேண்டும். அபாயம் மிகுந்த இயந்திரங்கள் தக்க முறையில் பாதுகாக்கப்படவேண்டும்.

தொழிலாளர்கள் உட்காருவதற்கான இருக்கை வசதிகள், முதல் உதவிவசதி, ஆம்புலன்ஸ் அறைகள், சிற்றுண்டி விடுதிகள், ஓய்வு விடுதிகள் முதலியன அமைக்கப்படவேண்டும். பெண் தொழிலாளர்கள் தங்களது குழந்தைகளைப் பாதுகாப்புடன் விட்டுவைக்கக் குழந்தை விடுதிகளும் (Creches) அமைக்கப்படவேண்டும்.

இச் சட்டம் சில காலங்களில் மட்டும் வேலை செய்யும் தொழிற்சாலைகள் (Seosonal) எப்பொழுதும் இடங்கும் தொழிற்சாலைகள் (Non-Sesonal) என்று வேறுபாடின்றி

பருத்தி ஆலையிலே...



எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் பொருந்துகிறது. தொழிற்சாலைகளில் வயது வந்தவர்கள் வாரத்தில் மொத்தம் 48 மணி நேரத்திற்கு மேலும் நிதமும் 9 மணி நேரத்திற்கு மேலும் வேலை செய்யக்கூடாது. வார விடுமுறை பெற முடியாதவர்களுக்கு நஷ்ட ஈடாகச் சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும். இடையில் ½ மணி நேரமாவது ஓய்வு இன்றி யாரிடமும் 5 மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து அதிகமாக வேலை வாங்கப்படக்கூடாது. ஷிப்டு முறைகள் ஒன்றையொன்று நெருங்கி இருக்கக் கூடாது. குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வேலை செய்தால் பஞ்சப்படி உட்பட வழக்கமான சம்பளத்தைப் போல் இரண்டு மடங்கு அதிகமாக வழங்கப்படவேண்டும். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுவர்களின் வயது 14-க்கு மேல் இருக்கவேண்டும். அவர்களிடம் ஒரு நாளைக்கு 5 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கப்படக் கூடாது. நல்ல உடல்கட்டு உள்ளவர்களான இளைஞர்களைத் தவிர மற்ற 18 வயது ஆகாத இளைஞர்களை வயது வந்தவர்களாகக் கருதி வேலை வாங்கக் கூடாது. 20 வேலை நாட்களுக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கப்படவேண்டும். சிறுவர்களுக்கு 15 வேலை நாட்களுக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

அபாயகரமான வேலைகளில் வேண்டிய முன்னெச்சரிக்கைகள் செய்யப்படவேண்டும். 500 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் கட்டாயமாக ஒரு தொழிலாளர் நல அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். இது சட்டத்தின் புதிய உறுப்பு. 2000-க்கு மேற்பட்ட தொழிதாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு 2000 தொழிலாளர்களுக்கும் ஓர்

உதவித் தொழிலாளர் நல அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

**சென்னை கடைகள், அமைப்புகள் சட்டம்**

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர் களைப் போன்றே கடைகள், முதலியவற்றின் வேலை பார்ப்போருக்கும் நலனளிப்பதற்காக இச் சட்டம் இயற் றப்பட்டது. இச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர அரசாங்கம் 199 தொழிலாளர் உதவி மேற்பார்வை யாளர்களை (Assistant Inspectors of Labour) நகரங்களி லும் பஞ்சாயத்துக்களிலும் நியமித்துள்ளது.

**தொழிலாளர் மாநில இன்ஷ்யூரன்ஸ் திட்டம்**

இத்திட்டப்படி இன்ஷ்யூரன்ஸ் செய்துகொண்ட தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டபொழுதும், வேலை செய்ய முடியாமல் போனபோதும் அவர்களுக்கு மருத்துவ உதவியும் பண உதவியும் வழங்கப்படும். வேலை செய்கை யில் ஏற்பட்ட விபத்தினால் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொண்ட தொழிலாளர் உயிரிழக்க நேரிட்டால் அவரை நம்பி வாழும் அவரது குடும்பத்தாருக்குப் பண உதவி வழங்கவும் வகை ஏற்பட்டுள்ளது. பெண் தொழிலாளர் களுக்குப் பேறுகால உதவி அளிக்கப்படும்.

**தொழிலாளர் எதிர்கால நலச் சேமிப்பு நிதிச் சட்டம்**

சிமெண்டு, சிகரெட்டு, மின்சாரம், இயந்திரம் (Mecha- nical) பொதுப்பொறிஇயல் (General Engineering), இரும்பு, எஃகு, தாள், நெசவு, ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக இச்சட்டம் இயற்றப்பட் டது. தொழிலாளர்கள் வேலையைவிட்டு நீங்கி ஓய்வு பெறுங் காலத்தில் இந்நிதி அவர்களுக்கு மிகவும் உதவும்.

இச் சட்டத்தை மேலும் 15 தொழில்களில் அமுலாக்க வேண்டிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

**குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம்**

1000 தொழிலாளர்களுக்குமேல் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தால் அவர்களது சம்பளம் குறைந்தபட்சம் இவ்வளவு இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்தபட்சக் கூலி நிர்ணய மாநில ஆலோசனைக் குழு (The Minimum Wages State Advisory Board) அமைக்கப்பட்டுள்ளது. சட்டப்படித் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கும் விஷயத்தில் இக் குழு அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகிறது.

**தொழிலாளர் வழக்குத் திருத்தச் சட்டம்**

இச்சட்டம் 1953-ல் திருத்தப்பட்டது. அதன்படி ஒரு தொழிலாளரை அகாரணமாய் வேலையை விட்டு நிறுத்தினால் அவருக்கு 45 நாள் சம்பளம் அளிக்கவேண்டும். அத்துடன் ஒரு மாதத்திற்கு முன்பே முன்னறிக்கை கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு முன்னறிவிப்பு இல்லாவிடில் 1 மாதச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். மேலும் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர் அந்தத் தொழிற்சாலையில் வேலைசெய்த ஒவ்வோர் ஆண்டிற்கும் 15 நாள் சம்பளம் நஷ்டஈடாக அளிக்கப்படவேண்டும். வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்களுக்குப் பின்னால் வாய்ப்பு ஏற்பட்டால் முதன்மை கொடுத்து வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.


அறிவு
வளர!

வீடுதோறும் கலையின் விளக்கம்,
வீதிதோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி.

—பாரதியார்.

# அறிவு . . .
# வளர !

நமது நாட்டுச் சான்றோர்கள் கல்வி அறிவு உடையவர்களையே கண்ணுடையவர்கள் என்று போற்றினார்கள். கல்வி அறிவு இல்லாதவர்களின் முகத்தில் இருக்கும் கண்கள் புண்கள் என்று இகழப்பட்டன.

அவ்வளவு உயர்வாகக் கருதப்பட்டு வரும் கல்வியை நம் மக்கள் அனைவரும் அடையவேண்டும் என்பதே நமது அரசாங்கத்தின் முதல் நோக்கம். அத்துடன் கல்வியினால் ஏற்படும் பயன் நாட்டு மாந்தரின் பொது நலத்திற்கும் நாட்டின் பல துறை வளர்ச்சிக்கும் பயன் படக் கூடியதாக அமையவேண்டும் என்பது நமது எண்ணம். அதன்படிக் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் இம் மாநிலத்தில் பல ஆயிரக்கணக்கான கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதனால் ஏராளமான மாணவ மாணவியர்களுக்குக் கல்வி

வசதி கிடைத்துள்ளது. கல்வி முறையில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**தொடக்க நிலைப்பள்ளி**

திட்டகாலத்திற்கு முன்பு 1950-51-ல் ஆந்திர நாடு நீங்கலாக எஞ்சியுள்ள சென்னை மாநிலத்தில் மொத்தம் 20,700 தொடக்க நிலைப்பள்ளிகள் இருந்தன. அவைகளில் 16·3 லட்சம் மாணவர்களும் 8·9 லட்சம் மாணவிகளும் கல்வி பயின்றுவந்தனர். இவற்றைத் தவிர 3000 அடிப்படைக் கல்விக் பள்ளிகளும் இருந்தன. இவைகளில் 29,000 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வந்தனர். திட்ட காலத்தில் (1950-51-1955-56) மொத்தம் 3700 தொடக்க நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. அதன் பயனாய் மேலும் 7,31,000 சிறுவர்களுக்குப் படிக்க வசதி கிடைத்துள்ளது.

படித்துவிட்டு வேலை இன்றி அவதிப்படுவோருக்கு ஆதரவு அளிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் ஓராசிரியர் பள்ளிகளைத் திறந்தது. புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன. பல தொடக்க நிலைப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாக (Higher Elementary Schools) மாற்றப்பட்டன. அவ்வாறு 1954-55-ம் ஆண்டில் 3,000 பள்ளிகள் திறக்கப்பட்டன. அவைகளில் 2,800 பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். 1955-56-ல் 3,076 பள்ளிகள் திறக்கப்பட்டன. அவைகளில் 1,467 பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். இப்பள்ளிகளில் சுமார் 6,076 ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

**உயர்நிலைப் பள்ளிகள்**

திட்ட காலத்திற்கு முன்பு (1950-51-ல்) மாணவர்களுக்காக 638 உயர்நிலைப் பள்ளிகளும் மாணவிகளுக்காக

165 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. இவைகளில் 3·2 லட்சம் மாணவர்களும் 87,000 மாணவிகளும் கல்வி பயின்று வந்தனர். திட்ட காலத்திற்குள் ( 1955-56-க்குள் ) மாணவர்களுக்கு 202 உயர்நிலைப் பள்ளிகளும் மாணவிகளுக்கு 27 உயர்நிலைப் பள்ளிகளும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. அதனால் மேலும் 90,000 மாணவர்களுக்கும் 53,000 மாணவிகளுக்கும் உயர்நிலைக் கல்வி அறிவு பெறுவதற்கு வசதி கிடைத்துள்ளது. 65 உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் பல நோக்கப்பள்ளிகளாக (Multy purpose schools) மாற்றியுள்ளது. அவைகளில் 100 வகையான பாடங்களில் (Courses) பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கல்லூரிகள்**

1950-51லிருந்து 1955-56 வரை ஐந்து ஆண்டுகளுக்குள் மாணவர்களுக்காக 11 கல்லூரிகளும் மாணவிகளுக்காக 8 கல்லூரிகளும் திறக்கப்பட்டன. இதனால் மேலும் 12,700 மாணவர்களுக்கும் 2800 மாணவிகளுக்கும் கல்லூரிப் படிப்புப் பெறுவதற்கு வசதி கிடைத்துள்ளது. இவற்றைத் தவிர 1956-57ல் 7 கல்லூரிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. தற்பொழுது நமது மாநிலத்தில் மொத்தம் 70 கலைக் கல்லூரிகள் உள்ளன.

**ஆசிரியர் பயிற்சி**

தொடக்க நிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் முதலியவற்றின் எண்ணிக்கை பெருகிவிட்டதால் அவைகளில் பணியாற்றுவதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் வேண்டியிருந்தனர். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சிப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. 1950-51லிருந்து 1955-56க்குள்

5 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், 6 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் 47 ஆசிரியர் அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. 1956-57ல் மேலும் 5 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் 11 பயிற்சிப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. இவற்றைத் தவிர 15 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆசிரியர் அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டன.

## நூல் நிலைய இயக்கம்

மக்களின் கல்வி, பொது அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையங்கள் பெரிதும் துணை புரிகின்றன. எனவே நமது மாநிலத்தில் நூல் நிலையங்கள் பெருகவேண்டும்; ஏற்கெனவே இருக்கும் நூல் நிலையங்கள் நூல் வளம் பெற்று விளங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் பொருள் உதவி செய்து வருகிறது. கீழ்க்கண்ட உள்ளூர் நூல் நிலையங்களுக்கு அரசாங்கம் பொருள் உதவி செய்துள்ளது.

| | | |
|---|---|---|
| திருக்கழுக்குன்றம் | ரூ. | 10,000 |
| சேரன் மாதேவி | ,, | 10,000 |
| சிதம்பரம் | ,, | 10,000 |
| மதுரை | ,, | 30,000 |
| கோயமுத்தூர் | ,, | 30,000 |
| மலபார் | ,, | 20,000 |
| தென் கன்னடம் | ,, | 20,000 |
| திருவள்ளூர் | ,, | 5,000 |
| கடம்பாத்தூர் | ,, | 5,000 |
| ஊத்துக்கோட்டை | ,, | 5,000 |



மக்களின் அறிவு மலர்ச்சிக்குப் படிப்பகங்கள்

இவற்றைத் தவிர வேறு பல நூல் நிலையங்களுக்கும் அரசாங்கம் பொருள் உதவி செய்துள்ளது. நமது மாநிலத்தில் தனிப்பட்டவர்கள் நடத்தும் நூல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 758. அரசாங்கம் அவைகளுக்கு ரூ. 33,890 வழங்கியுள்ளது.

## மாணவர் படையும் மாணவர் துணைப் படையும்

இந்த ஆண்டில் (1955-56) மாணவர் படைகள் அதிகப்படுத்தப்பட்டன. மாணவர் துணைப் படை என்ற ஒரு படை புதிதாக அமைக்கப்பட்டது. 89 ஆண் ஆசிரியர்களுக்கும் 11 பெண் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்

பட்டது. 546 மாணவர் துணைப் படைப் பகுதிகள் (Units) அமைக்கப்பட்டன.

### ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி

இந்த ஆண்டு அரசாங்கம் கல்வித் துறையில் செய்துள்ள சாதனை மிகவும் போற்றுதற்குரியது. ஆண்டிற்கு 1200 ரூபாய்க்குக் குறைந்த வருவாயுள்ள பெற்றோர்களின் மக்களுக்கு 3-ம் படிவம் வரைச் சம்பளம் இல்லாமல் இலவசமாகக் கல்வி வசதி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இதனால் ஏற்படும் நலனை 35 லட்சம் சிறுவர்களுக்கு மேல் அனுபவிக்கின்றனர்.

இவற்றைத் தவிர கெசட் பதிவில்லாத ஊழியர்களின் மக்கள் 4-ம் படிவம் முதல் 6-ம் படிவம் முடிய அரைச் சம்பளத்தில் கல்வி கற்க அரசாங்கம் வசதி செய்து கொடுத்துள்ளது.

### ஆசிரியர்களுக்கு உதவிச் சம்பளம்

கல்வித் துறையில் இதுவரை அரசாங்கம் செய்துள்ள எல்லா நலன்களைக்காட்டிலும் மிகவும் உயர்ந்தது அரசாங்கம் ஆசிரியர்களின் முன்னேற்ற நலத்திற்காக வகுத்த திட்டம்தான். 1955-ல் எதிர்கால நலச் சேமிப்பு நிதி (Provident Fund), இன்ஷ்யூரன்ஸ், உதவிச் சம்பளம் (Pension) ஆகிய மூன்றின் கூட்டுத் திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது. இத்திட்டத்தினால் எல்லா வகையான தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்களும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் நலமடைகின்றனர்.

இனி, கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆற்றிய பணிகளை விரிவாகக் காணலாம்.

## தொடக்கநிலைப் பள்ளிகள்

திட்டகாலத்திற்கு முன்பு (31-3-1951 வரையில்) இம் மாவட்டத்தில் 1381 தொடக்கநிலைப் பள்ளிகள் இருந்தன. அவைகளில் 99,440 மாணவர்களும் 49,129 மாணவிகளும் கல்வி பயின்றனர். திட்டகாலத்தில் (1955-56-க்குள்) மேலும் 291 பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. அதன் பயனாக 26,082 மாணவர்களுக்கும் 16,590 மாணவிகளுக்கும் படிக்க வசதி கிடைத்துள்ளது.

இவற்றைத் தவிர 31-3-51 வரை இம்மாவட்டத்தில் 27 அடிப்படைக் கல்வி நிலையங்கள் இருந்தன. அவைகளில் 1429 மாணவர்களும் 809 மாணவிகளும் கல்வி

மாணவர்கள் கைத்தொழிற் பயிற்சிப் பெறுகிறார்கள்



பயின்று வந்தனர். திட்டகாலத்திற்குள் மேலும் 75 அடிப் படைக் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன. அதன் பயனாய் மேலும் 5578 மாணவர்களுக்கும் 3492 மாணவிகளுக்கும் அடிப்படைக் கல்வி பெற வசதி ஏற்பட்டுள்ளது.

படித்துவிட்டு வேலையின்றி அல்லலுறுவோருக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கக் கருதியது. அந்நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் 1954-55ம் ஆண்டில் 225 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன. பல புதிய பள்ளிகளும் திறக்கப்பட்டன. தொடக்கநிலைப் பள்ளிகள் உயர் தொடக்க

அடிப்படைக் கல்விப் பள்ளியிலே...



நிலைப் பள்ளிகளாக (Higher Elementary Schools) மாற்றப் பட்டன. அதுபோல் 1955-56ம் ஆண்டிலும் 237 ஓராசிரியர் பள்ளிகளும் பல தொடக்கநிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டன.

இவ்விரண்டு ஆண்டுகளிலும் இப்பள்ளிகளில் 582 ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

**உயர்நிலைப் பள்ளிகள்**

திட்டகாலத்திற்கு முன்பு (31-3-51க்கு முன்பு) இம் மாவட்டத்தில் 47 உயர்நிலைப்பள்ளிகள் இருந்தன. அவை களில் 18,383 மாணவர்களும், 1093 மாணவிகளும் கல்வி பயின்று வந்தனர். திட்டகாலத்திற்குள் மேலும் 19 உயர் நிலைப்பள்ளிகள் இம்மாவட்டத்தில் திறக்கப்பட்டன. அத னால் மேலும் 5781 மாணவர்களுக்கும் 1316 மாணவிகளுக் கும் உயர்நிலைக் கல்வி பெறுதற்கு வாய்ப்புக் கிடைத்துள் ளது.

இவற்றைத் தவிர திட்டகாலத்திற்கு முன்பு மாணவி களுக்கென்று தனிப்பட 11 உயர்நிலைப் பள்ளிகள் இருந் தன. அவைகளில் 2541 மாணவிகள் பயின்று வந்தனர். திட்டகாலத்திற்குள் மாணவிகளுக்கென்று மேலும் ஓர் உயர்நிலைப்பள்ளி திறக்கப்பட்டது. அதன் பயனாய் அதிக மாக 1535 மாணவிகள் படிப்பதற்கு வாய்ப்படைந்துள்ள னர்.

**கல்லூரிகள்**

திட்ட காலத்தில் காரைக்குடியில் மாணவிகளுக் கென்று தனிப்பட ஒரு கல்லூரி திறக்கப்பட்டுள்ளது.

காரைக்குடியில் பொறி இயல், தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது. அதன் பெயர் அழகப்பா பொறி இயல் தொழில் நுட்பக் கல்லூரி (Alagappa-College of Engineering and Technologey) என்று பெயர்.

ஆசிரியர் பயிற்சி

திட்டகாலத்திற்கு முன்பு இம்மாவட்டத்தில் மாணவர்களுக்கென்று இருந்த பயிற்சிப் பள்ளி ஒன்றுதான். திட்டகாலத்தில் மேலும் ஒரு பள்ளி திறக்கப்பட்டது. அதனல் மேலும் 84 மாணவர்களுக்குப் பயிற்சி பெறும் வசதி கிடைத்துள்ளது. இதேபோல் திட்டகாலத்திற்கு முன்பு மாணவிகளுக்கென்று தனிப்பட ஒரே ஒரு பயிற்சிப் பள்ளி இருந்தது. திட்டகாலத்தில் மேலும் ஒரு பயிற்சிப் பள்ளி திறக்கப்பட்டதால் மேலும் 113 மாணவிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

திட்டகாலத்திற்கு முன்பு இம்மாவட்டத்தில் மாணவர்களுக்கென்று 3 அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. திட்டகாலத்தில் மேலும் 3 அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டன. அதனல் மேலும் 270 மாணவர்கள் அடிப்படைக் கல்வியில் பயிற்சி பெறுகின்றனர்.


நாடு...
உயர!

மழை தொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்திட்டது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்கு விளங்க.

—மதுரைக்காஞ்சி.

# நாடு . . .

# உயர!

---

மனிதனின் நிமிர்ந்த நிலைக்கு முதுகெலும்பு இன்றியமையாதது. அதுபோல் கிராமங்கள் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கின்றன.

இதற்கு முன் நமது நாட்டை ஆண்ட அந்நிய அரசாங்கம் கிராமங்களின் முன்னேற்றத்தில் கவலை கொள்ளவில்லை. அதனால் கிராமங்களின் உயர்ந்த வாழ்வு வீழ்ச்சியடைந்து இருந்தது. நாடு அரசியல், கல்வி, சமுதாய, பொருளாதாரத் துறைகளில் மிகவும் பிற்போக்கு அடைந்து இருந்தது. கிராமங்களில் வாழ்ந்து வந்த பெருவாரியான மக்களிடையே நிலவி இருந்த ஒன்றுபட்ட சக்தி குலைந்து போய் இருந்தது. மக்கள் தன்னம்பிக்கை இழந்து ஊக்கம் இல்லாமல் உலைந்துபோய் இருந்தனர். மக்களிடையே சமுதாய உணர்ச்சி முற்றிலும் குன்றிப்போய் இருந்தது.

காந்தியடிகள் அரசியலில் ஈடுபட்டதும் அவர் நமது நாட்டில் ஓர் நிலையான முன்னேற்றத்தைக் காண்பதற்குத் திட்டம் வகுத்தளித்தார். கிராம மக்களிடையே சிந்தி சிதறிப்போய் இருக்கும் சக்திகளை ஒன்று திரட்டிக் குலைந்து போய்விட்ட நமது கிராம நல்வாழ்வை மீண்டும் புத்துயிர் அளித்து உருவாக்க வேண்டும் என்பதே அண்ணல் காந்தியடிகள் வகுத்துத் தந்த திட்டமாகும். கிராமங்களின் முன்னேற்றம் தான் நமது அரசாங்கத்தின் தலைமையான நோக்கம். காந்தியடிகள் கண்ட கிராம நல்வாழ்வை உருவாக்குவதுதான் நமது முதல் கடமை. நமது அரசாங்கம் கிராம நலப்பணிகளை ஏற்கெனவே கிராம முன்னேற்ற நலத்துறை (Rural Wel fare Department), கோட்ட வளர்ச்சித் திட்டம் (Firka Development Scheme) போன்றவைகளின் வாயிலாகச் செய்துவந்திருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சமுதாய நலத் திட்டம் (Community Project), தேசிய வளர்ச்சித் திட்டம் (National Dovelopment Scheme), சமுதாய மேனிலைத் திட்டம் (Community Devolopment Programme), உள்ளூர் வளர்ச்சித் திட்டம் (Local Devolopment Scheme) போன்ற திட்டங்கள் அத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே வகுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் மக்களின் முன்னேற்றத்திற்காக மக்களே வகுத்து நிறைவேற்றும் திட்டங்கள் மக்கள் தங்களிடம் உள்ள அறிவையும் பொருளையும் பயன்படுத்தித் தங்களின் நல்வாழ்வைத் தாங்களே உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். மக்களின் சமுதாய உணர்ச்சியும் ஊக்கமும் அறிவும் தான் இத்திட்டங்களின் உயிர்நாடி. அரசாங்கத்தின் கடமை அத்தகைய பணிகளில் மக்களுக்கு ஊக்க

மும் போதிய பொருள் உதவியும் அளித்துத் தக்க வழியில் அவர்களை நடத்திச் செல்வது தான். இத்திட்டங்கள் இவ்வாறு பல பெயர்களில் வழங்கப்படினும் கிராம முன்னேற்றமே அவைகளின் பொது நோக்கமாகும்.

## சமுதாய நலத் திட்டம்

இத்திட்டம் 1952-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் 3 ஆண்டுகளுக்காக ஆகக்கூடிய செலவு 65 லட்சம் ரூபாய்.

## தேசீய வளர்ச்சித் திட்டம்

மாநிலம் எங்கும் நிலையான முறையில் கிராமங்கள் முன்னேறி வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் தேசிய வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1953-ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்த நாளின்போது நமது மாநிலத்தில் 28 வட்டாரங்களில் (Blocks) துவக்கப் பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜபாளையம் வட்டாரத்தில் தேசிய வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த வட்டாரத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கான செலவு தொகை ரூபாய் ஏழரை லட்சம்.

## சமுதாய மேனிலை வட்டாரங்கள்

இம்மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி ஆகிய இரு வட்டாரங்களிலும் சமுதாய மேனிலைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் மூன்று ஆண்டுகளுக்கான செலவு மதிப்பீடு ரூபாய் 15 லட்சமாகும்.

## உள்ளூர் வளர்ச்சித் திட்டம்

நம் மாநிலத்தில் சமுதாய நலத் திட்டம், சமுதாய மேநிலைத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேறாத இடங்களில் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேற் சொன்ன திட்டங்களைப் போன்று ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு பகுதியே யாகும்.

இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக நாம் கண்ட சாதனைகள் இரண்டு. ஒன்று, நாடெங்கும் முன்னேற்றத்துடன் நடைபெறும் கிராம வளர்ச்சி. இரண்டு, மக்களின் மனமாற்றம். இப்பொழுது மக்களிடையே மறுமலர்ச்சியும், தன்னம்பிக்கையும், திட்டமிடும் மனப்பான்மையும் ஏற்பட்டுள்ளன. வரி கொடுப்பதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணுமல் மக்கள் இன்று தங்கள் பொறுப்பை உணர்கின்றனர்.

அரசாங்க அலுவலாளர்களும், அதிகாரிகளும், அலுவலகங்களில் உள்ள தாள்களுடன் மட்டும் தொடர்பு கொள்ளாமல் மக்களுடன் நெருங்கி உறவாடி அவர்களது குறைவு, நிறைவுகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை உணர்கின்றனர்.

## ஸ்ரீ வில்லிபுத்தூர் சமுதாய மேனிலைத் திட்ட வட்டாரம்

ஸ்ரீ வில்லிபுத்தூர், நத்தம் பட்டி, வத்திராயிருப்பு ஆகிய கோட்டங்கள் (Firkas) ஸ்ரீவில்லிபுத்தூர் சமுதாய மேனிலைத் திட்ட வட்டாரத்தில் அடங்கியுள்ளன. 2-10-51க்கு முன்பு இவ்வட்டாரத்தில் வத்திராயிருப்புக் கோட்டத்திற்குப் பதிலாக மல்லிக்கோட்டம் அடங்கியிருந்

தது. 2-10-54 ல் இராஜபாளையம் தேசீய வளர்ச்சித் திட்ட வட்டாரம் துவக்கப்பட்டவுடன் மல்லிக் கோட்டம் இராஜபாளையம் வட்டாரத்துடன் இணைந்துவிட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் 2-10-53 லிருந்து சமுதாய நலவேலைகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வட்டாரம் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு கிராம ஊழியர் நியமிக்கப்பட்டார்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் சமுதாய பணித் திட்டத்தின் வாயிலாக இவ்வட்டாரம் பல துறைகளிலும் அடைந்த முன்னேற்றத்தை இனி விரிவாகக் காண்போம்.

## வேளாண்மை

இவ் வட்டாரம் துவக்கப்பட்ட நாளிலிருந்து (2-10-53) 31-3-56 வரை இவ்வட்டாரத்தில் வேளாண்மைத் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விளைச்சலை மிகுதிப் படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. 106 மணங்கு நெல் பொறுக்கு விதைகளும், 65 மணங்கு தினை முதலிய தானியங்களின் விதைகளும், 10 மணங்கு நிலக்கடலை விதைகளும், 141 மணங்கு கேப்பை விதைகளும், 55 மணங்கு சோள விதைகளும், 5514 பருத்தி விதைகளும் வழங்கப்பட்டன. 9521 மணங்கு அமோனியம் சல்பேட், சூப்பர்பாஸ்பேட் போன்ற உப்பு உரம் வழங்கப்பட்டது. மார்ச்சு மாதத்தில் இதைத் தவிர 45 டன் உரம் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டது. பசுந்தழை உரத்தைக் குடியானவர்கள் பயன்படுத்தி நல்ல விளைச்சலைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் 215 மணங்கு பசுந்தழை உரச் செடிகளின் விதை

கள் வழங்கப்பட்டன. 302 ஏக்கர் நிலத்தில் பசுந்தழை உரம் பயன்படுத்தப்பட்டது.

புதுமை உழவுக் கருவிகளைப் பயன் படுத்தி உழவுத் தொழிலை முன்னேறச் செய்வதற்காகக் குடியானவர்களுக்கு அவற்றைப் பயன் படுத்தும் முறையை வேளாண்மைத் துறை அலுவலர்கள் கற்றுக் கொடுத்தனர். பல வகை உழவுக் கருவிகளும் வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப் பட்ட உழவுக் கருவிகளின் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| (1) | இரும்புக் கலப்பைகள் | 16 |
| (2) | மருந்து தூவிகள் | 19 |
| (3) | புழுதி எடுப்பவை | 16 |
| (4) | தாழ் வெட்டி | 1 |
| (5) | வரப்பு கட்டும் இரும்புக் கலப்பைகள் | 8 |
| (6) | பாத்தி கட்டும் கருவிகள் | 9 |
| (7) | களை எடுக்கும் கருவிகள் | 13 |
| (8) | இரும்புக் கவலைகள் | 26 |

குப்பைகளைப் பதனிட்டு உரமாக்குவதற்காக 751 குப்பை உரக் குழிகள் வெட்டப்பட்டு அவைகளில் குப்பை உரம் சேமித்துவைக்கப் பட்டது. ஆண்டுதோறும் 'குப்பை வார' விழா எடுக்கப்பட்டது.

142 ஏக்கர் நிலத்தில் பழத் தோட்டங்கள் அமைக்கப் பட்டன. 2642 பழமரக் கன்றுகள் பாதி விலைக்கு வழங்கப்பட்டன. இவற்றைத் தவிர பாதை யோரங்களிலும் மற்றும் பல இடங்களிலும் பழமரங்கள் நடப்பட்டு ஆண்டு தோறும் 'மரம் நடு விழாக்கள்' கொண்டாடப்படுகின்றன.

400 ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

100 ஏக்கர் தரிசு நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டது. புதிதாகக் கிணறுகள் தோண்டப்பட்டன. அவைகளின் வாயிலாக 1300 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது.

பயிர்களைப் பூச்சி, நோய் முதலிய பகையிடமிருந்து காப்பதற்காகக் குடியானவர்களுக்கு 179 மணங்கு பூச்சி, நோய் மருந்து வழங்கப்பட்டது. அம் மருந்தைத் தெளித்ததின் பயனாகப் பயிர்கள் காப்பாற்றப்பட்டன. விளைச்சலும் நன்றாகக் கண்டது.

புதிய வேளாண்மை முறைகளைக் குடியானவர்களுக்கு நேரடியாகக் கற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் 168 செயல் முறைச் சான்றுகள் செய்து காட்டப்பட்டன. 2 வேளாண்மைக் கண்காட்சிகள் நடத்தப் பெற்றன. சமுதாய மேனிலைத் திட்ட அதிகாரியும், மற்ற ஊழியர்களும் இவ் வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு கிராமமாகச் சென்று புதிய உழவு முறைகளையும், அவற்றினால் ஏற்படும் பெரும் பயனையும் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறிவந்தனர். அதன் பயனாய் இவ் வட்டாரக் குடியானவர்கள் புதிய முறைகளில் நம்பிக்கை கொண்டு புதிய உழவுக் கருவிகள் முதலியவற்றை வாங்கிப் பயன் படுத்துகின்றனர்.

ஓய்வு நேரத்தில் எளிதாக வருவாயைப் பெருக்குவதற்காகக் குடியானவர்களுக்கு 100 தேன் கூடுகள் வழங்கப்பட்டன. 6 மணங்குக் காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

குறைந்த காலக் கடன் திட்டப்படி நாற்று நடுதல், களை எடுத்தல் போன்ற உழவுப் பணிகளுக்கும் பொருள்

உதவி அளிக்கும் பொருட்டு 1001 குடியானவர்களுக்கு ரூ. 1,17,470 கடன் தொகையாகக் கொடுக்கப்பட்டது.

நீண்ட காலக் கடன் திட்டப்படிக் கிணறு கட்டவும், உழவு மாடுகள் வாங்கவும், பம்பு செட்டுகள் முதலியன அமைக்கவும் 536 குடியானவர்களுக்கு ரூ. 2,75,400 கடன் கொடுக்கப்பட்டது.

**கால்நடை வளர்ச்சி**

தொத்து நோய் வாய்ப்பட்ட 422 கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. 4072 கால் நடைகளுக்குச் சாதாரண நோயை நீக்குவதற்காக மருத்துவ உதவி செய்யப்பட்டது. 4885 மாடுகளுக்கும், 11,357 கோழிகளுக்கும் நோய் பரவாமல் இருக்கும் பொருட்டுத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. வத்திராயிருப்பிலும், நத்தம் பட்டியிலும் 2 கால் நடை முதல் உதவி விடுதிகள் திறக்கப் பட்டுள்ளன. அவைகள் வாரந்தோறும் கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளித்து வருகின்றன.

கால் நடைகளின் உயர்ந்த இன வளர்ச்சிக்காக 6 காங்கேயம் பொலி காளைகளும், 1 முர்ரா எருமைக் கடாவும், 1 சிந்தி பொலி காளையும், 4 செம்மறிக் கடாக்களும் குடியானவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. 88 உயர்ந்த இனச் சேவல்களும் வழங்கப் பட்டன. புதுப்பட்டி, மாயிநுமைப் பட்டி ஆகிய கிராம இளைஞர் சங்கங்களுக்கு 20 செம்மறி ஆடுகளும், 17 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கால் நடைகளுக்குத் தீவனம் அளிப்பதற்காக 5500 கினியா புல் நாற்றுகள் நடப்பட்டன. 'சான் பிளவர்' என்ற புல் 558 பவுண்டு வழங்கப்பட்டது.



காங்கேயக் கார் ஏறு

கால் நடை வளர்ச்சிக்கான பிரசார வேலைகள் நடைபெற்றன. புதுப்பட்டி, இராமச்சந்திர புரம் ஆகிய கிராமங்களில் இரண்டு கால் நடைக் கண்காட்சிகள் நடைபெற்றன. அவைகளில் சிறந்த கால் நடைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

வத்திராயிருப்பில் கால் நடை மருத்துவ விடுதி ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் ஒரு கோழிப் பண்ணையும் இணைக்கப்படும்.

அரசபட்டி கிராமத்தில் கால் நடை முதல் உதவி விடுதி ஒன்றையும், புதுப் பட்டியில் கோழிப் பண்ணை

ஒன்றையும் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**கல்வி**

இவ்வட்டாரத்தில் திட்ட காலத்திற்குள் (2-10-53—31-3-56) 31 தொடக்க நிலைப்பள்ளிகள் அடிப்படைக் கல்விப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. 5 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. ஹரிஜனச் சிறுவர்களுக்காக 5 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. கிராம ஊழியர்களின் முயற்சியால் பள்ளி செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளது.

**சமூகக் கல்வி அறிவு**

முதியவர்களுக்குக் கல்வி அறிவு ஊட்டும் நோக்கத்துடன் இரவு நேரங்களில் பள்ளிகள் நடத்தப்பட்டன. அதன்பயனாக இவ்வட்டாரத்தில் இதுவரை 586 முதியவர்கள் பிழையின்றி எழுதவும் செய்தித் தாள்கள் முதலியவற்றைப் படிக்கவும் தகுதியுடையவர்களாக ஆகிவிட்டனர். மேலும் 510 முதியவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 3 முதியோர் பள்ளிகளுக்குப் பெட்ரோமாக்ஸ் விளக்குகள், கரும்பலகைகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

கிராம மக்களின் உலகியல், பொது அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் 9 கிராமப் படிப்பகங்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன. பஞ்சாயத்தார் இதற்கான செலவில் பாதியை ஏற்றுக்கொண்டனர். 8 சமூக அறிவுக் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவைகளில் பல செய்தித்தாள்களும், வார, மாத இதழ்களும் வரவழைக்கப்



ஏழை முதியவர்களுக்குப் படிப்பு வசதி

படுகின்றன. இவைகளைப் படிக்காத மக்களுக்குப் படித்து விளக்கிக் காட்டுவதற்காக ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆண்டிற்கு ரூ. 80 வழங்கப்படுகிறது.

குழந்தை வளர்ப்பில் கிராம மக்களுக்குப் புத்துணர்ச்சியையும் ஆர்வத்தையும் உண்டு செய்யும் நோக்கத்துடன் மிகவும் நன்றாக வளர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டு தோறும் நேரு பிறந்த நாளன்று பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 22 ஊர்களில் நூற்புப் போட்டிகள் நடத்தப்பட்டு நூற்புத் தொழிலில் மக்களுக்கு ஆர்வம் அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தங்களது நிலையைப் பலராகக் கூடி உணர்ந்து தங்களது வாழ்வை முன்னேறச் செய்வதற்கான வழிகளை



சமுதாய மன்றம்

அமைத்துக்கொள்ளுவதற்காக 5 சமுதாய மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. குடியானவர்களுக்கு ஓழிந்த நேரத்தில் பொழுது போக்கிற்கான கேளிக்கைகளில் ஈடுபடவும் இளைப்பாறவும் 32 இளைப்பாறும் மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவைகளுக்கு வாங்கப்பட்ட விளையாட்டுக் கருவிகளின் விலையை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. 40 இடங்களில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. 217 கும்மி முதலிய களியாட்டங்கள் நடத்தப்பெற்றன. கிராம மக்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளவும், வேளாண்மைத்துறையில் நல்ல கருத்துக்

களைத் தெரிந்துகொள்ளவும், பாடல் முதலியவற்றை நுகரவும் வாய்பளிப்பதற்காக 5 வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 4 வானொலிப் பெட்டிகளை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2 பஜனை மடங்கள் நிறுவப்பட்டன.

பெண்கள் நலனுக்காக 3 மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் நூற்றல், பாய் முடைதல் போன்ற தொழில்களும், கல்வி அறிவும் கற்பிக்கப்படுகின்றன.

வானொலிகேட்டு வையத்தை உணர்கிருர்கள்



இளைஞர் நலனுக்காக 20 இளைஞர் சங்கங்களும் புதுப் பட்டியில் ஒரு குழந்தைகள் வகுப்பும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டு இளம் உழவர் சங்கங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 400 பெறுமானமுள்ள ஆடுகள், கோழிகள் முதலியன வாங்கி வழங்கப்பட்டுள்ளன. அத்தொகையில் ரூ. 300 ஐ அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எஞ்சியுள்ள ரூ. 100 ஐ அந்தந்தச் சங்கம் ஏற்றுக் கொள்கிறது. 61 கிராமங்களில் திரைப்படம் காட்டப் பட்டது.

**பொதுச் சுகாதாரம்**

கிராமங்களில் குடியிருப்புக்களைச் சுற்றிக் கழிவு நீர் தேங்காமலும் குப்பை குவியாமலும் இருப்பதற்காக ஊருக்குப் புறத்தில் குழிகள் வெட்டப்பட்டு அக்குப்பை கூளங்கள் அவைகளில் சேமித்து உரமாக்கப்பட்டன. இவ்வாறு இவ்வட்டாரத்தில் 124 குழிகள் வெட்டப்பட்டன. 7 சாக்கடைக் குழிகள் (Soakage Pits) கட்டப்பட்டன. நோய்க் கிருமிகள் பரவாமல் இருப்பதற்காக 30 வீடுகளில் உள்ளும் புறமும் மருந்து தெளிக்கப்பட்டது. 61 குடிநீர்க் கிணறுகளிலும் மருந்து தெளிக்கப்பட்டது. காலரா நோய் பரவாமல் இருப்பதற்காக 365 பேர்களுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 194 பேருக்கு டைபாயிடு தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

உணவு, சிற்றுண்டி, தேனீர் விடுதிகளில் சுகாதார விதிகள் கையாளப்படுகின்றனவா என்று பார்வையிடப் பட்டு அவ்விதிகளைக் கையாளுமாறு வற்புறுத்தப்பட்டது.

உணவுப் பொருள்களை ஈ முதலியன மொய்க்காமல் இருப்பதற்காக 10 கண்ணாடிப் பெட்டிகளை அவ்விடுதிகள் வாங்கி வைக்குமாறு வற்புறுத்தப்பட்டது. 100 பித்தளைப் பாத்திரங்கள் ஈயம் பூசப்பட்டன.

பள்ளிகளில் மாணவர்களுக்குச் சுகாதார விதிகள் போதிக்கப்பட்டன. இவ்வாறு 25 பள்ளிகளைச் சுகாதார அதிகாரிகள் பார்வையிட்டுப் பயிற்சி அளித்தனர். 9 பள்ளிகளில் நன்கு வளர்ச்சி பெறாத சிறுவர் சிறுமியர்களுக்குப் பால் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

கிராமங்களில் வார்தா முறையில் 2 கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன. அசுத்தமாக இருந்த 23 சேரிகளில் சுகாதார விதிகளை சுகாதாரத்துறையினர் எடுத்துக் கூறி மக்களின் மனத்தை மாற்றி அமைத்ததால் இப்பொழுது அச்சேரிகள் சுத்தமாக வைத்துக்கொள்ளப்படுகின்றன.

இவ்வட்டாரத்தில் சுகாதார நிலையம் ஒன்றினையும் 4 தாய்சேய் நல விடுதிகளையும் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## கூட்டுறவு

இவ்வட்டாரத்துக் குடியானவர்கள் கூட்டுறவு இயக்கத்தினால் மிகுந்த பயன் அடைந்துள்ளனர். அவர்களது வட்டித் தொல்லையும் கடன் தொல்லையும் நீங்கின. விளைபொருள்களை விற்பதற்கான வசதிகள் செய்து தரப்பட்டன. விதை, எரு, மாடு முதலியன வாங்குவதற்குக் கடன் உதவி செய்யப்பட்டது.

இவ்வட்டாரத்தில் உள்ள எல்லா ரெவின்யூ கிராமங்களும் (ஒன்றே ஒன்றைத் தவிர) கூட்டுறவு இயக்கத்தி

ஞல் பயனடைந்துள்ளன. திட்ட காலத்திற்கு முன்பிருந்தே இவ்வட்டாரத்தில் 23 கிராம நாணய சங்கங்களும், 5 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 8 கூட்டுறவுக் கருப்புக் கட்டிச் சங்கங்களும், 3 கூட்டுறவு வேளாண்மை வளர்ச்சிச் சங்கங்களும், ஒரு கூட்டுறவு மக்கள் நல்வாழ்வுச் சங்கமும் ஒரு கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கமும் ஒரு கூட்டுறவு கிராமக் கைத்தொழிற் சங்கமும் பணியாற்றிவந்தன.

திட்ட காலத்தில் 2 பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், 5 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியும், ஒரு மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்கமும், ஒரு வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளின் விவரம் வருமாறு :

1. பிள்ளையார் நத்தம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்

இந்தச் சங்கத்தில் 46 உறுப்பினர்கள் ரூ. 635 பங்கு முதல் இட்டுச் சேர்ந்துள்ளனர். இச்சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 5,520 கடன் வழங்கியுள்ளது.

2. வத்திராயிருப்புப் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கத்தில் ரூ 710 பங்கு முதலாகச் செலுத்தி 42 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அரசாங்கம் இச்சங்கத்திற்கு ரூ 12,695 கடன் உதவி செய்துள்ளது.

3. புதுப்பட்டி பாண்டியன் கூட்டுறவு நெசவாளர் சங்கம்

இச்சங்கத்தில் 260 தறிகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் ரூ 6,500 பங்கு முதலாக இட்டுள்ளனர். அவர்

களுக்குப் பங்குத் தொகை செலுத்தும் வகையில் அரசாங்கம் ரூ 5687 கடன் வழங்கியுள்ளது. இச்சங்கம் நன்கு இயங்குவதற்காக இராமநாதபுரம் கூட்டுறவு மைய வங்கி ரூ 13,000 கடன் கொடுத்துள்ளது. இச்சங்கம் ரூ 87,236 மதிப்புள்ள துணிகளை உற்பத்தி செய்து, ரூ 86,161 மதிப்புள்ளவற்றை விற்பனை செய்துள்ளது. செலவு போக ரூ. 3214 லாபம் கிடைத்துள்ளது.

## 4. இராமச்சந்திரபுரம் தேசீய லக்ஷ்மி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கத்தில் 193 தறிகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் ரூ. 5690 பங்கு முதலாகச் செலுத்தியுள்ளனர். அவர்களுக்குப் பங்குத் தொகை செலுத்தும் வகையில் அரசாங்கம் வட்டியின்றி ரூ 3860 கடன் கொடுத்துள்ளது இராமநாதபுரம் கூட்டுறவு மைய வங்கி இச்சங்கத்திற்கு ரூ 15,000 கடன் கொடுத்து உதவியுள்ளது. இச்சங்கம் ரூ. 1,94,653 மதிப்புள்ள துணிகளை உற்பத்தி செய்து ரூ. 2,01,792 மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது . செலவுபோகக் கிடைத்த மொத்தலாபம் ரூ. 8764.

## 5. சுந்தரபாண்டியம் சுந்தரகணேஷ் கூட்டுறவு நெசவாளர் சங்கம்

இச்சங்கத்தில் 205 தறிகள் வேலைசெய்கின்றன. உறுப்பினர்கள் இட்ட பங்கு முதல் ரூ 5125. பங்குத் தொகை செலுத்துவதற்கு ரூ. 4484 அரசாங்கம் வட்டியின்றிக் கடன் உதவி செய்துள்ளது. இச்சங்கம் ரூ. 46,869 மதிப்புள்ள துணிகளை உற்பத்தி செய்து ரூ. 49,582 மதிப்புள்ளவற்றை விற்பனை செய்துள்ளது. செலவு போகக் கிடைத்த மொத்த லாபம் ரூ. 2191.

108142

**6. சுந்தரபாண்டியன் காந்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

இச்சங்கத்தில் 219 தறிகள் வேலே செய்கின்றன. உறுப்பினர்கள் இட்ட பங்கு முதல் ரூ. 5475 பங்குத் தொகை செலுத்துவதற்காக அரசாங்கம் ரூ. 4791 வட்டியின்றிக் கடன் உதவி செய்துள்ளது. இச்சங்கம் ரூ. 61,084 மதிப்புள்ள துணிகளே உற்பத்தி செய்து விற்றுள்ளது. அதனல் இச்சங்கத்திற்குக் கிடைத்த மொத்த லாபம் ரூ. 3690.

**7. செல்வ விநாயகர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

இச்சங்கத்தில் 165 தறிகள் வேலே செய்கின்றன. உறுப்பினர்கள் ரூ. 700 பங்கு முதலாக அளித்துள்ளனர். பங்கு முதல் செலுத்துவதற்காக அவர்களுக்கு அரசாங்கம் ரூ 700 வட்டியின்றிக் கடன் உதவி அளித்துள்ளது.

**8. வத்திராயிருப்புக் கிராமக் கூட்டுறவு வங்கி**

மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் அவர்களின் புதிய திட்டப்படி துவங்கப்பட்ட 26 கிராமக் கூட்டுறவு வங்கிகளில் இதுவும் ஒன்று. இவ் வங்கி வத்திராயிருப்பு, நத்தம்பட்டி கோட்டங்களேச் சார்ந்த 10 கிராமங்களுக்குப் பயன் அளிப்பதற்காக ஏற்பட்டது. குடியானவர்களுக்கு நிலச்சீர் திருத்தம், கால்நடை வளர்ச்சி, பாசனவசதி முதலியவைகளில் உதவி செய்வதும் கடன் உதவி அளிப்பதும் இச்சங்கத்தின் நோக்கங்கள். தற்பொழுது 992 உறுப்பினர்கள் இச்சங்கத்தில் ரூ. 38,880 பங்கு முதல் இட்டுச் சேர்ந்துள்ளனர்.

நிலங்களின் ஈட்டின் பேரில் ரூ. 31,190ம் நகைகளின் ஈட்டின் பேரில் ரூ. 12,954ம் விளேபொருள்களின் பேரில்

ரூ. 23,113ம் இச்சங்கம் உறுப்பினர்களுக்குக் கடன்கொடுத்துள்ளது. இச்சங்கத்திற்காக ரூ. 15,000 செலவில் ஒரு கிடங்கு கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அரசாங்கமும் இதற்குப் பொருள் உதவி அளிக்கும்.

9. வத்திராயிருப்பு மீன்பிடிப்போர் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கத்தில் 50 பேர் ரூ. 900 பங்கு முதல் செலுத்தி உறுப்பினர்களாக ஆகியுள்ளனர்.

10. பல நோக்கக் கூட்டுறவு

உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதைத் தவிர அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல ஆக்கப் பணிகளை ஆற்றுவதுதான் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் முதல் நோக்கம். இவ்வட்டாரத்தில் 18 பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பணியை ஆற்றி வருகின்றன.

(i) கூட்டுறவு முறையில் கொள்முதல்

8 கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களின் குடும்பங்களுக்காக ரூ. 13,300 பெறுமான முள்ள பொருள்களை வாங்கி விற்றன. இதனால் 688 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

(ii) கோழி வளர்த்தல்

8 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாய மேனிலைத் திட்ட அலுவலகத்தாரிடமிருந்து ரூ. 250 மதிப்புள்ள கோழிகளையும் ரூ. 39-8-0 பெறுமான முள்ள கோழி முட்டைகளையும் வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளன.

**(iii) பொலிகாளைகளும் ஆட்டுக் கடாக்களும் வழங்குதல்**

உயர்ந்த இனக் கால் நடைகளைப் பெருக்குவதற்காகக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் மூவருக்குப் பாதி விலைக்குப் பொலிகாளைகளும், நால்வருக்கு ஆட்டுக் கடாக்களும் வழங்கப்பட்டன.

**(iv) மருத்துவ உதவி**

11 கூட்டுறவுச் சங்கங்கள் 197 பெறுமானமுள்ள டீசேன் மருந்துகளைப் பாதி விலைக்கு வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளன.

**(v) கூட்டுறவு விற்பனையும் கட்டுப்பாட்டுக் கடன் திட்டமும்**

உகந்தாப் பருத்திக்கான கட்டுப்பாட்டுக் கடன் திட்டம் இவ்வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 சங்கங்களின் வாயிலாக நடைபெற்று வருகிறது. இந்த 11 சங்கங்களும் ஸ்ரீவில்லிபுத்தூர் உகந்தா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உறுப்புக்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 354 பேர்களுக்கு அவர்களது நிலத்தில் விளைந்த பருத்தியின் பேரில் ரூ. 82,260 கடனுகை உதவப்பட்டது. இச்சங்கங்கள் ரூ. 97,750 பெறுமானமுள்ள பருத்தியை விற்பனைச் சங்கத்தின் வாயிலாக விற்றுள்ளது. இத்திட்டம் பின்னுல் மிளகாய்ச் சாகுபடிக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அந்த வகையில் ரூ. 27,000 கடனுகைக் கொடுக்கப்பட்டது.

## பழைய சங்கங்களைப் புதுப்பித்தல்

கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சரியாக வேலை செய்யாதிருந்த நத்தப்பட்டிக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகம்

புதுப்பிக்கப்பட்டது. புதியதாக 60 உறுப்பினர்கள் ரூ. 600 பங்கு முதலுடன் சேர்க்கப்பட்டனர். இதுபோல் குன்னூர், வலையங்குளம் முதலிய கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டன.

அனைத்து இந்தியக் கிராமக் கடன் மதிப்பீட்டு அறிக்கையின்படி (சர்வே ரிப்போர்ட்) மம்சாபுரத்தில் ஒரு வேளாண்மை வங்கி நிறுவப்பட்டது. தற்சமயம் 150 உறுப்பினர்கள் உள்ளனர். ரூ. 15,000 செலவில் ஒரு தானியக்கிடங்கு கட்டுவதற்கான ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

## கதர் உற்பத்தி

கிராமங்களில் வேலையின்றி இருப்போருக்கு வேலை கொடுக்கும் நோக்கத்துடன் கதர் உற்பத்தித் தொழில் இவ்வட்டாரத்தில் பெருக்கப்பட்டது. 395-ராட்டைகள் புதிதாக வழங்கப்பட்டன. இதுவரை ரூ. 2208 மதிப்புள்ள ராட்டைகள் வழங்கப்பட்டன. ரூ. 2,314 பெறுமானமுள்ள கதர்ச் சிட்டங்கள் சேர்க்கப்பட்டன. ரூ. 3099 மதிப்புள்ள கதர் உற்பத்தியாகி விற்கப்பட்டது. ரூ. 2,314-க்கு கதர் ஹுண்டி விற்பனையாயிற்று. 24 நூற்புப் போட்டிகள் நடத்தப்பெற்றன.

இவ்வட்டாரத்தில் கதர் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய தொரு திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. அத்திட்டப்படி ஆண்டு தோறும் இவ்வட்டாரத்தில் 1000 ராட்டைகள் வழங்கப்படும். பஞ்சு வாங்கி நூற்போருக்கு வாங்கின விலைக்கே விற்கப்படும். உற்பத்தியான கதரை அரசாங்கமே வாங்கிக்கொள்ளும். 10 பஞ்சு உடைக்



கிராமம் வளம்பெறச் சுழலும் இராட்டைகள்

கும் கருவிகளும், பட்டைபோடும் கருவிகளும் இவ்வட்டாரத்து மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தால் இவ்வட்டாரத்தில் உள்ள 1000 குடும்பங்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும். ஆண்டுதோறும் ரூ. 1,00,000 அதிக வருவாய் கிடைக்கும்.

**போக்குவரவு**

இவ்வட்டாரத்தைச் சார்ந்த கொத்தங் குளம், அக்கணுபுரம், வடுகப்பட்டி, மூவரை வென்றான், சுரைக்கா பட்டி, காடனேறி, மானகசேரி, கோட்டையூர், நத்தம் பட்டி, கட்டயத் தேவன் பட்டி ஆகிய ஊர்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மங்கலம், வடுகப்பட்டி ஆகிய கிராமச் சாலைகளுக்குச் செம்மண பரப்பப்பட்டது. கொத்தங் குளம் கிராமச்சாலையில் செம்மண் பரப்பப்பட்டு வருகிறது. காடனேரி சாலை

யில் ஒரு பாலம் கட்டப்பட்டது. அக்கனுபுரம் சாலையில் ஒரு கண்மாயின் மடை நீட்டிக் கட்டப்பட்டது.

மேற்கூறிய சாலை அமைப்பு வேலைகள் எல்லாம் பொறி இயல் துறையினரின் பணிகள். இனி அவர்கள் செய்த வேறு பல பணிகளையும் காண்போம்.

**பள்ளிக் கட்டிடங்கள்**

வலையபட்டி கிராமத்தில் ஒரு தொடக்க நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

தம்பி பட்டி, சேதுநாரயணபுரம் ஆகிய இரு கிராமங்களின் பள்ளிகளின் கட்டிடங்கள் விரிவாகக் கட்டப்பட்டன.

கரிசல் குளம்பட்டி கிராமத்தில் ஒரு புசய தொடக்க நிலைப்பள்ளிக்குக் கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

**சுகாதாரம்**

மம்சாபுரத்தில் ஒரு கக்கூஸும், வத்திராயிருப்பில் 8 கக்கூஸ்களும், மஹாராஜ புரத்தில் 5 கக்கூஸ்களும், இராமநாதபுரத்தின் ஒரு கக்கூஸும், சேதுநாரயண புரத்தில் ஒரு கக்கூஸும், புதுப் பட்டியில் 3 கக்கூஸுகளும் கட்டப் பட்டுள்ளன.

அழகு தெய்வேந்திரபுரத்திலும், மம்சாபுரத்திலும் குளிக்கும் அறைகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

சித்தாலம் புத்தூர், சின்ன அத்தி குளம், மம்சாபுரம், வத்திராயிருப்பு, சேதுநாரயணபுரம், சுணக்காபட்டி, கொண்டயம்பட்டி, பிள்ளையார் நந்தம், கரிசல்குளம் ஆகிய கிராமங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப் பட்டுள்ளன,

தைலா குளம், கரிசல் குளம், சுந்தரபாண்டியம், புதுப் பட்டி, அத்தி குளம், சேதுநாராயணபுரம், ராமச்சந்திர

புரம் ஆகிய கிராமங்களிலுள்ள தெருக்களுக்குச் சரளை பரப்பப் பட்டிருக்கின்றது.

தைலா குளம், கரிசல்குளம், சுத்தி குளம், கரிசல் குளம்பட்டி, பெருமாள்தேவன்பட்டி, சுரைக்காபட்டி ஆகிய கிராமங்களில் உள்ள களங்கள் செப்பனிடப் பட்டன.

மம்சாபுரத்தில் மொத்தம் சுமார் 2600 அடி நீள முள்ள 10 சாக்கடைகள் கட்டப் பட்டன. சேதுநாரயணபுரத்தில் மொத்தம் 1200 அடி நீள முள்ள 2 சாக்கடைகள் கட்டப் பட்டன. சுந்தரபாண்டியத்தில் மொத்தம் சுமார் 1900 அடி நீள முள்ள 6 சாக்கடைகள் கட்டப் பட்டுள்ளன.

இராமசாமி புரத்தில் மொத்தம் 1100 அடி நீள முள்ள 5 சாக்கடைகள் கட்டப் பட்டுள்ளன. பி. ராமச்சந்திரபுரத்தில் சுமார் 400 அடி நீள முள்ள ஒரு சாக்கடை கட்டப் பட்டது. புதுப்பட்டியில் மொத்தம் சுமார் 400 அடிகள் நீள முள்ள 14 சாக்கடைகள் கட்டப்பட்டுள்ளன. கான்சாபுரத்தில் 640 அடி நீளமுள்ள 3 சாக்கடைகளும் வத்திராயிருப்பில் 2700 அடி நீள முள்ள 12 சாக்கடைகளும் கட்டப் பட்டுள்ளன,

### குடி தண்ணீர் வசதி

கும்மாம்பட்டி, கட்டாயத்தேவன்பட்டி, அரசியாள் பட்டி, புதூர், சுரைக்கா பட்டி, மாலைப்பட்டி, வடிகபட்டி. நெடுங்குளம், புதுப்பட்டி, வத்திராயிருப்பு, தொட்டிய பட்டி ஆகிய ஊர்களில் புதிய கிணறுகள் வெட்டப் பட்டுள்ளன. 26 கிராமங்களில் உள்ள பழைய கிணறுகள் செப்பனிடப்பட்டன.

பி. கிருஷ்ணபுரம், சின்னக் கோட்டையூர், ரெங்க பாளையம் ஆகிய ஊர்களில் இளைப்பாறும் விடுதிகள் கட்டப்பட்டன. அத்திகுளம், சித்தலாம்பத்தூர் கொத்தங் குளம் ஆகிய ஊர்களில் ஏற்கெனவே இருந்த இளைப்பாறும் விடுதிகள் செப்பனிடப்பட்டன.

வலையன் குளத்தில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. பி, கிருஷ்ணபுரத்தில் ஒரு வாய்க்கால் தோண்டப்பட்டது.

நத்தம்பட்டி, அப்பய நாய்க்கர் பட்டி, கரிசல் குளம் பட்டி, சேதுநாராயணபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள படிப்பகங்களுக்காகக் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

சுகாதார வசதியுடன் கட்டப்பட்ட கிணறு



வத்திராயிருப்பில் ரூ. 20,000 செலவில் ஒரு மகப்பேறு விடுதிக்குக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேல்குறிப்பிட்ட பணிகளில் சாலைகள் அமைப்பதற்காக ரூ. 25,454-6-0ம், சுகாதார வசதிகளுக்காக ரூ. 1,18,046-10-0ம் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் முதலியன கட்டுவதற்காக ரூ. 2498-ம் செலவிடப்பட்டது.

**குடியானவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்**

இத்திட்டம் 1955ம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்நத்தம்பட்டிக் கோட்டத்தைச் சேர்ந்த ந. லக்ஷிமிபுரம் கிராமத்தில் 32 ஹரிஜனக் குடியானவர்களுக்கு ஒருவருக்கு ரூ. 750 வீதம் கடன் கொடுக்கப்பட்டு 32 வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டிட வேலை சமுதாய மேநிலைத் திட்ட அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் நடந்து வருகிறது.

## சிவகாசி சமுதாய மேனிலைத் திட்ட வட்டாரம்

இவ் வட்டாரத்தில் 3 கோட்டங்கள் அமைந்துள்ளன. 43 கிராமங்கள் அடங்கியுள்ளன. அவைகளின் மொத்தப் பரப்பு 192 7 சதுர மைல்கள். இவ்வட்டாரத்தில் 92,468 மக்கள் வாழ்கின்றனர்.

சமுதாய மேனிலைத் திட்டத்தின் கீழ் இவ்வட்டாரம் பலவகையாக முன்னேற்றமடைந்துள்ளது.

**வேளாண்மை**

1675·38 ஏக்கரில் நெல் முதல் நிலைப் பொறுக்கு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. 14,274·56 ஏக்கர் நிலத்தில் கம்பு பொறுக்கு விதைப் பண்ணைகளும், 1858·48 ஏக்கர்

நிலத்தில் சோளம் பொறுக்கு விதைப் பண்ணைகளும்; 2761·49ஏக்கரில்கேப்பைபொறுக்கு விதைப் பண்ணைகளும்; 392·09 ஏக்கரில் நிலக்கடலைப் பொறுக்கு விதைப் பண்ணைகளும் அமைக்கப்பட்டு பொறுக்கு விதைகள் பெருக்கப்பட்டன. 1783மணங்குப்பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

ரூ. 263-12-0 பெறுமானமுள்ள 10 வரப்புக் கட்டும் கருவிகளும், ரூ. 180 பெருமானமுள்ள 3 கொழுக்கலப்பைகளும், ரூ. 80-4-0 பெறுமானமுள்ள 6 ஜப்பானியக் களை எடுக்கும் கருவிகளும், ரூ. 200 பெறுமானமுள்ள 8 கவலைச் சக்கரங்களும், ரூ. 71-4-0 பெறுமானமுள்ள தழை அமுக்

ஜப்பானிய முறையில் நாற்று நடுதல்



கும் கருவி ஒன்றும், ரூ. 2711-4-0 பெறுமானமுள்ள 18 மருந்துத் தூவிகளும், ரூ. 895-8-0 பெறுமானமுள்ள 9 மருந்துத் தூவிகளும் குடியானவர்களுக்குப் பாதி விலைக்குக் கொடுக்கப்பட்டன. மற்றப் பாதியை ஏற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் ரூ. 2076-5-0 வழங்கியுள்ளது.

796 ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதனால் விளைச்சல் அதிகரித்தது. எடுத்துக்காட்டாக ஆலங்குளம் என்னும் கிராமத்தில் திரு. ராமசாமி நாயக்கர் என்பவர் தமது 60 ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்தார். அதற்கு முன்பு அவரது நிலத்தில் 1200 மூட்டை நெல் கண்டு முதலாகி வந்தது. ஜப்பானிய முறைச் சாகுபடியால் கண்டு முதல் 1440 மூட்டைகளாக அதிகரித்தது. அதாவது 240 மூட்டை நெல் அதிகமாக விளைந்துள்ளது.

இவ்வட்டாரத்தில் உப்பு உரத்தைப் பயன்படுத்துவதற்கான பிரசார வேலைகள் நடைபெற்றன. நெல், சோளம், மிளகாய், பருத்தி, வாழை, வெங்காயம், சேனை ஆகியவை பயிரிடப்பட்ட 166 இடங்களில் உப்பு உரம் செயல் முறைச் சான்றாக இடப்பட்டு அதனால் ஏற்பட்ட பயன் குடியானவர்களுக்குக் காட்டப்பட்டது. அமோனியா உப்பு உரம் 5600 பவுண்டும், யூரியா உப்பு 5105 பவுண்டும், அமோனியம் சல்பேட்டை நைட்டிரேட் உப்பு 5254 பவுண்டும், சூப்பர்பாஸ் பேட் 8111 பவுண்டும், கலப்பு உரம் 2348 பவுண்டும் இலவசமாக வழங்கப்பட்டன. இவைகளினால் நம்பிக்கையுற்ற இவ்வட்டாரக் குடியானவர்கள் 2,00,646 பவுண்டு அமோனியா உப்பு உரத்தையும் 29,792 பவுண்டு சூப்பர்பாஸ் பேட்டையும் விலைக்கு வாங்கித் தங்களது நிலங்களில் இட்டுப் பயனடைந்துள்ளனர்.

னைற்றுப் பாசனமுள்ள 1546 ஏக்கர் நிலத்து வரப்பு ஓரங்களிலும், 25 ஏக்கர் நிலத்தில் தனிப்பயிராகவும் சல்பேனியா என்ற பசுந்தழை உரச் செடி பயிரிடப்பட்டது. இதைத் தவிர 22 ஏக்கர் நிலத்தில் மிளகாய்ச்செடியாவும், 44 ஏக்கரில் கொடிப் பூவரசும் பயிரிடப்பட்டன.

1954-55-ல் சாமிநத்தம் கிராமத்தில் ரூ. 4825 செலவில் 200 ஏக்கர் தரிசுநிலம் டிராக்டர்களால் உழுது பண்படுத்தப்பட்டது. 1955-56ல் வடபட்டி கிராமத்தில் 300 ஏக்கர் நிலம் ரூ. 7,237 செலவில் டிராக்டரால் பண்படுத்தப் பட்டது. அதன் பயனாய் ஏற்பட்ட மொத்த வருமானம் 37,500 ரூபாய். 1956-57-ல் கீழாண்மறைக்காடு என்ற கிராமத்தில் 300 ஏக்கரையும், கோயில் செந்தட்டியாபுரத்தில் 200 ஏக்கரையும் டிராக்டரால் பண்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

371 ஒட்டுமாங் கன்றுகள், 1183 கொய்யாக் கன்றுகள், 30 சப்போட்டாக் கன்றுகள், 5 மாதுளங் கன்றுகள், 27 பப்பாளிக் கன்றுகள், 10 ஆரஞ்சுக் கன்றுகள், 10 எலுமிச்சைக் கன்றுகள், 239 தென்னம் பிள்ளைகள் முதலியன ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வரவழைக்கப்பட்டு இவ் வட்டாரத்துக் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. இவ் வட்டாரத்தில் 8226 மரக் கன்றுகள் "மரம் நடு வாரங்களில்" நடப் பெற்றன.

குப்பைகளைப் பதனிட்டு உரமாக்கும் முறை 372 இடங்களில் செய்து காண்பிக்கப்பட்டன. 2220 டன் பதனிட்ட குப்பை உரம் (கம்போஸ்ட்) தயாரிக்கப்பட்டது. மாட்டு உரத்தைச் சேகரித்து வைப்பதற்கு 213 உரக்குழிகள் வெட்டப்பட்டுள்ளன. 26 மாட்டுக் கொட்டங்கள் அமைக்கப்பட்டன.

210 ஏக்கரில் காய்கறிகள் பயிரிடப்பட்டன.

இவ் வட்டாரக் குடியானவர்களுக்காக உரம் விதை வாங்குவதற்காக ரூ. 1,47,380-ம் ஆயில் எஞ்சின் வாங்குவதற்கு ரூ. 1800-ம், மின்சார மோட்டார் பம்பு செட்டு வாங்க ரூ. 62,050-ம், மாடுகள், வண்டிகள் வாங்கவும் கிணறுகள் கட்டுவதற்கும் ரூ. 1,31,550-ம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மொத்தம் ரூ. 3,42,780 கொடுக்கப்பட்டுள்ளது.

சிவகாசி, ஆலங்குளம் முதலிய இடங்களில் வேளாண்மைப் பொருட் காட்சிகள் நடத்தப் பெற்றன. விளைச்சல் போட்டிகள் நடைபெற்றன. 1954-55-ல் நடைபெற்ற விளைச்சல் போட்டியில் 161 குடியானவர்களும், 1955-56-ல் நடைபெற்றதில் 35 குடியானவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். உழவுப் போட்டிகளும் நடைபெற்றன.

குடியானவர்கள் ஒழிந்த நேரங்களில் தங்களது வருவாயை அதிகப்படுத்துவதற்காக 32 தேன் கூடுகளும், 5 தேன் எடுக்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. 6200 மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

## கால் நடை வளர்ச்சி

இவ் வட்டாரத்தில் உள்ள கால் நடைகளுக்கு மருத்துவ வசதியும் நோய்த்தடுப்பு வேலையும் செய்வதற்காக 2 கால் நடை மருத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 11098 கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. 1847 காளைகளுக்குக் காயடிக்கப்பட்டது. 38465 கால் நடைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

தொத்து நோய் பரவாது இருப்பதற்காக 1000 ஆடுகளுக்கு மருந்து வழங்கப்பட்டது.

உயர்ந்த இன வளர்ச்சிக்காக இவ் வட்டாரத்தில் 7 பொலி காளைகள் உள்ளன. 490 உயர்ந்த இனக் கோழிகளும் சேவல்களும் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன.

கறவை மாடுகள் வாங்கும் பொருட்டு 27 குடியானவர்களுக்கு ரூ. 5400 வரை கடன் கொடுக்கப்பட்டது. வடமலாபுரத்தில் ஒரு பால் பண்ணை அமைக்கப்பட்டது.

### கல்வி

இவ் வட்டாரத்தில் 3 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. 99 முதியோர் பள்ளிகள் திறக்கப்பட்டு 1600 முதியவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 66 இளைப்பாறும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 414 கேளிக்கைகள் நடைபெற்றன.

### சுகாதாரம்

510 கழிவுநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. 34 கிராமக் கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன. 7150 கெஜம் மொத்த நீளமுள்ள சாக்கடைகள் வெட்டப்பட்டுள்ளன. புதிதாக 16 கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. 54 பழைய கிணறுகள் பழுது பார்க்கப்பட்டன.

### போக்குவரவு

14·3 மைல் மொத்த நீளமுள்ள 'கப்பித்தளச் சாலைகளும், 25 மைல் மொத்த நீளமுள்ள மண்சாலைகளும் போடப்பட்டுள்ளன.



மக்கள் ஒன்று பட்டுச் சாலை அமைக்கிறார்கள்

கூட்டுறவு

7 கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களும், தீவிர வேளாண்மைச் சங்கம் (Better Farming) ஒன்றும், கிராம வீடுகட்டும் சங்கம் ஒன்றும் இவ்வட்டாரத்தில் திட்ட காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

## ராஜபாளையம் தேசீய வளர்ச்சித் திட்ட வட்டாரம்

ராஜபாளையம் வட்டாரம் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பலவகையாக முன்னேற்றமடைந்துள்ளது. அதன் விவரத்தை விரிவாகக் காண்போம்.

வேளாண்மை

இவ்வட்டாரத்தில் குடியானவர்களுக்கு 6 மணங்கு 1663. பவுண்டு நெல்பொறுக்கு விதைகளும், 56 மணங்கு 290 பவுண்டு கருங்கண்ணி பருத்தி விதையும், 6 மணங்கு 170 பவுண்டு கேப்பை விதையும், 12½ பவுண்டு காய்கறி

கள் விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஜப்பானிய முறைப்படி 4700 ஏக்கர் நிலத்தில் வரிசையாக நெல் நடப்பட்டது. 185 ஏக்கர் நிலத்தில் புதிய முறையில் சாகுபடி செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக 1165 ஏக்கர் தரிசு நிலம் டிராக்டரால் உழுது காண்பிக்கப்பட்டது. 41740 ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்களின்மீது பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது. 572·90 ஏக்கர் நிலத்தில் மருந்து தூவப்பட்டது.

860 ஏக்கர் நிலத்தில் சீமை அகத்தி பயிரிடப்பட்டது. 7945 ஏக்கர் நிலத்தின் வரப்போரங்களில் சீமைக் கருவேலை நடப்பட்டன. 204 கம்போசிட் குழிகள் வெட்டப்பட்டன. 258 பழைய குழிகள் புதுப்பிக்கப்பட்டன. 1118 டன் 1725 பவுண்டு அமோனியம் சல்பேட்டு வழங்கப்பட்டது.

785 இளநீர்சிடியா போத்துக்களும், வேறு வகையான 3875 போத்துகளும், 75 பழமரக்கன்றுகளும் நடப்பட்டன.

குடியானவர்களுக்கு 50 தேன் கூடுகளும் பாதி விலைக்கு 8320 மீன் குஞ்சுகளும் வழங்கப்பட்டன. 133 ஏக்கர் தரிசு நிலங்கள் திருத்திப் பண்படுத்தப்பட்டன.

### கால்நடை வளர்ச்சி

இவ்வட்டாரத்தில் உள்ள 1597 கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. 816 காளைகளுக்குக் காயடிக்கப்பட்டது. 10173 கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. உயர்ந்த இன வளர்ச்சிக்காக 4 காங்கேயம் பொலி காளைகளும், 8 ஆட்டுக் கடாக்களும், 136 உயர்ந்த இனச் சேவல்களும், 1694 உயர்ந்த இளங் கோழிகளின் முட்டைகளும் வழங்கப்பட்

டன. 1295 ஆடுகளுக்குப் பூச்சி மருந்து கொடுக்கப்பட்டது. தளவாய்புரத்தில் கால்நடைக் கண்காட்சி ஒன்று நடத்தப்பெற்றது.

**சுகாதாரம்**

இவ்வட்டாரத்தில் 143 கழிவு நீர்க்குழிகள் கட்டப்பட்டன. 44 கிராமக் கக்கூஸ்களும், 3253 கெஜ மொத்த நீளமுள்ள சாக்கடைகளும் கட்டப்பட்டுள்ளன.

**கல்வி**

இவ்வட்டாரத்தில் 4 புதிய தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன.

**சமூகக் கல்வி**

திட்டகாலத்தில் (2-10-54 முதல் 31-3-56 முடிய) 6 இளைப்பாறும் விடுதிகளும் 15 கலை நிகழ்ச்சி மன்றங்களும் இவ்வட்டாரத்தில் நிறுவப்பட்டுள்ளன. 54 கிராமங்களில் கூட்டங்கள் நடைபெற்றன. அப்பொழுது சமூக அறிவுக் கல்வியின் தேவையையும் பயனையும் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. 18 முதியோர் கல்விப் பள்ளிகள் திறக்கப்பட்டு 435 முதியவர்கள் கல்வி அறிவு பெற்று வருகின்றனர்.

**போக்கு வரவு**

புதிதாக 10 மைல் நீளமுள்ள கப்பி சாலைகளும் 5¼ மைல் நீளமுள்ள மண்சாலைகளும் போடப்பட்டன. இவற்றைத் தவிர உள்ளூர் பட்டி-சிவகாமி சாலை, தேவதானம், மதுரைத் தென்காசி சாலை, தேவதானம் பெரிய கோயில் சாலை, இளந்திர கொண்டான் செட்டியார் பட்டி சாலை, அருள்புத்தூர் சாலை, முதுகுடி-ராமலிங்கபுரச் சாலை ஆகியவையும் போட்டு முடிக்கப்பட்டன.



தாழ்வு...
நீங்க!

சாதிக் கொடுமைகள் வேண்டாம்;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

—பாரதியார்.

# தாழ்வு . . .
# நீங்க!

சமுதாயம் ஓர் உடலைப் போன்றது. உடலின் எல்லா உறுப்புக்களும் தகுந்த முறையில் வளர்ந்து குறையின்றி இருந்தால்தான் அவ்வுடலைக் கட்டுறுதியும் கவர்ச்சியும் நிறைந்தது என்று கருதுகிறோம். ஓர் உறுப்புமட்டும் அளவிற்கு மீறிப் பருத்து மற்ற உறுப்புக்கள் மிகவும் சூம்பிப் போயிருந்தால் அவ்வுடலை யாரும் விரும்புவதில்லை.

அதுபோல்தான் சமுதாயமும். சமுதாயத்தில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடும் ஓர் இனம் பிறிதோர் இனத்தை வளரமுடியாமல் அமுக்கி வைக்கும் ஈரமற்ற கொடுமையும் இருந்தால் அச்சமுதாயம் நல்ல சமுதாயம் அன்று. சமுதாயத்தின் பல இனத்தவர்களும் சரிசமமான வாய்ப்புக்களும் வளர்ச்சியும் பெற்றிருந்தால்தான் அது வளமும் உறுதியும் நிறைந்து விளங்கமுடியும்.

காந்தியடிகள் நீண்ட நாட்களாகப் பழக்கத்தில் இருந்து வந்த தீண்டாமைக் கொடுமையைக் குழி தோண்டிப் புதைத்து அருளினர். அவரது அருள் நெறியில் நடந்து செல்லும் நமது அரசாங்கம் தாய் தன் நோயுற்ற குழந்தையை மிகவும் அக்கறையுடன் பேணுவதைப் போன்று தாழ்த்தப்பட்ட இனத்தவர்களாகிய ஹரிஜனங்களுக்கும், ஏனைய பின் தங்கிய வகுப்பினர்களுக்கும் நல்வாழ்வு தந்து நலனளித்து வந்துள்ளது.

கல்வி நிலையங்களில் அவர்களுக்கென்று தனிப்பட்ட இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. உதவிச் சம்பளம் (Scholarships) வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் பின்தங்கிய வகுப்போர், குற்றப் பரம்பரை வகுப்பினர், ஹரிஜனங்கள் ஆகியோரின் மக்கள் 1,04,939 பேருக்கு அவ்வாறு உதவிச் சம்பளம் வழங்கப்பட்டது. அந்த வகையில் அரசாங்கம் ரூ 83,90,952 செலவிட்டுள்ளது. இந்த வகுப்புக்களைச் சார்ந்த மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதிகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வகுப்பாருக்குக் கல்வி வசதி அளிக்கும்பொருட்டுக் கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் ரூ. 4,05,68,675 செலவிட்டுள்ளது. நிலமில்லாதோருக்கு நிலமும், உழுவதற்கு மாடில்லாதோருக்கு உழவு மாடுகளும், குடியிருக்க வீடில்லாதோருக்குச் சுகாதார வசதிகளுடன் கூடிய வீடுகளும், காலி மனைகளும் வழங்கப்படுகின்றன. குடி நீர் வசதிக்காகக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இந்தவகையில் அரசாங்கம் சென்ற ஐந்தாண்டுகளில் ரூ. 43,35,411 செலவிட்டுள்ளது. மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக ரூ. 8,26,078 செலவிடப் பட்டுள்ளது.



ஹரிஜனங்களுக்குக் கட்டித் தரப்பட்டக் குடியிருப்பு

தீண்டாமை குற்றம் என்று சட்டம் இயற்றப்பட்டது. பொது இடங்களில் மற்ற இனத்தவர்களுடன் வேறுபாடின்றிப் பழகுவதற்குச் சட்டத்தால் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இந்தவகையில் ரூ. 1,64,632 செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பலவகைத் தொண்டுகளைச் செய்வதற்கு நமது அரசாங்கம் ஹரிஜன முன்னேற்ற நலத்துறை என்ற ஒரு துறையை நிறுவியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இப் பணிகளுக்கான அரசாங்கம் மொத்தம் ரூ. 5,83,11,735 செலவிட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் ஹரிஜன முன்னேற்றத் துறையின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசாங்கம் செய்துள்ள திருப்பணிகளை ஆண்டுவாரியாகக் கவனிப்போம்.

## 1951-52-ம் ஆண்டு

இந்த ஆண்டில் ஹரிஜன முன்னேற்ற நலத்துறை இம் மாவட்டத்தில் 13 ஹரிஜனப் பள்ளிகளையும், 2 கள்ளர் பள்ளிகளையும் நடத்தி வந்தது. ஹரிஜனப் பள்ளிகளில் 980 மாணவர்கள் படித்து வந்தனர். இவர்களில் 838 பேர் ஹரிஜன மாணவர்கள். 142 பேர் மற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்கள். இப் பள்ளிகளில் 33 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். இப் பள்ளிகளில் பயிலும் மாண வர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டது இந்தவகையில் இந்த ஆண்டில் அரசாங்கம் ரூ. 31,450-5-9 செலவிட்டுள்ளது. 838 மாணவர்கள் நல்ல சத்துள்ள உணவு கிடைக்கப் பெற்று நல்ல உடல் நிலையுடன் விளங்கினர்.

இந்த ஆண்டில் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் படித்த 337 பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 5895-3-0 பொருள் உதவி செய்யப்பட்டது. விடுதிகளில் தங்கிப் படிக்கும் 36 மாணவர்களுக்கு ரூ. 5767 பொருள் உதவி செய்யப்பட்டது.

கல்லூரிகளில் படித்த 50 பின்தங்கிய வகுப்பு மாண வர்களுக்கு ரூ. 6904-10-0 பொருள் உதவி செய்யப் பட்டது. விடுதிகளில் தங்கிக் கல்லூரிகளில் படிக்கும் 63 மாணவர்களுக்கு ரூ. 24,852-12-0 பொருள் உதவி அளிக்கப்பட்டது.

இம் மாவட்டத்தில் பரமக்குடி, கீழுர், வத்திராயிருப்பு, திருப்பத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீ வில்லிபுத்தூர், மானாமதுரை, ராஜபாளையம், தேவகோட்டை, மல்லன்கிணறு, சிவகங்கை முதலிய இடங்களில் ஹரிஜன மாணவர் இல்லங்கள் நடைபெற்று வந்தன. இவைகளில் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், அருப்புக்கோட்டையிலும் இரண்டு மாணவர் இல்லங்கள் நடைபெற்று வந்தன. இவைகளில் மொத்தம் 189 ஹரிஜன மாணவர்களும் 161 ஏழைய பின் தங்கிய வகுப்பு மாணவர்களும் தங்கிப் படித்தனர். இந்த ஆண்டில் இந்த இல்லங்களுக்கு அரசாங்கம் ரூ. 51,965 பொருள் உதவி அளித்துள்ளது.

இவற்றைத்தவிர 73 வடுவர்பட்டி குறவர் மாணவர்களுக்காக அருப்புக்கோட்டையில் ஒரு மாணவர் இல்லம் நடத்தப்பெற்றது. இந்த இல்லத்திற்கு அரசாங்கம் இந்த ஆண்டில் ரூ. 10,585 பொருள் உதவி அளித்துள்ளது.

இந்த ஆண்டில் ஹரிஜனப் பள்ளிகளுக்கு மேஜை, பெஞ்சு மற்ற கருவிகள் முதலியன வாங்குவதற்காக ரூ. 4227-6-6 வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த மாவட்டத்தில் உள்ள ஹரிஜன மாணவர்களுக்கும் ஏழைய பின்தங்கிய மாணவர்களுக்கும் அரசாங்கம் கல்வித்துறையில் 1,44,609 ரூபாய் செலவிட்டுள்ளது.

### காலிமனை வழங்கல்

1951-52-ம் ஆண்டில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக அரசாங்கம் மொத்தம் 4.30 ஏக்கர் கொண்ட 4 காலிமனைகளை வழங்கியுள்ளது. இக்காலி மனைகளை

அரசாங்கம் ரூ. 2574 3-9க்கு விலை கொடுத்து வாங்கி ஹரிஜனங்களுக்கு வழங்கியுள்ளது.

குடிநீர் வசதி

1951-52-ம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 42 கிணறுகள் புதிதாகக் கட்டப்பட்டன. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள கீழப் பொட்டல்பட்டியில் ஒரு கிணறும், அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள நார்த்தம்பட்டியில் ஒரு கிணறும் பழுதுபார்த்துச் செப்பனிடப்பட்டன.

## 1952-53-ம் ஆண்டு

இந்த ஆண்டில் 13 ஹரிஜனப் பள்ளிகளிலும் 942 மாணவர்கள் கல்வி பயின்றனர். இரண்டு கள்ளர் பள்ளிகளில் 147 மாணவர்கள் கல்வி பயின்றனர். இவர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டது. இந்த வகையில் அரசாங்கம் ரூ. 25,905 செலவிட்டுள்ளது. 1030 மாணவர்கள் நல்ல சத்துள்ள உணவு பெற்று நல்ல உடல் நலத்துடன் விளங்கினர்கள்.

இரண்டு கள்ளர் பள்ளிகளுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவதற்காக ரூ. 99-14-6-ம் ஹரிஜனப் பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலி கருவிகள் முதலியன வாங்குவதற்காக ரூ. 2,359-ம் வழங்கப்பெற்றது.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 298 மாணவர்களுக்கு ரூ. 5951-5-0-ம் மாணவர் இல்லங்களில் பயிலும் 22 மாணவர்களுக்கு ரூ. 3612-ம் அரசாங்கம் பொருள் உதவி செய்துள்ளது.

கல்லூரிகளில் பயிலும் 82 மாணவர்களுக்கு ரூ. 6,779 12-0 பொருள் உதவி அளிக்கப்பட்டது. இல்லங்களில் தங்கிக் கல்லூரிகளில் பயிலும் 113 மாணவர்களுக்கு ரூ. 46,164-6-0 வழங்கப்பட்டது.

1952-53 தொடக்கத்தில் இம்மாவட்டத்தில் ஹரிஜன மக்களுக்காகவும் ஏனைய பின்தங்கிய வகுப்பினருக்காகவும் தனிப்பட்ட முறையில் 13 மாணவர் இல்லங்கள் நடத்தப்பட்டுவந்தன. இந்த ஆண்டிற்குள் விருதுநகரில் ஒரு ஹரிஜன மாணவர் இல்லமும், சாத்தூரில் ஏ. வி. உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லமும், பரமக்குடியில் ராஜாஜி மாணவர் இல்லமும் திறக்கப்பட்டன. இவைகளில் மொத்தம் 441 பின்தங்கிய இனத்து (ஹரிஜனங்கள் உள்பட) மாணவர்கள் தங்கிப் படித்தனர். இந்த இல்லங்களுக்கு அரசாங்கம் இந்த ஆண்டில் ரூ. 66,150 பொருள் உதவி செய்துள்ளது.

அருப்புக்கோட்டையில் குறவ மாணவர்களுக்காக நடைபெறும் மாணவர் இல்லத்தில் 70 மாணவர்கள் தங்கிப் படித்தனர். இதற்கு ரூ. 10,150 வழங்கப்பட்டது.

**காலி மனை வழங்கல்**

இந்த ஆண்டில் 64 காலி மனைகள் வழங்கப்பட்டன. மொத்தம் 4·78 ஏக்கர் பரப்புள்ள இம்மனைகள் அரசாங்கத்தைச் சார்ந்தவை. இவற்றைத்தவிர மொத்தம் 15·62 ஏக்கர் பரப்புள்ள 117 காலி மனைகளை அரசாங்கம் ரூ. 9791-6-8க்கு விலைகொடுத்து வாங்கி வழங்கியுள்ளது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள ஆத்திகுளம் செங்குளம் கிராமத்தில் ஹரிஜன மக்களுக்கு 1·22 ஏக்கர் நிலத்தில் இடுகாடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. சாத்

தூர் வட்டத்தில் உள்ள ஊத்துப்பட்டிக் கிராமத்தில் 0.50 ஏக்கரில் இடுகாடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. முது குளத்தூர் வட்டத்தில் உள்ள கமுதி, பறையங்குளம் கிரா மங்களில் 0.17 ஏக்கர் நிலத்தில் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

### குடிநீர் வழங்கல்

இந்த ஆண்டில் ரூ. 2,200 செலவில் 2 புதிய கிணறு கள் வெட்டப்பட்டன. ரூ. 2,340 செலவில் 3 பழைய கிணறுகள் பழுதுபார்க்கப்பட்டுச் செப்பனிடப்பட்டன. ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள கரிசல்குளம் கிரா மத்தில் ஹரிஜனச் சேரியில் ஓர் ஓடைக்கு மேல் ரூ. 400 செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டது கிராமக் குடிநீர்த் திட்டப்படி ஹரிஜனச் சேரிகளில் 37 புதிய கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. பரமக்குடி வட்டத்தில் உள்ள பொதுவக்குடி கிராமத்தில் ஹரிஜனங்கள் குளிப்பதற்காக அவர்களது கிணற்றிற்கு அருகாமையில் ஒரு குளிக்கும் அறை கட்டப்பட்டது. ரூ 475 இதற்காகச் செலவிடப் பட்டது.

## 1953-54-ஆம் ஆண்டு

இந்த ஆண்டில் 13 ஹரிஜனப் பள்ளிகளிலும் 1009 மாணவர்களும், 2 குறவர் பள்ளிகளில் 155 குறவர் மாண வர்களும் கல்வி பயின்றனர். மறவர்களது சிறுவர்களுக் காக முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ள சாயல்குடி, பெருநாழி, கடலாடி, கோயிலாங்குளம், அப்பனூர் என்ற இடங்களில் 5 மறவர் பள்ளிகள் 1954ம் ஆண்டு மார்ச்சு

மாதம் நிறுவப்பட்டன. இப்பள்ளிகள் ஐந்தும் ஓர் ஆசிரியர் பள்ளிகளாகும். 13 ஹரிஜனப் பள்ளிகளில் 34 ஆசிரியர்களும், இரண்டு குறவர் பள்ளிகளில் 5 ஆசிரியர்களும், 5 மறவர் பள்ளிகளிலும் 5 ஆசிரியர்களும் பணியாற்றி வந்தனர் .

13 ஹரிஜனப் பள்ளிகளிலும் ஓராசிரியர் பள்ளிகளிலும் மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டது. இந்த வகையில் 1-4-1953லிருந்து 30-9-1953 வரை ரூ. 13,938-15-3ம் அதற்குப் பிறகு இவ்வாண்டு முழுதும் ரூ. 12,857-4-7ம் செலவிடப்பட்டது. மறவர் பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலி முதலியவைகள் வாங்குவதற்காக ரூ. 563-14-9ம் விளையாட்டுப் பொருள்கள் வாங்க ரூ. 260ம் வழங்கப்பட்டது.

உயர்நிலைப் பள்ளிகளில் பயின்ற 337 மாணவர்களுக்கு ரூ. 7,023 அரசாங்கம் பொருள் உதவி செய்துள்ளது. அவர்களில் விடுதிளில் தங்கிப் படித்த 21 மாணவர்களுக்கு அரசாங்கம் ரூ. 3,828-14-0 பொருள் உதவி அளித்துள்ளது.

இதைப்போல் கல்லூரிகளில் படித்த மாணவர்கள் 133 பேருக்கு அரசாங்கம் ரூ. 11,138-10-0ம் விடுதிகளில் தங்கிப் படித்த மாணவர்கள் 192 பேருக்கு ரூ. 77,776-8-0ம் பொருள் உதவி செய்துள்ளது.

ஹரிஜன மாணவர்களுக்கும் ஏனைய பின் தங்கிய மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் நடைபெற்ற 16 மாணவர் இல்லங்களில் இவ்வாண்டில் 350 மாணவர்கள் தங்கிப் படித்தனர். இந்த இல்லங்களுக்கு இவ்வாண்டில் அரசாங்கம் ரூ. 44,725 பொருள் உதவி செய்துள்ளது.

இவற்றைத்தவிர ஸ்ரீ வில்லிபுத்தூரில் அரசாங்கமே ஒரு மாணவர் இல்லத்தை நடத்தியது. அதில் இவ்வாண்டில் 190 மாணவர்கள் தங்கிப் படித்தனர். இந்த இல்லத்திற்காக அரசாங்கம் ரூ. 11,866-4-3 செலவிட்டுள்ளது.

இந்த ஆண்டில் இம் மாவட்டத்தில் 45 பலநோக்க மேடைகள் கட்டப்பட்டன. இவைகள் அனைத்தும் சிமிட்டியால் கட்டப்பட்டவை.

முதுகுளத்தூர் வட்டத்தில் 5 இடங்களில் நூல் நிலையங்களும், படிப்பகங்களும் திறக்கப்பட்டுள்ளன. மறவர் ஓராசிரியர் பள்ளி ஆசிரியர்கள் இவற்றை மேற்பார்வையிடும் பொருப்பை ஏற்றுக்கொண்டனர். இந்நூல் நிலையங்களும் படிப்பகங்களும் மறவர், இனத்தின் கல்வி, பொது அறிவு வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டவை.

இம்மாவட்டத்தில் உள்ள 8 கிராமங்களில் வாழும் ஹரிஜனங்களுக்கு வீடுகட்டுவதற்கு அரசாங்கத்தின் நிலத்திலிருந்து 475 ஏக்கர் நிலத்தில் 70 காலி மனைகள் வழங்கப்பட்டன.

இவற்றைத் தவிர 8·94 ஏக்கர் நிலம் ரூ. 7469-4-11க்கு விலைக்கு வாங்கப்பட்டு 115 காலி மனைகள் வழங்கப்பட்டன.

## 1954-55-ம் ஆண்டு

இந்த ஆண்டில் மேலும் இரண்டு ஹரிஜனப் பள்ளிகள் திறக்கப்பட்டதால் இம்மாவட்டத்தில் உள்ள ஹரிஜனப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 15. இவைகளில் மொத்தம் 1366 மாணவர்கள் பயின்றார்கள். 38 ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். இந்த 15 பள்ளி மாணவர்களுக்கும் பகல் உணவு வழங்கப்பட்டது. இதற்காக

அரசாங்கம் ரூ. 28,259-5-8 செலவிட்டுள்ளது. பள்ளிகளுக்கு இருக்கைகள் முதலியன வாங்குவதற்காக ரூ. 2574-2-3 வழங்கப்பட்டது.

உயர்நிலைப் பள்ளிகளில் பயின்றுவந்த 74 மாணவர்களுக்கு ரூ. 3,934ம் வழங்கப்பட்டது. கல்லூரிகளில் பயின்ற 35 மாணவர்களுக்கு ரூ. 3631-6-0ம், விடுதிகளில் தங்கிப் படித்த கல்லூரி மாணவர்களுக்கு ரூ 36,901-13-0ம் அரசாங்கத்தால் பொருள் உதவியாக வழங்கப்பட்டது.

ஹரிஜன மாணவர்கள் ஏனைய பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் முதலியோர் தங்கிப் படிப்பதற்காகத் தனிப்பட்ட முறையில் நடைபெற்ற 16 மாணவர் இல்லங்களில் இவ்வாண்டில் 359 மாணவர்கள் தங்கிப் படித்தார்கள். இவ்வில்லங்களுக்கு அரசாங்கம் ரூ. 56,250 பொருள் உதவி செய்துள்ளது.

இவற்றைத்தவிர ஸ்ரீ வில்லிபுத்தூரில் அரசாங்கமே ஒரு மாணவர் இல்லத்தை நடத்தி வந்தது. இந்த ஆண்டில் ரூ. 20,374-15-11 இதற்காகச் செலவிடப்பட்டது.

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டக் காலிமனைகள் வழங்கப்பட்டன. அதற்காக அரசாங்கம் ரூ. 3,081-12-0 விலை கொடுத்து 2·73 ஏக்கர் நிலத்தை வாங்கி வழங்கியுள்ளது

## 1955-56-ம் ஆண்டு

இந்த ஆண்டில் 15 ஹரிஜனப் பள்ளிகளில் 1422 மாணவர்கள் பயின்றனர். 40 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். ஒரு பள்ளிக்கு ரூ. 4,000 செலவில் கட்டிடம் கட்டப்பட்டது. 3 பள்ளிகளுக்கு வாடகையாக ரூ. 180 வழங்கப்பட்டது. இப்பள்ளிகளில் படித்த மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்குவதற்காக ரூ. 27,207 செலவிடப்

பட்டது. இருக்கைகள் முதலியன வாங்குவதற்காக ரூ. 1091-5-3 வழங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் பல வகுப்புகளில் படித்துவந்த 1075 மாணவர்களுக்கு ரூ. 22,127 பொருள் உதவி செய்யப்பட்டது. உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புத் தேர்விற்குச் சென்ற 40 மாணவர்களுக்குத் தேர்வுப் பணம் கட்டவேண்டாம் என்ற சலுகை அளிக்கப்பட்டது. இந்த வகையில் அரசாங்கம் ரூ. 600 செலவிட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் புத்தகங்கள் முதலியன வாங்குவதற்காக ரூ. 680 வழங்கப்பட்டது.

இந்த ஆண்டில் மேலும் இரண்டு மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டன. இவை இரண்டும் மானாமதுரையில் திறக்கப்பட்டுள்ளன. அவைகளின் பெயர் முறையே கஸ்தூரிபாய் மாணிவியர் இல்லம் ஸ்ரீ அருள்நெறி தெய்வ சிகாமணி மாணவர் இல்லம். என்பன. இத்தகைய இல்லங்கள் அனைத்திலும் 574 மாணவர்கள் தங்கிப் படித்தனர். இவ் வில்லங்களுக்கு அரசாங்கம் இந்த ஆண்டில் ரூ. 80,708 பொருள் உதவி செய்துள்ளது.

இந்த ஆண்டில் (1955-56) 8 கிராமங்களில் வாழ்ந்த ஹரிஜனங்களுக்கு 157 காலி மனைகள் வழங்கப்பட்டன. மொத்தம் 15.80 ஏக்கர் பரப்புள்ள இம் மனைகளை அரசாங்கம் ரூ. 13,023-2-11 விலை கொடுத்து வாங்கியுள்ளது.

இந்த ஆண்டில் ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டாரத்தில் ஹரிஜனங்களுக்குக் குடிநீர் வசதி அளிப்பதற்காக ஒரு புதிய கிணறு வெட்டப்பட்டு வருகிறது. இதற்காக அரசாங்கம் இந்த ஆண்டில் ரூ. 1200 செலவிட்டுள்ளது. அருப்புக்கோட்டையிலும் ஒரு கிணறு கட்டப்பட்டுவருகிறது. அதற்கு அரசாங்கம் ரூ. 692 செலவிட்டுள்ளது. சாத்தூர் வட்டத்தில் ரூ. 1,814 செலவில் ஒரு கிணறு கட்டப்

பட்டது. இவ் வட்டத்தில் உள்ள பழைய கிணறுகளைப் பழுதுபார்க்கும் வேலை நடைபெற்று வருகிறது. இதுவரை இதற்கு ரூ. 1,600 செல விடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ரூ. 810 செலவில் 2 குளிக்கும் அறைகள் கட்டப்பட்டுள்ளன.

ஹரிஜன மக்களின் இருகொட்டிற்குப் பாதை அமைப்பதற்காக அரசாங்கம் 0·56 ஏக்கர் நிலத்தை நிலம் ரூ. 595 8-3 க்கு விலை கொடுத்து வாங்கியுள்ளது. சாலைகள் போடுவதற்காக ரூ. 3,329 செலவிடப்பட்டுள்ளது.

இம் மாவட்ட ஹரிஜனங்களுக்கு உழுவதற்கு நிலம் வழங்குவதற்காக இந்த ஆண்டில் 4499·96 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. அதில் 125 ஏக்கர் நிலம் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த ஐந்து ஆண்டுகளில் இம் மாவட்ட ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் அரசாங்கம் பலவித முன்னேற்ற நலன்களைச் செய்துள்ளது.

## மகளிர் நலம்

" ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்,
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்."

மகளிர் நலத்திற்காக 1941 ம் ஆண்டிலேயே அரசாங்கம் ஒரு துறையை அமைத்திருந்தது எனினும், அத்துறை போர்க்காலத்தில் அச்சமற்ற மனப்பான்மை மகளிரிடத்தில் ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் மட்டிலும் இயங்கிவந்தது. 1947-ம் ஆண்டு மக்களரசு தோன்றிய

பின் மகளிர் நலத்துறை வேறுபல வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் உறவாடும் நிலையில் உருக்கொள்ளத் தொடங்கிற்று.

பெண்களது சமுதாய, பொருளாதார, கல்வி, பண்பாட்டு வாழ்க்கையிலே மேன்மையும் சிறப்பையும் ஏற்படுத்தித் தாய்க் குலத்தைத் தழைக்கச் செய்வதையே இத்துறையினர் தமது தலைமையான தொண்டாகக் கொண்டிருக்கின்றனர்.

வீடுசென்று மகளிருக்கு அறிவுரை வழங்கல்





குடும்ப வருவாயை அதிகரிக்க மகளிருக்குக்
கைத்தொழில் கற்பிக்கப்படுகிறது

மகளிர் நலத்துறையினர் மாநிலம் முழுதும் பல நிலையங்களை அமைத்துள்ளனர். ஒவ்வொரு நிலையத்தில் தொண்டாற்றுபவர்களும் அதை அடுத்துள்ள கிராமங்களிலும் நகரப் பகுதிகளிலும் வாழும் தாய்மார்களுக்கு உணவு, உடை, உடல் நலம், சுகாதாரம், மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, கல்வி அறிவு ஆகியவைகளைப் பற்றிப் பல அரிய கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். மேற் கூறிய துறைகளில் எல்லாம் தாய்மார்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று வழியும் கூறினார்கள். தாய்மார்களுடன் நெருங்கிப் பழகி நெஞ்சுறவாடி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டு அவர்களது இன்னலைக்

களையப் பல இனிய வழிகளைச் சொல்லிக் கொடுத்தார்கள். குறைந்த வருவாயால் அல்லல் உறுவோருக்குக் குடும்ப வருவாயை மிகுதிப் படுத்தப் பல புதிய வழிகளைக் காட்டினார்கள். வீட்டில் ஒழிந்த வேளைகளில் சில கைத்தொழில்கள் மூலம் அவர்களது வருவாயை அதிகப்படுத்த வகை ஏற்படுத்தினார்கள்.

சென்னை மாநிலம் முழுவதும் 40 மகளிர் முன்னேற்ற நல விடுதிகள் இருக்கின்றன. இவைகளது சார்பில் பல மகளிர் சங்கங்கள் நடைபெறுகின்றன. குடும்ப முன்னேற்ற நலம், மகளிர் சமுதாய நலம் ஆகியவற்றிற்காக வேறு பல நிலையங்களும் இருக்கின்றன.

கணவனால் கைவிடப்பட்டவர்கள், உற்றார் உறவினரை இழந்தோர் ஆகிய பெண்களைத் தண்மையுடன் அணைத்துக் காக்கச் சென்னையில் "தொண்டு விடுதி" (Service home) ஏற்பட்டுள்ளது. சமுதாய நலத்தில் நாட்டங்கொண்ட பெண்மணிகள் பலர் இத்தொண்டு விடுதியில் தொண்டாற்றுகின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தில் பலியாகித் தவறிவிட்ட பெண்களும் இங்கு தஞ்சம் புகுந்து மனம் திருந்தியவராய் நாட்டின் நல்ல குடிகளாய் மாறுகின்றனர்.

மகளிர் நலத்திற்காக "சௌபாக்கியம்" என்ற திங்கள் வெளியீடு (Monthly) ஒன்று வெளிவருகிறது.


அமைதி...
நிலவ!

*ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால்*
*ஏற்றம் அன்றி இழித்தகவு இல்லையே.*

—கம்பராமாயணம்

# அமைதி . . .
# நிலவ !

ஒரு நாட்டிற்கு வெளியிலிருந்து மட்டிலும்தான் பகை ஏற்படும் என்பதில்லை. உள்ளுக்குள்ளேயே பல வகையான தீய ஆற்றல்கள் உலவி நாட்டின் நலனைக் கெடுக்கலாம். இத்தீய ஆற்றல்கள் நாட்டின் அமைதிக்குத் தீங்கு விளை விப்பனவாகும். நாட்டை அத்தீய ஆற்றல்களிலிருந்து காத்து எங்கும் அமைதியும் ஒழுங்கும் நிலைபெறச் செய் வது அரசாங்கத்தின் கடமை.

நமது மாநிலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தும் பொறுப்பைப் போலீஸ் படையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். சென்னை போலீஸ் படையினரின் திற மையைப் பலரும் புகழ்ந்து பேசுகின்றனர். கடந்த பொதுத் தேர்தலின்போதும், ஆவடி காங்கிரஸ் கூடியபொழுதும் போலீசார் சட்டத்தையும் ஒழுங்கையும் மிகவும் போற்றத் தகுந்த முறையில் நிலைநாட்டியுள்ளனர். கொலை, களவு

முதலிய தீமைகளைப் புரிந்த குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க நமது போலீஸ் படையினர் நாய்களைப் பழக்கியுள் ளனர். அந்நாய்கள் மிகவும் வியக்கத்தக்க முறையில் பல குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளன.

சாலைகளில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காகப் போலீஸ் கார்கள் தெருக்களில் இயங்குகின்றன. ஒலிபெருக்கும் கருவி மூலமாகச் சாலைகளில் மக்கள் எவ்வாறு ஒழுங்குடன் மக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் போலீசார் எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

மதுவிலக்குச் சட்டம் மாநிலத்தில் ஒழுங்காக நடை பெறுவதில் போலீஸ் அக்கறையாய் உழைத்து வருகிறார் கள். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப் படுகிறார்கள்.

1951-ல் இம்மாவட்டத்தில் 12,45,716 ரூபாய் பெறு மான பொருள்கள் களவு போயின. அவைகளில் 1,05,711 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களைப் போலீசார் மீட்டுக் கொடுத்துள்ளனர். 1952-ல் 2,38,076 ரூபாய் பெறு மான பொருள்கள் களவுபோயின. அவற்றில் 1,06,218 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களைப் போலீசார் கண்டு பிடித்துக் கொடுத்துள்ளனர். 1953-ல் ரூ. 6,49,614 பெறு மானமுள்ள பொருள்கள் களவு போயின. அவைகளில் ரூ. 1,73,214 பெறுமானமுள்ளவை மீட்டுத் தரப்பட்டன. 1954 ல் ரூ. 3,50,022 பெறுமானமுள்ள பொருள்கள் களவு போயின. ரூ. 51,957 பெறுமான முள்ளவை மீட்டுத் தரப்பட்டன. 1955-ல் ரூ. 1,91,081 பெறுமானமுள்ள பொருள்கள் களவுபோயின. அவைகளில் ரூ. 72,199 பெறு மானவற்றைப் போலீசார் மீட்டுத் தந்துள்ளனர்.

ஒரு காலத்தில் சிவப்புத் தொப்பியினரைக் கண்டால் மக்கள் ஓடி ஒளிந்தனர். அந்நிய ஆதிக்கத்தின்கீழ் போலீசார் அதிகாரத்தில் நாட்டம் கொண்டவர்களாய் இருந்தனர். நாடு உரிமை பெற்ற பிறகு போலீசார் பொதுமக்களின் நலனைக் காக்கும் தொண்டர்கள் என்ற கருத்துப் பொதுமக்கள், போலீசார் ஆகிய இருசாராரிடையேயும் ஏற்பட்டுவிட்டதால் அச்சம் அகன்று நம்பிக்கை வளர்ந்து வருகிறது.

பொதுமக்களின் நம்பிக்கைக்கு ஆளாகும் முறையில் பொதுமக்களிடம் போலீசார் முறையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் மரியாதை வாரங்களைக் கொண்டாடியது.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தும் தொண்டில் போலீசாருடன் பொதுமக்களும் பங்குகொள்ள வேண்டும். இரு சாராருக்கும் இடையில் நம்பிக்கை வளரவேண்டும் என்ற நோக்கங்களின்படிக் கிராமக் கண்காணிப்புக் குழுக்கள் (Village Vigilance Committees) அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தீமை புரிந்திட்ட குற்றவாளிகளையும், குற்றத்தின் காரணங்களையும் போலீசாருக்குக் கண்டுபிடித்துக் கொடுத்து உதவுகின்றன. இக் குழுக்கள் பொதுமக்களையும் போலீசாரையும் இணைக்கும் ஒரு பாலம்போல் பணியாற்றுகின்றன. இக் குழுக்களின் உதவியால் போலீஸ் அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று கூட்டம் போட்டு மக்களுக்குப் போலீசாரின் தொண்டுகளை விளக்குகின்றனர். அத் தொண்டுகளை மக்கள் தாராளமாகத் தயக்கமின்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எடுத்துக் கூறுகின்றனர்.

## தற்காப்புப் படைகள்

மாநிலத்தில் பல இடங்களில் தற்காப்புப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதிகளில் செல்வாக்குள்ள நல்ல மக்கள் இப்படைகளில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர். இந்நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டப் போலீசாருக்கு உதவிபுரிகின்றனர்.

நாட்டின் அமைதிக்காகத் தமக்கு ஏற்படும் ஆபத்துகளையெல்லாம் மதியாமல் பணிபுரியும் போலீசாருக்கு அரசாங்கம் பல நன்மைகளையும் செய்துள்ளது.

## கல்விச் சலுகைகள்

கெசெட் பதிவில்லாத போலீஸ்காரர்களின் குழந்தைகள் 3-ம் படிவம் வரையில் சம்பளமின்றி இலவசமாகவும் 4-ம் படிவத்திலிருந்து 6-ம் படிவம் முடிய அரைச் சம்பளத்திலும் கல்வி கற்பதற்கு அரசாங்கம் சலுகை அளித்துள்ளது.

## மருத்துவ உதவி

கெசெட் பதிவில்லாத போலீஸ்காரர்களுக்கு மாநிலத்தில் உள்ள மருத்துவ நிலையங்களில் இலவசமாக மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. மேலும் கெசெட் பதிவில்லாத போலீஸ்காரர்கள் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் வெளியில் வாங்கிக் கொடுக்கும் மருந்துகளுக்கு அரசாங்கம் பணம் கொடுத்துவிடுகிறது. அதிகாரமுள்ள மருத்துவர் (Authourised Med cal Attendant) அதற்குச் சர்டிபிகேட்

கொடுக்கவேண்டும், இதற்காகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## எதிர்காலச் சேமிப்பு நிதித் திட்டம்

1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு மேல் அரசாங்க அலுவலை மேற்கொண்டவர்களுக்காக இத்திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தில் கட்டாய இன்ஷ்யூரன்ஸ்சும் உட்பட்டதாகும்.

இத்திட்டப்படி அலுவலாளர்கள் தங்கள் அடிப்படைச் சம்பளத்தில் ரூபாய்க்கு 1 அணு இந்நிதிக்கு அளிக்கிருர்கள். அரசாங்கம் ரூபாய்க்கு $\frac{3}{4}$ அணு வழங்குகிறது. இந்நிதியைத் தவிர வழக்கப்படிக் கிடைக்கும் உதவிச் சம்பளத்தில் பாதியும் வழங்கப்படும்.

## ஓய்வு நாள் சலுகை

போலீஸ்காரர்களுக்கும் (Constables) தலைமைப் போலீஸ்காரர்களுக்கும் (Head Constables) வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. விடுமுறை இல்லாமல் அந்நாட்களில் வேலை செய்ய வேண்டியிருந்தால் நாள் ஒன்றிற்கு ரூ. 1 ஈடாகக் கொடுக்கப்படும்.

## தீ அணைக்கும் படை

தீ அணைக்கும் படை பொது மக்களின் நலத்திற்காகவும் பொது நல அமைதிக்காகவும் பணி புரிந்து வரும் ஓர் அமைப்பு ஆகும். நமது மாநிலத்தில் 43 நகரங்களில் 50 தீ அணைக்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின்

நிர்வாகப் பொறுப்பைப் போலீஸ் துறையே ஏற்று நடத்து கிறது.

ஒவ்வொரு நிலையத்திற்கும் தீ அணைக்கும் இயந்திரங் களும், பம்புகளும், ஆம்புலன்ஸ் கார்களும் அளிக்கப்பட் டுள்ளன. இந்நிலையங்கள் நகர்களில் மட்டுமல்லாமல் சுற்றுப்புறமுள்ள பகுதிகளிலும் தீ விபத்து நேரிட் டால் தீ அணைக்கும்படை தீயை அணைத்து மக்களைக் காப் பாற்றுகிறது. பொதுவாக நிலயத்திற்கு 30 மைல் சுற்றள வில் உள்ள இடங்களில்தான் ஒவ்வொரு நிலையமும் பணி ஆற்றும். நெருக்கடியான நிலையங்களில் தீயணைக்கும் அதிகாரி கருதினல் அவ்வரையறைக்கு மேலும் சென்று யணியாற்றலாம்.

இவ்வாறு பணி புரிய நிலையங்களில் பயிற்சி பெற்றவர் கள் இருக்கின்றனர். "99" எண்ணுள்ள தொலைப்பேசி வழியாகப் பேசி பொதுமக்கள் இவர்களின் உதவியை 24 மணி நேரமும் பெறலாம்.

## இந்நிலையங்களின் பணிகள்

தீ விபத்து ஏற்படாமல் பாதுகாப்பது, தீ விபத்தைத் தடுப்பது, தீ விபத்து ஏற்பட்டுவிட்டால் தீயை அணைத்துப் பொது மக்களைக் காப்பது இவைதான் இந்நிலையங்களின் தலையாய நோக்கங்கள். தீ அணைப்புப்படை அதிகாரிகள் தீ விபத்து எளிதில் ஏற்படக்கூடிய இடங்களுக்குச் சென்று பார்வையிடுவார்கள். தீ விபத்து ஏற்படாமல் இருப்பதற்கான வழிகளை எடுத்துச் சொல்லுவார்கள்.

இம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இப் படையினர் 146 இடங்களில் தீயை அணைத்துப் பொது மக்களைத் தீ விபத்திலிருந்து காப்பாற்றியுள்ளனர். இம்

மாவட்டத்தில் இப்படையைச் சார்ந்த ஆம்புலன்ஸ் கார்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 254 முறை பொது மக்களுக்குப் பணியாற்றியுள்ளன.

தீயணைப்பு வேலைகளைத் தவிர வேறு பல பணிகளிலும் தீயணைப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1951, 1952-ம் ஆண்டுகளில் மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்படவே உழவர்களுக்கு நீர்பாசன வசதி அளிப்பதற்காகப் பம்பு செட்டுகள் பயன்படுத்தப்பட்டன. நகர்களில் குடி நீருக்குப் பஞ்சம் ஏற்பட்டபொழுது இப்படையைச் சார்ந்த நீர்தாங்கி மோட்டார்கள் நகர ஆட்சி மன்றங்களால் பயன்படுத்தப்பட்டன. 1952 நவம்பரில் தஞ்சை மாவட்டத்தில் புயல் வீசிச் சேதம் விளைந்தபோது இப்படை பெரும் தொண்டு ஆற்றியுள்ளது. நாகப்பட்டினத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் வெள்ளம் வந்துவிட்டது. அப்பொழுது இப்படையினர் 200 நோயாளிகளை வெள்ளத்தில் அடிக்கப்படாமல் வெளியேற்றிக் காப்பாற்றினர்.

காலரா நோயால் பிடிக்கப்பட்ட மாவட்டங்களில் இப்படையைச் சார்ந்த 7 ஆம்புலன்ஸ் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டன.

1955-ல் வீசிய புயலால் வேதாரண்யம் கிணறுகளில் கடல் நீர் புகுந்துவிட்டது. இப்படையினர் அக்கிணற்று நீரைத் தங்கள் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு இறைத்துச் சுத்தமாக்கினர்.

இவ்வாறு தீயணைக்கும் படையினர் பொதுநல அமைதிக்காகப் பாடுபட்டு வருகின்றனர்.

## புயலுடன் போர்

இயற்கையின் சீற்றம் நாட்டின் அமைதியைக் குலைத்து விடக்கூடிய வல்லமை வாய்ந்தது. கடந்த 1956 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் தேதியன்று வீசிய புயலின் காரண மாக ராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட் டங்களில் விளைந்த கொடுமை சொல்ல ஒண்ணாதது. ஆறு கள், ஏரி, குளங்கள், கண்மாய்கள் முதலியன உடைப்பு எடுத்து நாடெங்கும் வெள்ளக்காடாயிற்று. வீடுகள் இடிந்து விழுந்தன. குடிசைகள் பேய்க் காற்றில் பறந்தன. கால் நடைகளும் மக்களும் பலவாறு இன்னலுக்கு ஆளாகி வருந்தினர். தஞ்சை மாவட்டத்தில் 1,72,213 வீடுகள் பேய்க் காற்றில் சிக்கி அழிந்துபோயின. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50,207 வீடுகள் அழிந்துபோயின. இராம நாதபுரம் மாவட்டத்தில் 12,800 வீடுகள் அழிந்துபோயின. இம்மூன்று மாவட்டங்களிலும் உயிரிழந்தோரின் எண் ணிக்கை முறையே 417; 18; 86 ஆகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டிலும் 98518 கால்நடைகள் புயலுக்குப் பலியாயின.

இவ்வாறு இயற்கையின் கொடுமைக்கு ஆளாகிய இம் மக்களுக்கு ஆறுதலும் உதவியும் அளிக்க மக்கள் அரசாங் கம் ஓடோடிவந்தது. நமது முதல் அமைச்சர் திரு காம ராஜ் அவர்கள் நமது குழுவினருடன் புயலால் பாதிக்கப் பட்ட இடத்திற்கு விமானம் மூலமாக விரைந்தார். மக்கள் உற்ற இன்னலை நேரடியாகக் கண்டு மனம் கலங்கினர். அல்லலுற்றவர்களுக்கு ஆறுதல் கூறினர். தாம் சென்ற இடத்திற்கெல்லாம் தம்முடன் மக்களுக்கு உணவுப்பொருள் களையும் கொண்டு சென்றார். உடனடியாக உதவி அளிப் பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் 6 டன் அரிசி



அவதியுற்ற மக்களுக்கு அவசரப் பொருள் உதவி

விமானத்திலிருந்து கீழே போடப்பட்டது. 500 டன் அரிசியும் 100 டின் மண்ணெண்ணெயும் தூத்துக்குடியிலிருந்து மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டன சென்னையில் இந்திய அரசின் கையிருப்பில் இருந்த 1,00,000 டன் அரிசி இப்பகுதி மக்களுக்கு அனுப்பப்பட்டது.

அழிந்த வீடுகளைப் பழுதுபார்க்கவோ அன்றி மீண்டும் திருத்தி அமைக்கவோ ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச மான்யமாக ரூ. 30 வரை வழங்கப்பட்டது. தலைவனை இழந்துவிட்ட குடும்பத்திற்கு ரொக்கமாக ரூ. 50 பண உதவி அளிக்கப்பட்டது. வீடற்ற ஹரிஜன ஏழைகளுக்கு

வீடுகள் கட்டித்தரப்பட்டன. ஆங்காங்கே கஞ்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. ரொக்கமாகப் பண உதவியும் செய்யப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 520 கஞ்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. ரொக்கப் பண உதவியாக ரூ. 24,53,610 வழங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் புயலால் வருந்திய ஏழை மக்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டன. இந்தப் பணிக்காக அரசாங்கம் ரூ. 1,50,000 செலவிட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்டோரின் மக்களுக்கு 1955 டிசம்பர் மாதம் முதற்கொண்டு 1956 வரையுள்ள காலத்திற்குப் பள்ளிச் சம்பளமும் தேர்வுப் பணமும் கட்டவேண்டாம் என்ற சலுகை அளிக்கப்பட்டது. இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டது.

## உழவர்களுக்கு உதவி

வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு அரசாங்கம் பலவாறு உதவிசெய்துள்ளது. 1365-ம் பசலி ஆண்டில் வரி செலுத்தப்படாமலிருந்தால் காவிரி, பெரியாறு பாசனப்பகுதிகள் தவிர ஏனையப் பகுதிகளில் வரி வசூல் 1365-ம் பசலி ஆண்டிற்கு ஒத்தி வைக்கப்பட்டது. 1366-ம் பசலி ஆண்டிற்கான கடன் தவணையும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

## நிலவரித் தள்ளுபடி

75 சதவிகிதத்திற்குமேல் தென்னைகள் அழிந்த இடத்தில் நிலவரி முழுமையும் தள்ளுபடி செய்யப்பட்டது. 50 முதல் 75 சதவீதத்திற்குள் அழிவுற்ற இடங்களில் பாதி

வரி தள்ளுபடி செய்யப்பட்டது. பாழ்பட்ட வெற்றிலைக் கொடிகளுக்கும் வரியினின்றும் முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டது. 75 சதவீதத்திற்கு அதிகமாக அழிவுற்ற பழ மரத் தோப்புகளுக்கும் நிலவரித் தள்ளுபடி செய்யப்பட்டது. இதர பயிர்கள் சாகுபடியான நிலங்களில் 4 அணாவும் அதற்குக் குறைவான விகித விளைச்சல் நிலங்களுக்கு முழுவரித் தள்ளுபடியும், 4 அணாவிற்கு அதிகமாயும் 8 அணாவிற்குக் குறைவாயுமுள்ள விகித விளைச்சல் நிலங்களுக்குப் பாதிவரித் தள்ளுபடியும் செய்யப்பட்டது.

விடுகட்டப் பொருள் உதவி



சேதமடைந்த வீடுகளைப் பழுது பார்க்க ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000 வரையில் சிறப்புக் கடன் உதவி அளிக்கப்பட்டது.

தறி இழந்தோர் ஒவ்வொருவருக்கும் அதனை ஈடு செய்ய ரூ. 50 வரை வழங்கப்பட்டது. நீர் இறைக்கும் இயந்திரங்கள் உழவர்களுக்கு பாதி வாடகைக்கு விடப்பட்டது. இதுபோலவே தூர்ந்துபோன வயல்களையும் பண்படுத்த டிராக்டர்கள் பாதி வாடகைக்கு விடப்பட்டன. தோப்புக்களைச் சீர்படுத்த ஒவ்வொரு உழவருக்கும் ரூ. 200 கடனுகை வழங்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உடைப்பெடுத்துப் போன கண்மாய்களைப் பழுது பார்த்துத் திருத்தி அமைக்க அரசாங்கம் முன் வந்தது. உணவு உற்பத்தி (Food-Production), சிறிய நீர்ப்பாசனம் ஆகிய பிரிவுகளின் கீழ் இருந்த கண்மாய் மராமத்து வேலைகளை விரைந்து முடிப்பதற்காக அவை மராமத்துத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந் நான்கு மாவட்டங்களிலும் உள்ள கண்மாய்களைப் பழுதுபார்க்க அரசாங்கம் ரூ. 2 கோடி ஒதுக்கியது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டிலும் ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டது.

இம் மாவட்டத்தில் சிவகங்கைச் சிறப்புப் பகுதியில் (Sivaganga Special Division) 2890 கண்மாய்கள் உடைந்து விட்டன. உடைப்புக்களை அடைத்து இவைகளைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 68,36,000 செலவு செய்ய அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது. 30-11-56 முடிய இப்பகுதியில் ரூ. 41,97,057 செலவிடப் பட்டுள்ளது.

அருப்புக் கோட்டை சிறப்புப் பகுதியில் 554 கண்மாய்கள் உடைப்பெடுத்தன. உடைப்பு அடைத்துப் பழுதுபார்க்க ரூ. 26,86,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 30-11-56 முடிய ரூ. 16,89,643 செலவிடப் பட்டுள்ளது.

கமுதி சிறப்புப் பகுதியில் 614 கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு விட்டது. அதனை அடைத்துப் பழுது பார்ப்பதற்கு ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 33,49,000. 30-11-56 முடிய ஆன செலவு ரூ. 31,12,451.

தேவகோட்டைச் சிறப்புப் பகுதியில் 914 கண் மாய்களில் உடைப்பு ஏற்பட்டது. அதனை அடைத்துப் பழுது பார்த்துச் சீர்ப்படுத்த ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 41,95,000.

இவ்வாறு இம் மாவட்டத்தில் உடைப்பு ஏற்பட்டக் கண்மாய்களைப் பழுது பார்க்க 30-11-56 முடிய அரசாங்கம் ரூ. 1,27,77,176 செலவிட்டுள்ளது. மொத்தம் ரூ. 1,73,55,000 செலவிட மதிப்பிட்டுள்ளது.

மதுரை, ராமனாதபுரம், திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் ஆற்றங்கரை ஓரங்களிலும் ஏரிக்கரை ஓரங்களிலும் குடியிருக்கும் ஏழை மக்கள் அடிக்கடி இயற்கையால் பாதிக்கப்படுவதால் அவர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதி ஏற்படுத்தித்தரும் நோக்கத்துடன் ரூ. 30 லட்சம் செலவில் 6236 வீடுகள் கட்டும் திட்டமொன்று உருவாகி வருகிறது.


நலம்...
சிறக்க!

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

— திருக்குறள்.

# நலம் . . .
# சிறக்க!

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுரை. நோயும் நொடியும் அற்ற குடும்பம்தான் பல துறைகளிலும் ஊக்கமுடன் உழைத்து முன்னேற முடியும். அக்குடும்பத்தில்தான் அன்பும் இன்பமும் அருளும் நட்பும் புரியும்.

நமது நாடு அத்தகைய ஒரு பெருங் குடும்பமாக விளங்க வேண்டும் என்பதே நமது அரசாங்கத்தின் தலைசிறந்த நோக்கம். நாட்டில் நோயும் நலிவும் அகன்று நலம் சிறப்பதற்கு அரசாங்கம் செய்துள்ள திருப்பணிகள் போற்றத் தகுந்தவை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மலேரியா நோய் ஒழிப்பு, சத்து உணவு ஆராய்ச்சி, பிரசாரம், விளம்பரம், மருத்துவ

உதவி, தொழில் நுட்ப வல்லுநர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய பல பணிகள் ஆற்றப்பட்டுள்ளன.

திட்டகாலத்திற்கு முன்பு நமது மாவட்டங்கள் பலவற்றில் மலேரியா நோய் எனும் பேய் தலைவிரித்து ஆடியது. அக்கொடிய நோயினால் பீடிக்கப்பட்டுப் பல மக்கள் மாண்டு போயினர். அத்துடன் அழகும் வளமும் நிறைந்த பரந்த நிலப் பகுதிகளில் இம் மலேரியா நோய்க் கொசுக்கள் மண்டிக் கிடந்தன. அதனால் வளம் கொழிக்கும் அந்நிலப் பகுதிகள் மக்கள் வாழ்விற்கே எவ்வகைப் பயனுமின்றிப்

காலரா பரவாது இருக்கத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன



பாழ்பட்டுக் கிடந்தன. இவ்வாறு மலேரியாவால் நம் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருந்தது.

எனவே மலேரியா நோயை ஒழிக்க வேண்டியது சுகாதார நோக்கத்தோடு மட்டிலுமல்லாமல் பொருளாதார நோக்கத்திலும் அவசியமாக இருந்தது. அரசாங்கம் மலேரியா நோயுடன் போர் தொடுத்தது. 12 திட்டங்களை வகுத்தது. அத்திட்டங்கள் தென் கன்னடம், மலபார், கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை முதலிய மாவட்டங்களில் நிறைவேறியன. 1954-ல் அத்திட்டங்கள் எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் நிறைவேறத்தொடங்கின. அம் மாவட்டங்களில் உள்ள வீடுகளில் உள்ளும் புறமும் டி. டி. டி. மருந்து தெளிக்கப்பட்டது. மலேரியா நோயைத் தடுக்கும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இவ்வாறு அரசாங்கத்தின் சலியாத உழைப்பினால் மலேரியா நோய் மாண்டு மறைந்தது. 250 சதுர மைல் பரப்புள்ள நிலங்கள் இன்று மக்கள் வாழ்விற்கும் சாகுபடிக்கும் ஏற்றவையாகத் திகழ்கின்றன. பல பொறி இயல் வேலைகளும் திட்ட வேலைகளும் அச்சமின்றிக் கவலையின்றி இனிது நிறைவேறுகின்றன. மக்கள் அனைவரும் மலேரியாவைப் பற்றிய அச்சம் நீங்கியவராய் அமைதியோடு வாழுகின்றனர்.

## சத்துள்ள உணவு

நல்ல சத்துள்ள உணவை உண்ணாத காரணத்தினால் தான் நமது மக்கள் நோய்களால் பீடிக்கப்படுகின்றனர். எனவே மக்களுக்குச் சத்து உணவு கிடைப்பதற்காக அரசாங்கம் பல திருப்பணிகளைச் செய்துள்ளது.

அனைத்துலகக் குழந்தைகள் பராமரிப்பு நிதியார் 1950ம் ஆண்டிலிருந்து 24,000 சிறிய டன் (Short tons) பால் பொடியையும், 4,155 சிறிய டன் அரிசியும் வழங்கியுள்ளனர். அவைகளை அரசாங்கம் ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளித்தது. நலிவுற்ற 10 லட்சம் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பால் உணவு வழங்கப்பட்டது. அதைத் தவிரப் பல விட்டமின்கள் நிறைந்த மாத்திரைகள், சொர்க்கு மீன் எண்ணெய், யீஸ்டு போன்றவைகளும் வழங்கப்பட்டன. 20 பள்ளிகளில் பயிலும் 2,000 சிறுவர்களுக்குப் பகலில் சத்துள்ள உணவு இலவசமாக வழங்கப்பட்டது.

சத்து உணவு ஆராய்ச்சிக் கூடம் ஒன்று நிறுவப்பட்டது. இவ்வாராய்ச்சிக் கூடம் உணவுச் சத்துக்களைப்பற்றிய பல ஆராய்ச்சிகளைச் செய்துள்ளது.

சத்து உணவுக் குழு மருத்துவ மாணவர்கள், பயிற்சி பெறும் ஆசிரியர்கள், சுகாதார அலுவலாளர்கள் முதலியவர்களுக்குச் சத்து உணவைச் சார்ந்த பல பொருள்களில் பயிற்சி அளித்து வருகிறது.

## சுகாதாரக் கல்வியும் விளம்பரமும்

நமது நாட்டில் நோய் பரவுவதற்கு மற்றுமொரு காரணம் மக்கள் சுகாதாரத்தைப் பற்றி ஏதும் அறியாமல் இருப்பது தான். வீட்டின் உள்ளும் வெளியும் பலவகையான அசுத்தங்களை நிறைய விடுகின்றனர். சாக்கடைகளும் குட்டைகளும் நோய்க் கிருமிகள் வளருவதற்கு ஏற்ற சாதனங்களாக அமைந்து விடுகின்றன. தங்களுடைய தனிப்பட்ட சுகாதார விதிகளைக் கூட மக்கள் உணர்வதில்லை.

அவ்வாறு உணராதோர்க்குச் சுகாதார விதிகளை எடுத்துச் சொல்லி நல்வழிப் படுத்துவது தமது கடமை என்று நமது அரசாங்கம் கருதியது.

சுகாதாரக் கல்வி, விளம்பர மையக் குழு (Central Bureau of Health Education and Publicity) ஒன்று நிறுவப் பட்டது. விளம்பர மோட்டார்களும், திரைப்படக் கருவிகளும், வானொலிச் சாதனங்களும், பேசும் படங்களும் சுகாதார எடுத்துக்காட்டுகளும், பிரசாரப் புத்தகங்களும், அறிக்கைகளும் இவைபோன்ற வேறு பல சாதனங்களும் பயன்படுத்தப்பட்டன.

இப் பிரசாரத்திற்கென்றே ஒரு சுகாதார அதிகாரியும் (Health officer) அவருக்குக் கீழ்ப்பட்ட அலுவலாளர்களும் 1954-ல் நியமிக்கப்பட்டனர். 60 தமிழ்ப் பேசும் படங்கள் பிடிக்கப்பட்டன. அவைகள் நகராட்சி மன்றங்கள், பள்ளிகள் போன்ற பொது நிலையங்களின் வாயிலாக மக்களுக்குக் காட்டப்பட்டன. பொதுச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், கொசு ஒழிப்பு, சத்து உணவு, எலும்புருக்கி நோய், குடிநீர் போன்ற பொருள்களைப் பற்றிப் புத்தக வெளியீடுகள் அச்சடிக்கப்பட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

ஒரு விளம்பர மோட்டார் நாடெல்லாம் சுற்றிச் சுகாதாரப் பிரசாரம் செய்து வருகிறது. அம் மோட்டாரில் திரைப்படக் கருவியும், ஒலி பெருக்கியும், இசைத் தட்டுகளும் உள்ளன. அதிலேயே சுகாதாரத்தை விளம்பரம் செய்வதற்கான படங்களும், அட்டவணைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

திருச்சி வானொலி நிலையத்தின் வாயிலாகச் சுகாதாரத்தைப் பற்றிப் பலர் மக்களுக்கு அறிவுரை கூறிவருகின்றனர்.

## மருத்துவ உதவி

திட்ட காலத்தில் இம் மாவட்டத்தில் மருத்துவத் துறையில் அரசாங்கம் பல முன்னேற்ற நலன்களைச் செய்துள்ளது.

1. மாவட்டத் தலைமை அக ஆஸ்பத்திரி (District Head quarters Hospital)

இம்மாவட்டத்தின் தலைமை அகமாகிய இராமநாதபுரத்தில் இந்த ஆஸ்பத்திரி அமைந்துள்ளது. இந்த ஆஸ்பத்திரியின் கட்டிடம் மிகவும் பழமையானதாகவும் தற்பொழுதைய நிலைக்கு ஏற்றதாகவும் இல்லாமையால் 200 படுக்கைகளைக் கொண்டு புதிய வசதி வாய்ந்த கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் படி இந்த ஆஸ்பத்திரிக்குத் தகுந்த வசதிகளுடன் கூடிய ஓர் அறுவை மருத்துவ நிலையம் (Opertation Theatre) கட்டப்பட்டு வருகிறது.

1955 ம் ஆண்டில் இந்த ஆஸ்பத்திரியில் இரத்தச் சேமிப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டு அது மிகவும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. அதே ஆண்டில் க்ஷய ரோக மருத்துவ நிலையம் ஒன்று நிறுவப்பட்டது.

இராமநாதபுரம் ஊராட்சி மன்றத்தார் 8 படுக்கைகளைக் கொண்ட மகப் பேறு மருத்துவ விடுதி ஒன்றை நிறுவியுள்ளனர்.

இம் மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் 'காலா ஆசார்' என்ற நோய் அடிக்கடி மக்களைப் பீடித்து வருவ

தால் அந் நோய் வராமல் தடுக்க மருத்துவ உதவி அளிக்கப்படுகின்றது. அதற்காக ஓர் இயங்கும் மருத்துவ மோட்டார் 1950-ம் ஆண்டிலிருந்து அப் பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் சென்று மருத்துவ உதவி அளிக்கும் நோக்கத்துடன் அமைக்கப் பட்டுள்ளது. இந்த இயங்கும் மருத்துவ மோட்டார் கீழக்கரை, ஏர்வாடி, பெரிய பட்டினம் போன்ற கிராமங்களுக்கு வாரம் இரு முறை சென்று நோயாளிகளுக்கு மருத்துவ உதவி அளிக்கிறது.

வீடு சென்று மருத்துவ உதவி...



10 பேருக்கு மருந்து கலக்கும் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களில் 5 மாணவர்களுக்கு அரசாங்கம் பொருள் உதவி (Stipend) செய்துள்ளது.

மகப்பேறு மருத்துவத்திலும் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1-12-55-ம் நாள் அன்று 3 மாணவிகளும், 1-3-56-ம் நாள் அன்று 2 மாணவிகளும் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கப் பட்டனர். இனி ஒவ்வோராண்டிலும் ஜூன், செப்டம்பர், டிசம்பர், மார்ச்சு மாதங்களில் மாணவிகளுக்கு பயிற்சி அளிக்க அனுமதி தரப்படும்.

இந்திய மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களும், அதனைப் பயிலும் மாணவர்களும் 1953-ம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் 'ஹவுஸ் சர்ஜன்ஸியில்' பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 2. அரசாங்க ஆஸ்பத்திரி, ஸ்ரீ வில்லிபுத்தூர்

இந்த ஆஸ்பத்திரிக்கு அறுவை மருத்துவத்தில் சாதனங்கள் செய்து தரும் நோக்கத்துடன் எல்லா வசதிகளும் நிறைந்துள்ள அறுவை மருத்துவ நிலையம் ஒன்று கட்டித் தரப்பட்டது. இதைத்தவிர 14 படுக்கைகள் கொண்ட மகப் பேறு மருத்துவ விடுதி ஒன்றும் கட்டப்பட்டது. இவற்றை 1954-ம் ஆண்டு சென்னை முதல் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 3. அரசாங்க ஆஸ்பத்திரி அருப்புக் கோட்டை

1955-ம் ஆண்டிற்கு முன் அருப்புக் கோட்டையில் அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றும் நகராட்சி மன்ற ஆஸ்பத்திரி ஒன்றும் இயங்கிவந்தன. ஒவ்வொன்றிலும் 8 படுக்கைகள் இருந்தன. 1955-ம் ஆண்டு இவ்விரண்டு ஆஸ்பத்திரிகளும் இணைக்கப்பட்டு அரசாங்க ஆஸ்பத்திரி என்ற

பெயரையும் பெற்றன. இணைப்பிற்குப் பிறகு அருப்புக் கோட்டை ஆஸ்பத்திரியில் படுக்கைகளின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்து விட்டது. இந்த ஆஸ்பத்திரியில் 44 படுக்கைகள் கொண்ட பொது விடுதி (General Ward) ஒன்றும் 6 படுக்கைகள் கொண்ட செப்டிச் விடுதி ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன. அத்துடன் அறுவை மருத்துவ நிலையம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. இவையெல்லாம் இணைந்த நிலையில் அருப்புக்கோட்டை அரசாங்க ஆஸ்பத்திரியில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 66 ஆகும்.

4. **அரசாங்க டிஸ்பென்சரி, முதுகுளத்தூர்**

1951-ம் ஆண்டிற்கு முன் இந்த டிஸ்பென்சரி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சி மன்றத்தின் கீழ் இருந்தது. 1951-ல் இதனை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இந்த டிஸ்பென்சரியுடன் இணைப்பதற்காக மகப்பேறு மருத்தவ விடுதி ஒன்றினைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

5. **அரியக்குடி கல்யாண கிருஷ்ண ஆஸ்பத்திரி**

அரியக்குடியில் 'கல்யாண கிருஷ்ண ஆஸ்பத்திரி' என்ற பெயருடன் தனிப்பட்டோரால் ஓர் ஆஸ்பத்திரி 1954-ல் திறக்கப்பட்டது. அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. ராஜாஜி அவர்கள் அதனைத் திறந்து வைத்தார்கள்.

6. **சோமனுதபுரம் க்ஷயரோக விடுதி**

தேவகோட்டை சாலையில் சோமநாதபுரம் என்ற இடத்தில் க்ஷயரோக விடுதி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மதுரை, இராமநாதம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் இவ்விடுதியே தனிப்பட்ட முறையில் க்ஷயரோகத்திற்கு மருத்துவ உதவி அளித்து வருகிறது.

இவ்விடுதியில் ஒரு 'ஏ' வகுப்பு விடுதியும், இரண்டு 'பி' வகுப்பு விடுதிகளும், 8 'சி' வகுப்பு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. பொது விடுதியில் (General ward) 20 ஆண் நோயாளிகளும், 8 பெண் நோயாளிகளும், 8 சிறுவர்களும் மருத்துவ உதவி பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்ளுெரு விடுதியில் 40 நோயாளிகள் மருத்துவ உதவி பெறுகிருர்கள்.

## குடிநீர் வசதி

திட்டகாலத்திற்கு முன்பு இம் மாவட்டத்தில் விருதுநகர், காரைக்குடி, ராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் மட்டிலும்தான் நோய்க் கிருமிகள் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் வசதி மக்களுக்குக் கிடைத்து வந்தது.

திட்ட காலத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூர் நகர மக்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கும் திட்ட மொன்று நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தை முடிக்க 18,20,000 ரூபாய் செலவிடப்பட்டது.

காரைக்குடியில் ஏற்கெனவே கிடைத்துவந்த குடிநீர் வசதி மேலும் மேன்மையுறப்பெற்றது. விருதுநகரில் கழிவு நீர் வெளியேற்றத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. சிவகங்கை நகர மக்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கும் பணி மிகவும் திறமை வாய்ந்த முறையில் வளர்ந்து முன்னேறி வருகிறது. ஸ்ரீ வில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர் வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. விருதுநகருக்குக் குடிநீர் அளிக்கும் புதிய திட்டமொன்றும் பரிசோதிக்கப் பட்டு வருகிறது.


எல்லோரும் கூடி...
இன்புற்றிருக்க!

திங்கள்மும் மாரி பெய்க ! திருவளம் வளர்க ! செங்கோல்
நன்கினி தரச னாள்க ! நாடெலாம் விளைக !—மற்றும்
எங்குள அறத்தினோரும் இனிதூழி வாழ்க !........

# எல்லோரும் கூடி . . .
# இன்புற்றிருக்க !

ஒற்றுமை வாழ்க்கைக்கு உறுதி. அதுபோல் கூட்டுறவு, தொழில்களுக்கு முதுகெலும்பாய் விளங்குகிறது. தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கும் வளம் பெறுவதற்கும் கூட்டுறவு சிறந்த முறையில் தொண்டாற்றுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கத்தால் தொழில்கள் வளர்ச்சியும் வளமும் பெற்றுள்ளன. இனி அந்த வரலாற்றை விரிவாகக் காண்போம்.

### கூட்டுறவு வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்கள்

திட்டகாலத்தில் இம்மாவட்டத்தில் கூட்டுறவு வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்களின் எண்ணிக்கை போற்றத் தகுந்த முறையில் பெருகியுள்ளது. 30-6-51-ல்

இம்மாவட்டத்தில் 530 சங்கங்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை 31-3-56-ல் 612 ஆகப் பெருகியுள்ளது அதைப் போல் பங்கு முதல் தொகையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் திட்டகாலத்தில் அதிகரித்துள்ளன. 30-6-51-ல் பங்கு முதல் தொகை ரூ. 6,96,586. 31-3-56-ல் ரூ. 37,18,687. 30-6-51-ல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 44,543. 31-3-56ல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 49,441. இம்மாவட்டத்தில் உள்ள மொத்தக் கிராமங்களில் சுமார் 50 சதவீதம் கிராமங்களுக்கு இச் சங்கங்கள் கடன் உதவி தந்து உதவுகின்றன. 1955-56-ம் ஆண்டில் மட்டும் (31-3-56 வரை) இச்சங்கங்சள் ரூ. 19,05,685 கடன் அளித்துள்ளது.

கிராமக்கடன் உதவிச் சங்கங்கள் கிராம மக்களுக்கு விதை, உரம், உழவு மாடுகள் முதலியன வாங்கவும், கிஸ்தி முதலிய வரிகள் கட்டவும், குடும்பச் செலவிற்கும் கடன் தந்து உதவுகின்றன. இவைகள் குறைந்த காலக் கடன் உதவிதான் (Short term Loan) அளிக்கின்றன. நடுத்தரக்காலக் கடன் உதவி (Medium term Loan) அளிப்பதற்காக 1955-ம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 2 கூட்டுறவு கிராம வங்கிகள் (Co-operative Rural Banks) தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவைகள் 27 கிராமங்களுக்கு நடுத்தரக் காலக் கடன் உதவி அளித்து வருகின்றன. 31-3-56-ல் இவைகளின் உறுப்பினர் எண்ணிக்கை 1,345. பங்கு முதல் தொகை ரூ. 63,200. 31-3-56 முடிய இக் கூட்டுறவுக் கிராம வாசிகள் ரூ. 62,902 வரை கடன் கொடுத்துள்ளது. இக் கூட்டுறவு கிராம வங்கிகளை மேற்பார்வையிடுவதற்கென்று இரண்டு மேனிலை மேற்பார்வையாளர்கள் (Senior Inspectors) நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது.

**கொள் முதல், விற்பனைச் சங்கங்கள்**

திட்டகாலத்திற்கு முன்பு 30-6-51-ல் இம்மாவட்டத்தில் 9 விற்பனைச் சங்கங்கள் (Sales Societies) இருந்தன. அவைகளின் உறுப்பாக 182 சங்கங்கள் இருந்தன. மொத்தம் 3610 பேர் அவற்றின் உறுப்பினர்களாக இருந்தனர். திட்டகாலத்தில் புதிய விற்பனைச் சங்கம் ஏதும் தோற்றுவிக்கப்படாவிட்டாலும் அவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உறுப்பாக இருந்த சங்கங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. 31-3-56-ல் 301 சங்கங்களும் 5081 உறுப்பினர்களும் இருந்தனர். உணவுப் பொருள்களின்மீது இச்சங்கங்கள் கடன் கொடுத்து உதவும். 30-6-51-ல் ரூ. 2,99,595 கடனைக் கொடுக்கப்பட்டது. 31-3-56 ல் ரூ. 3,06,432 கடனைக் கொடுக்கப்பட்டது. ரூ. 87,742 பெறுமானமுள்ள உரம், உழவுக் கருவிகள் முதலியவற்றை இச்சங்கங்கள் வழங்கியுள்ளன. ரூ. 16,800 மதிப்புள்ள 50 டன் வெங்காயத்தையும், ரூ 97,242-8-0 மதிப்புள்ள 129¾ டன் மிளகாயையும் இச் சங்கங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. கடன் உதவியையும் விற்பனையையும் இணைக்கும் கட்டுப்பாட்டுக் கடன் திட்டப்படி ஸ்ரீ வில்லிபுத்தூர் உகந்தா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 458 உறுப்பினர்களுக்குப் பருத்தியின்பேரில் ரூ. 68,840-ம் மிளகாயின் பேரில் ரூ. 46,650-ம் கடன் கொடுத்துள்ளன.

பருத்தி பொறுக்கு விதைகளை அப்பகுதியில் உள்ளவர்கள் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்ரீ வில்லிபுத்தூர் உகந்தா பருத்தி உற்பத்தியாளர் விற்பனைச்சங்கத்திற்கு அரசாங்கம் 1955-ம் ஆண்டிலிருந்து பருத்தி பொறுக்கு விதைகளை வழங்கும் உரிமை

களை அளித்தது. அத்துடன் அச்சங்கத்தார்க்கு உதவி அளிப்பதற்காக ஒரு மேற்பார்வையாளரும், சில வேளாண்மைத் துறை ஊழியர்களும் நியமிக்கப்பட்டனர். இத்திட்டப்படி இந்தச் சங்கம் 31-3-56 முதல் 1081 மூட்டை பருத்திப் பொறுக்கு விதைகளை வழங்கியுள்ளது.

அருப்புக்கோட்டை விற்பனைச் சங்கம் தனது உறுப்பினர்களின் சார்பில் பருத்திக் கொட்டைகளை எடுக்கும் பணியை மேற்கொண்டது. விதை எடுக்கப்பட்ட பருத்தியின் பெறுமானம் ரூ. 1,99,380. விதை எடுப்பதற்கான கூலி ரூ. 7,514.

**கிடங்குகள் கட்டுதல்**

31-3-56க்குள் திட்டகாலத்தில் 4 கிராமக் கடன் உதவிச் சங்கங்களுக்குக் கிடங்குகள் கட்டப்பட்டன. 3 கிராமக் கடன் உதவிச் சங்கங்களுக்கு அதற்காக அரசாங்கம் ரூ. 9,000 கடன் உதவி செய்துள்ளது. பரமக்குடி விற்பனைச் சங்கத்திற்காக ரூ. 10,000 செலவில் ஒரு கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. இதில் பாதியை அரசாங்கம் பொருள் உதவியாக (Subsidy) அளித்துள்ளது. எஞ்சிய பாதியை உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

**பால் பண்ணைகளும் பால் வழங்கலும்**

30-6-51-ல் இம்மாவட்டத்தில் 15 பால் வழங்கும் சங்கங்கள் இருந்தன. அவர்கள் இட்ட பங்குமுதல் ரூ. 51,494. அவற்றில் 3684 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். 31-3-56க்குள் மேலும் 3 சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 18 சங்கங்களில் மொத்த உறுப்பினர்களின் எண்



" குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் "

ணிக்கை, பங்கு முதல் முறையே 5,409, ரூ. 68,246. 1955-56-ல் (31-3-56 முடிய) அரசாங்கம் இச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 18,400 வரையில் கடன் உதவி செய்துள்ளது. கறவை மாடுகள் வாங்குவதற்காக அவ்வாறு அரசாங்கம் கடன் உதவி செய்துள்ளது.

காரைக்குடி பால் வழங்கும் சங்கத்தின் பால் வற்றிப் போன மாடுகளின் தீவனத்திற்காக அரசாங்கம் பொருள் உதவி செய்துள்ளது. இப் பகுதியில் மாடுகளுக்குக் குடிப்பதற்கு நீர் வசதியும் மேய்ச்சல் வெளியும் அமைப்பதற்கு ரூ. 1300 வழங்கப்பட்டுள்ளன.

**வீடுகட்டும் சங்கங்கள்**

இம்மாவட்டத்தில் 30-6-51-ல் 5 வீடுகட்டும் சங்கங்களும், 2 கட்டிடச் சங்கங்களும், 2 கிராம வீடுகட்டும் சங்

கங்களும் இருந்தன. 1085 பேர் இவைகளில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்கள் இட்ட பங்கு முதல் ரூ. 21,433. 31-3-56க்குள் மேலும் 10 பலவகையான சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**நகர வீடுகட்டும் சங்கங்கள்**

31-3-56 முடிய இம்மாவட்டத்தில் மொத்தம் 13 நகர வீடுகட்டும் சங்கங்கள் உள்ளன.

**சாதாரண வீடுகட்டும் சங்கங்கள்**

31-3-56 வரை இங்கு 7 சங்கங்கள் உள்ளன. அவைகளில் 4 அண்மையில் அமைக்கப்பட்டவை. எஞ்சிய மூன்றில் 2 சங்கங்கள் 21 வீடுகளைக் கட்டியுள்ளது. மூன்றுவதான ராஜபாளையம் நகரக் கட்டிடச் சங்கம் 28-6-55 அன்று அமைக்கப்பட்டது. 33 பேர் இதில் உறுப்பினர்கள். பங்கு முதல் ரூ. 22,077. குறைந்த வருவாய் உடையோருக்கு வீடு கட்டி அளிக்கும் திட்டப்படி இச் சங்கத்திற்கு ரூ. 10,000 வரை அரசாங்கம் கடன் கொடுத்துள்ளது.

**காரைக்குடி வீடுகட்டும் சங்கம்**

209 பேர் இச்சங்கத்தின் உறுப்பினர்கள். பங்கு முதல் ரூ. 99,290. 1955-56-ல் (30-3-56 முடிய) அரசாங்கம் ரூ. 12,700 இச் சங்கத்திற்குக் கடன் உதவியாக அளித்துள்ளது. ரூ. 7,05,489 செலவில் இச்சங்கம் 93 வீடுகளைக் கட்டியுள்ளது.

**ராஜபாளையம் வீடுகட்டும் சங்கம்**

31-3-56 முடிய இச்சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 108. பங்குமுதல் ரூ. 1,14,000. இச் சங்கம் ரூ. 63,388 க்கு 32·70 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளது.

4,11,559 ரூபாய் செலவில் 50 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 4 வீடுகளில் கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. குடியிருப்பின் பொது வசதிகளுக்காக இச்சங்கம் ரூ. 46,157 செலவிட்டுள்ளது.

1955-56-ல் இச் சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 12,800 கடன் கொடுத்துள்ளது.

### காரைக்குடி அழகப்பச் செட்டியார் கல்லூரியில் வேலை பார்ப்போருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டும் சங்கம்

31-3-56 முடிய இச் சங்கத்தில் 120 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். பங்கு முதல் ரூ. 26,000. 16 'பி' வகுப்பு வீடுகளைக் கட்டுவதற்காக இச் சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 92,800 கடன் கொடுத்துள்ளது.

இச் சங்கம் இதுவரை 5 வீடுகளைக் கட்டி முடித்து விட்டது. 3 வீடுகளில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 8 வீடுகளுக்காக வாணம் தோண்டப்பட்டுள்ளது.

### சிவகாசி கார்னேஷன் லிதோ தொழிலாளர் வீடுகட்டும் சங்கம்

இச்சங்கம் 10-2-56-ல் அமைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்காக 50 வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 1,13,750. அரசாங்கம் இதில் 25 சத வீதத்தைப் பொருள் உதவியாகவும் (Subsidy) 50 சத வீதத்தைக் கடன் உதவியாகவும் அளிக்கும் எஞ்சியுள்ள 25 சத வீதத்தை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர்.

### கிராம வீடுகட்டும் சங்கங்கள்

31-3-56 முடிய 6 கிராம வீடுகட்டும் சங்கங்கள் இருந்தன. அவைகளில் 3 அண்மையில் அமைக்கப்பட்டவை. ஒரு சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 8,000 கடனைக் கொடுத்துள்ளது. இதுவரை 2 வீடுகள் கட்டப்படுள்ளன.

### நெசவாளர் சங்கங்கள்

திட்ட காலத்திற்கு முன்பு (30-6-51-ல்) 36 நெசவாளர் சங்கங்கள் இருந்தன. 982 பேர் அதன் உறுப்பினர்களாக இருந்தனர். பங்கு மூலதனம் ரூபாய் 4,36,445. 1950-51-ல் ரூபாய் 68,57,495 பெறுமான துணிகள் விற்கப்பட்டன. அரசாங்கம் கைத்தறித் தொழிலை முன்னேறச் செய்வதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் பேரில் நெசவாளர் சங்கம் வளர்ச்சி அடைந்தன. 1955-56-ல் நெசவாளர் சங்கங்களில் எண்ணிக்கை 68 ஆகப் பெருகியது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முதல் தொகையும் முறையே 14,348. ரூபாய் 5,79,725 என்ற அளவில் உயர்ந்துள்ளன. 1955-56-ல் விற்கப்பட்ட துணியின் மதிப்பு ரூபாய் 72,98,403. செஸ் திட்டப்படி ரூபாய் 89,982 இச்சங்கங்களுக்கு வட்டியின்றி கடனைக் கொடுக்கப்பட்டது. கைத்தறித் துணி விற்பனையில் ஏற்பட்ட தள்ளுபடிக்காக அரசாங்கம் ரூபாய் 6,68,973 பொருளுதவி செய்துள்ளது.

### குடிசைத் தொழிற் சங்கங்கள்

30-6-51-ல் இம் மாவட்டத்தில் 9 குடிசைத் தொழிற் சங்கங்கள் இருந்தன. 1085 பேர் அவைகளில் உறுப்பினர்களாக இருந்தனர். பங்கு முதல் ரூபாய் 21,433. ரூபாய் 1,11,644-க்கு குடிசைத் தொழில் பொருகள் விற்பனையாகின. 1954-55-க்குள் மேலும் 2 சங்கங்கள் தோற்று

விக்கப்பட்டன. இந்த 11 சங்கங்களும் ரூபாய் 51,588க்குப் பொருள்களை உற்பத்தி செய்துள்ளன.

### ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள்

கடந்த ஐந்தாண்டுகளில் 14 சேமிப்புச் சங்கங்கள் (Savings Societies) 11 தொழிலாளர் சங்கங்கள், 20 மீன் பிடிப்போர் சங்கங்கள், 1 சுகாதாரச் சங்கம், 1 நகர வங்கி, ஒரு வெல்ல விற்பனைச் சங்கம், உழவர் முன்னேற்றச் சங்கம் முதலியன அமைக்கப் பட்டுள்ளன.

### முன்னாள் கள் இறக்குவோர்க்கு உதவி

மது விலக்கு நடைமுறைக்கு வந்த பிறகு இம் மாவட்டத்தைச் சேர்ந்த 25,000 கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு வேலை இல்லா நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு வேலையும் வாழ்க்கை வசதியும் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் பல ஆக்க வேலைகளைச் செய்துள்ளது. கூட்டுறவு வெல்ல உற்பத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவைகளில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பதனீர் இறக்குவதற்கு உரிமை கொடுக்கப்பட்டது.

கடந்த ஐந்தாண்டிற்குள் 13 வெல்ல உற்பத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. அதனால் இங்குள்ள வெல்ல உற்பத்திச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 172 ஆக உயர்ந்துள்ளது. அவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 22,257. பங்கு முதல் தொகை ரூபாய் 40,711.

வெல்லம் உற்பத்தி செய்வதற்காக 1950-51 ஆம் ஆண்டில் 3,615 பேர்களுக்கு லைசென்ஸ்களும், 2,312 பர்மிட்டுகளும் வழங்கப்பட்டன. 1954-55-ஆம் ஆண்டில்



பனைவெல்லம் தயாரித்தல்

இவற்றின் எண்ணிக்கை முறையே 9,928, 3,417 என்ற அளவில் அதிகரித்துள்ளது. 1950-51-ல் முன்னாள் கள் இறக்குவோரால் உற்பத்தி செய்யப்பட்ட வெல்லத்தின் அளவு 24,964 மணங்குகள். அவற்றின் பண மதிப்பு ரூபாய் 1,57,018. திட்ட காலத்தில் அதிகமாக வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. ரூபாய் 1,92,862 மதிப்புள்ள 60,477 மணங்கு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. அவற்றின் விற்பனை 1950-51 ல் ரூபாய் 1,87,696 லிருந்து 1954-55 ல் ரூபாய் 21,48,020 ஆக உயர்ந்துள்ளது. திட்ட காலத்தில் மேலும் பலர் முன்னாள் கள் இறக்குவோர் சங்கங்களின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இதனால் 1954-55 ல் ரூபாய் 1,60,252 பெறுமானமுள்ள 1,54,95,257 படி பதனீர் விற்பனை செய்யப்பட்டது.

முன்னாள் கள் இறக்குவோர், வெல்ல உற்பத்தியை மேம்பட்ட முறையில் செய்வதற்கான வழியைக் கற்றுக் கொள்வதற்காக 2 பனைவெல்லம் உற்பத்திப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 507 முன்னாள் கள் இறக்குவோர்க்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் ரூபாய் 1,82,578 பெறுமானமுள்ள 38,152 மணங்கு பனை வெல்லத்தை உற்பத்தி செய்துள்ளனர். மேலும் அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பனை வெல்ல உற்பத்திக் கருவிகளை அரசாங்கம் அவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. திட்ட காலத்தில் அவர்களுக்கு 72 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 153 கருவிகள் பாதி விலைக்கு விற்கப்பட்டன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தை நல்ல முறையில் விற்பனை செய்யும் நோக்கத்துடன் ராமநாதபுரம் மாவட்டத்தில் பனை வெல்ல விற்பனைச் சங்கம் என்ற ஒரு சங்கம் 1954-ல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைமையகம் மதுரை. இச்சங்கத்தில் 125 வெல்ல உற்பத்திச் சங்கங்களும் 17 தனிப்பட்டோர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பங்கு முதல் தொகை ரூபாய் 2.,825. இச்சங்கத்திற்குக் கண்ணிறைஞ்சபுரத்தில் ஒரு கிளைச்சங்கமும் முதுகுளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த சாயல்குடியில் ஒரு டிப்போவும் உள்ளன. இச்சங்கம் ரூபாய் 99,957 பெறுமானமுள்ள 25,001 மணங்கு வெல்ல உற்பத்தயாளரிடமிருந்து வாங்கி, ரூபாய் 1,10,575 பெறுமான முள்ள 23,659 மணங்கு வெல்லம் விற்றது. முன்னாள் கள் இறக்குவோர்க்குப் பனைவெல்ல உற்பத்தியைத் தவிரப்



காய்ந்த ஓலை...

பல பண்ணைகள், வீடுகட்டும் சங்கங்கள் மூலமாகத் தொழில் வசதி செய்து தரப்பட்டன. முன்னாள் கள் இறக்குவோர், கள் குடிப்பதில் பழக்கம் உள்ளவர்கள், ஹரிஜனங்கள் முதலியவர்களுக்குக் குடிசைத் தொழிலில் வேலை கொடுக்கும் நோக்கத்துடன் ராமநாதபுரத்தில் பனையோலைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் ராமநாதபுரத்தில் பணியாற்றி வருகிறது. 50 ஹரிஜனங்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். அவர்கள் இட்ட முதல் தொகை ரூபாய் 116. அரசாங்கம் இச்சங்கத்திற்காக ரூபாய் ஆயிரம் வரை பண உதவி அளித்துள்ளது. இச்சங்கம் பனை ஓலையில் பயன்

உள்ள பொருள்களையும் அழகுள்ள பொருள்களையும் உற்பத்தி செய்து தருகிறது. இந்தப் பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பள்டுள்ளது. ஒரு மேனிலை மேற்பார்வையாளர் இச்சங்கத்தை மேற்பார்வையிட்டு வருகிறார். அவருக்கு ஆகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. இச்சங்கம், மதுரை, விருதுநகர், சிவகாசி ஆகிய இடங்களில் நடைபெற்ற கண்காட்சி சாலைகளில் பங்கு எடுத்துக்கொண்டது.

...கலைப்பொருளாகி



## கிராமச் சங்கங்கள்

இந்த மாவட்டத்தில் 60 கிராமச் சங்ககங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல கிராமச் சங்கங்களில் படிப்பகங்களும் நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூல் நிலையத்திற்கும் ரூபாய் 40 வீதம் 8 கிராமச் சங்கங்களுக்கு அரசாங்கம் பண உதவி அளிக்கிறது.

# முன்னேற்றப் . . .
# பாதையிலே !

## இரண்டாவது திட்டம்

உழவும், தொழிலும் ஒன்றி வளர்ந்தால்தான் நாடும் நன்னிலை அடைய முடியும். மக்களின் வாழ்வும் மடிமையும், பிணியும் இன்றி மாண்புடன் திகழும். எனவே தான் வேளாண்மையோடு, ஆலைகள் பலவற்றையும் நிறுவி, தொழிலை வளர்க்க வேண்டும் என்னும் பெருநோக்கத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பெருந்தொழில்களை நாம் வளர்க்க எண்ணும்பொழுது அதனால் அடையும் பயன் பொது மக்கள் அனைவரையும் சாரவேண்டும். இல்லெனில் பெரும் தொழிலால் ஒரு சிலர் ஆடம்பரமாக வாழவும், பலர் வறுமையால் நலிந்து வாடவும் நேரிடும். இப்பேருண்மையை உணர்ந்த நம் அரசாங்கமும், சோஷியலிஸ முறையில் அரசாங்கத்தை நடத்தத் தீர்மானித்தது. அந் நெறியிலேயே செயல்களையும் ஆற்றி வருகிறது.

பொது மக்களின் வளமான வாழ்வை எண்ணியே இரண்டாவது திட்டத்தின் பொது நோக்கங்கள் வகுக்கப்

பட்டன. கணிசமான அளவுக்குத் தேசிய வருமானத்தைப் பெருக்கி அதன்மூலம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி காணப்பட்டுள்ளது. அடிப்படையான பெருந் தொழிலுக்கு ஆக்கங் கொடுத்து நாட்டை விரைவில் தொழில்மயமாக்கவேண்டும். இவ்வாறு செய்வதால், நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவுக்குக் குறையும். வேலை செய்வோருக்கும் எண்ணரிய புதிய புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பொருளாதாரத் துறையிலே தற்சமயம் இருக்கும் மலைக்கும், மடுவுக்குமிடையே உள்ள வேற்றுமையும் குறையும்.

இவையெல்லாம் நம்முடைய குறிக்கோளை அடைவதற்குரிய சில வழிகளாகும். சோஷியலிஸ சமுதாயத்தை உருவாக்குவதிலே இந்த வழிகள் நம்மை நீண்ட தூரம் அழைத்துச் செல்லுமென்பதில் ஐயம் இல்லை. ஆனால் நம்முடைய இறுதி லட்சியம் அதுதான். அந்த அமைப்பு முறையை நாம் அமைத்தால் ஒழிய ஏழைகளுக்கு இனிய வாழ்வில்லை என்பதையும் அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. எனவே அத்துறையில் முழுவெற்றி அடையும் வரை அமைதியின்றிப் பல ஆக்கப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தளர்வின்றித் திட்டங்களை வெற்றியோடு முடிக்கவேண்டும்.

நாட்டின் செல்வ வளம் ஓர் இடத்திலேயே குவிந்து விடாமல் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக இருக்கும் வண்ணம் நாட்டின் பொருளாதார நிலை அமைக்கப்படும். அதற்கேற்ற வண்ணம் தொழில்களைப் பரவலாக அமைக்கும்படித் திட்டக் குழுவும் வற்புறுத்தி உள்ளது.

பின் தங்கிய பகுதிகளை முதலில் கவனித்து அவைகள் வளம் பெறும் வகையில் ஆவன செய்யப்படும்.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின்படி நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 183 கோடி ரூபாய் ஆகும். இத்தொகையைக் கொண்டு நாம் கீழ்க்கண்ட வாறு நம் மாநிலத்தை வளம்படுத்தத் திட்டங்கள் வகுத்துள்ளோம் :—

| துறைகள் | | ரூபாய் (லட்சக் கணக்கில்) |
|---|---|---|
| மின்சாரம் | ... | 5,759·80 |
| கிராம வளர்ச்சி | ... | 1,710·00 |
| நீர்ப்பாசனம் | ... | 1,365·20 |
| குடிசைத் தொழில்கள் | ... | 1,425·00 |
| கல்வி (தொழிற் கல்வியும் சேர்த்து) | ... | 1,425·00 |
| மருத்துவம் | .... | 879·40 |
| வேளாண்மை | ... | 750·50 |
| சுகாதாரம் | ... | 722·70 |
| பாதைகள் | .... | 807·50 |
| பின் தங்கிய வகுப்புக்களின் முன்னேற்றம் | ... | 599·50 |
| மனையிடங்கள் | ... | 341·70 |
| கூட்டுறவு | .... | 292·90 |
| கால்நடை வளர்ச்சி | .... | 236·00 |
| காடுகள் | ... | 146·20 |
| பால் பண்ணை | ... | 142·60 |
| மீன் துறை | .... | 124·40 |
| மண் வளம் பேணுதல் (Soil Conservation) | | 118·70 |
| நகர் அமைப்புத் திட்டம் | .... | 95·00 |
| நடுத்தரத் தொழில்கள் (Medium Industries) | .... | 95·00 |

V2l196 N51
N51

| துறைகள் | | ரூபாய் (லட்சக் கணக்கில்) |
|---|---|---|
| உள்ளூர் ஆட்சி மன்றங்கள் | .... | 95·00 |
| சமுதாய நலன் | ... | 86·25 |
| ஒலிபரப்பு | ... | 28·50 |
| புள்ளி விவரத் திட்டம் | .... | 19·30 |
| விளம்பரம் | ... | 14·30 |
| உழைப்பாளர் நலன் | .... | 11·40 |
| இதர வகைகள் | ... | 14·20 |
| மொத்தம் | .... | 17,306·05 |

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிலே நம்முடைய நாடு அகத்தான, இனிய மாறுதலை அடையும். உழவும், தொழிலும் உன்னத நிலையிலே விளங்கும். நாட்டின் வருமானம் நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு உயர்ந்திருக்கும். கோடிப் பேருக்குமேல் புதிய துறையிலே பணியாற்றுவார்கள். அதனால் மக்களின் வாழ்வும் பன் மடங்கு வளம் பெறும்.

இந் நன்னிலையை அடைய மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றி அதுவே மக்களின் வெற்றி. அதுவே வாழ்க்கையின் வெற்றி. இவ்வுண்மையை மறக்காமல் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக! அப்பால் வெற்றி பெறுவோம் என்பதிலே தினையளவும் ஐயமில்லை.

108142

சாந்தி பிரஸ், சென்னை-1

